உ

குன்றக்குடி (எ)

மயூரகிரி உலா

ஆசிரியர்

கோநகர் (கோனாபட்டு)

சு. மு. இராம. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்

******



உரைவிளக்கம்

குன்றக்குடி ஆதீனப்புலவர்.

வித்துவான். க. கதிரேசன் எம்.ஏ; பிஎட்

பூவாளூர் 621 712

உ

குன்றக்குடி(எ)

மயூரகிரி நாதர் உலா

ஆசிரியர்

கோநகர்(எ) கோனாபட்டு

சு. மு. இராம. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்

உரைவிளக்கம்

குன்றக்குடி ஆதீனப்புலவர், தமிழாகரர்,

சைவத் தமிழ்மணி, சைவத் தமிழறிஞர், சித்தாந்தச் செல்வர்,

வித்துவான் க. கதிரேசன், எம்.ஏ; பி;எட்

பூவாளூர் 621 712. பேசி : 09865193754

உள்ளுறை

1. தோரணவாயில்
2. வாழ்த்துரை, மதிப்புரை .

அ. திருக்கயிலாயபரம்பரை குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 46 ஆம் குருமகாசந்நிதானம் திருப்பெருந்திரு தெய்வ சிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் (முனைவர். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

ஆ. தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருச்சிராப்பள்ளி ஸ்ரீ மௌனமடம், திருவையாறு அருள்தரு அறம்வளர்த்த நாயகி உடனாய ஐயாறப்பர் திருக்கோயில் கட்டளைவிசாரணை முனைவர். ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (இவர்கள் இன்று தருமைஆதீனம் சின்ன பண்டார சந்நிதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள்)

இ, தமிழாகரர், சித்தாந்தச்செம்மணி, சிவஞானக்கலாநிதி, முனைவர். பழ. முத்தப்பன் அவர்கள். திருச்சிராப்பள்ளி

3. அந்நாளைய சிறப்புப் பாயிரங்கள்

4. நூல் ஆராய்ச்சி

5. நூல் - மூலபாடம்

6. குறிப்புரை, பொழிப்புரை, விளக்கம்

****

உ

தோரண வாயில்

''ஊரொடு தோற்றமும் உரித்தெனமொழிப

வழக்கொடு சிவணிய வகைமை யான'' தொல்.புறத்திணை.83.

என்ற நூற்பா முற்காலத்தில் அரசர்களது உலாவைக் குறிப்பதாயினும் காலப்போக்கில் இறைவனுக்குரிய தாகவும்நெகிழ்ந்து அமைந்தது.இவ்வகையில் தமிழில் அமைந்த முதல்உலா, சமயகுரவருள் ஒருவரான சுந்தரரின் ஆருயிர்த்தோழர் சேரமான் பெருமாள் நாயனார் அருளிய திருக்கயிலாய ஞானவுலாவாகும்.

உலாவருகின்ற மரபு ஆண்பாலருக்கே உரிதாய் பெண்பாலாரை ஒதுக்கிய தமிழ்ப் பண்பாடு காரணமாக, உலாவில் காமுறுவோர் பெண்பாலராயினர்.தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய இளம்பூரணரும்,நச்சினார்க்கினியரும்;1. இவ்வுலாக்காண்போர் பேதைமுதல் பேரிளம்பெண் ஈறான எழுபருவமாதர்,2. இவர்கள் பொதுமகளிராவர் 3. இவர்கள் உலாத்தலைவன் மேல் கொண்ட காமம், பிறர்தெளிவாக அறியுமாறு தம் மெய்ப்பாட்டாலும் சொல்லாலும் வெளிப்படையாக அமைந்த பக்குவிட்ட காமம் ஆகும்.4 இந்நூல் கலிவெண்பா யாப்பில் அமைவது என்று விளக்குவர்.

இவ்வகையிலானது இம்மயூரகிரி உலாநூல்.இம்மயூரகிரி என்பது இடவாகு பெயராய்க் குன்றக்குடி மயில்மலைக்கண் எழுந்தருளியுள்ள பேரருளாளனாகிய பெருமான் அருள்தரு சண்முகநாதப் பெருமானை–ஆறுமுக அப்பனைக் குறிக்கும்.பல்வகை நயங்களும் பாங்குறப் பொலியும் இந்நூலாசிரியர், குன்றக்குடிக்கு அண்மையிலுள்ளதும், கோநகர் என்று இந்நூலில் குறிப்பிடப் பெறுவதுமாகிய **கோனாபட்டு** ஆகிய ஊரினர் ஆவார். இதில் உள்ள பட்டு என்றசொல் ஊர் என்னும்பொருள் தருவதாகும்.இவ்வூரினரும், சிவபத்தி வாய்ந்தவரும்,சிவபெருமானின் திருப்பெயராகிய மாதேவன் என்பதை ஒல்லும்வாய் எல்லாம் சொல்லும் இனிய பண்பினரும்,இதனால் **''மகாதேவா''** என்று அனைவராலும் அங்நாளில் குறிப்பிடப் பெற்றவரும்,நல்லறிஞரும்,அறவாழ்வினருமாக விளங்கியவர் வள்ளல் சு.முருகப்ப செட்டியயார். இவர்க்குத் திருமகனாகிய **சு. மு.இராமசுப்பிரமணியன் செட்டியார்** தமது பதினெட்டாம்ஆண்டு நிறைவுக்கு அறிகுறியாக இயற்றியது இம்மயூரகிரி உலா நூல்.ஞான வர்க்கத்தவரும் நன்னூற் படிப்பினரும் நன்று நன்று என்றுபுகழும் இந்நூலை இயற்றிய இவர், கருவில் திருவமைந்த நற்குணசீலர், நயம்பெறு மொழியர், இலக்கணம் இலக்கியம் எழிலுறக் கற்றவர், சித்திரகவி வல்ல வித்தகர்,புலவர்கள் வியக்கும் சிகாமணி, சமயச் சொற்பொழிவில் சால்பு மிக்கவர்என்ற அரிய செய்திகள் இந்நூலுக்கு அமைந்துள்ள பதினைந்து சிறப்புப் பாயிரகள் தரும் குறிப்புகள் ஆகும். இச்சிறப்புப் பாயிரங்களும் இவ்வுரை நூலில் தரப் பெற்றுள்ளன. இளம்பெரு நல்லறிஞர் இயற்றிய இந்நூலினை, கற்றறிந்த பெருமக்களும்,பிறரும் சுவைக்கவும் படித்துமகிழவும் வாய்ப்பாகச் சந்திபிரித்த மூலபாடம்,குறிப்புரை,பொழிப்புரை, விளக்கம், இன்றியமையா இலக்கணக்குறிப்பு,அணி சுட்டல் என்றவாறு அமைத்துள்ளேன்.

உலாவரும் பெருமானைக் கண்டு காமுற்றவர்கள் பொதுமகளிரேயாயினும், அவர்களது மிக்ககாமமிடலை, தடுத்தற்கியலாத அவரவரின் மெய்ப்பாடுகளால் உணர்த்தி,சொல்வழிப் புலப்படுத்துதற்குரிய மீயுயர் காம நிலையை அவர்களின் செவிலியர்,தோழியர்மூலம் புலப்படுத்தும் தன்மை; பரத்தையர்மாட்டும் மகளிர் பண்பாடு பேணுதல் ஆகியன இவ்வாசிரியருடைய உயர்பண்பைக்காட்டுகின்றன.

முருகப்பெருமானாத் திருஞானசம்பந்தராகச் சிலஇடங்களில் இவர் கூறுவது, நம் சைவசமய மெய்ப்பொருளியலுக்குச் சற்றும் ஒவ்வாததாயினும்,அங்ஙனம் இவர் கூறியுள்ள காரணம் இவர்காலச் சூழலின் இறுக்கமே என்பது உணரத்தக்கது.

பங்குனி உத்தரப் பத்துநாள் திருவிழாவின் ஒன்பதாம் திருநாள் திருத்தேர். அன்று திருத்தேரில் பெருமான் எழுந்தருளி உலாவந்து அருள்பாலிப்பதைச் இந்நூல் நவில்கிறது.பேதை முதல் தெரிவை ஈறானோர் பெருமானைக் காமநோக்குடன் கண்டதால் அவர்கள் அவனது தோள்மாலை பெறாநிலையில் இறுதியில்–ஏழாவது பருவத்தளாகிய பேரிளம் பெண் தனது பக்திமேம்பாடு காரணமாகத் தேருடன் வீதிவலம் வந்து திருப்புகழ் பாடி, தன் கிளியைப் பெருமான் புகழ்சொல்லச்சொல்லிக் கேட்டு மகிழ்ந்து பெருமானின் தோள்மாலை பெற்றுக்களித்தது சிறப்புக்குரியது.

பிற உலாநூல்களைப் போலவே,இந்நூலும் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானின் அளப்பரிய பெருஞ்சிறப்புகளை முதலில் 77 கண்ணிகளில் இயம்பியபின், ஒன்பதாம் திருநாளன்று திருத்தேரில் பேருலாக் கொண்டருள நினைந்து திருப்பள்ளி எழுந்து,திருமஞ்சனமாடி,திருவாபரணம் திருமாலை புனைந்தபின்,பல்லியங்கள் முழங்க, நால்வர் திருமுறைகளும் திருப்புகழும் மிக்கொலிக்க,விண்ணவரும் மண்ணவரும் சூழ்ந்து போற்ற,இருபுறத்தும் இருமயிலாருடன் ஒருமயில் ஏறி, சமயகுரவர் நால்வர் உள்ளிட்ட நாயன்மார்களும்,முப்பத்து முக்கோடி தேவர்களும்,அரசர்களும் பிறரும் தத்தம் ஊர்திகளில் புடைசூழ, பெருமான் திருத்தேரில் எழுந்தருள்வதைத் திருச்சின்னம் ஆரவாரித்து அறிவிக்கத் திருவுலாமேற் கொண்டான்.

திருத்தேரில் எழுந்தருளும் பெருமானை வணங்கியும்,போற்றியும்,அவனது திருமுடி முதல் திருவடிவரையிலான வரையற்ற பேரெழிலைக் கண்ணாரக் கண்டுகளிப்பாரும், அவன்பேரெழிலில் மனம் பறிகொடுத்து மயங்கித் தம் நிலைஇழப்பாருமாகப் பெருங்குழாம் கூடியது.இக்குழாத்தவரான பேதை முதல் பேரிளம்பெண் ஈறான ஏழ்பருவமாதர் தத்தம் நிலையில் காமத்துட்பட்ட மனநிலை, மெய்ப்பாடு, வினா,இவர்களின் பொருட்டுச் செவிலியர், தாயர் பரிந்துரையுடன்,பேரிளம்பெண் பெருமானின் தோள்மாலை பெற்ற பெருஞ் சிறப்புடன் உலா நிறைவு பெறுகிறது.

இடையிடையே உவமை,பல்பொருள் உவமை, உருவகம் முதலிய அணிகள் ஒளிர, மாதர்களின் அவ்வப் பருவத்துக்குரியவாறு அமைந்த கேசாதிபாத வருணனை, பெருமானின் கேசாதி பாத வருணனை, அணிகலவகை, அருள்தரு சண்முக நாதன்

பற்றிய எண்ணலங்காரச் சிறப்பு அவனது திருத்தசாங்கம் முதலிய மணங்கமழ்வது இவ்வுலா நூல்.

திருமடம், சமயம் சமுதாயம், சொற்பொழிவு எழுத்து ஆகிய தமது பணிநெருக்கடிகளுக்கிடையே இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள திருக்கயிலாய பரம்பரை குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 46 ஆவது குருமகா சந்நிதானம் திருப்பெருந்திரு தெய்வசிகாமணி பொன்னம்பலதேசிக பரமாசாரிய சுவாமிகள் - **முனைவர். தவத்திருகுன்றக்குடிபொன்னம்பலஅடிகளார்**அவர்களின்பொன்னார் திருவடிகளை வணங்கிமகிழ்கிறேன்.

தமது கட்டளைவிசாரணை, சமயச்சொற்பொழிவு, எழுத்துப் பணிகளுக்கிடையே இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிச்சிறப்பித்துள்ள **தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருச்ச்ராப்பள்ளி மௌன மடம், திருவையாறு அறம்வளர்த்த நாயகி உடனாய ஐயாறப்பர் திருக்கோயில் ஆகியவற்றின் முன்னாள் கட்டவிசாரணைத் தம்பிரான் சுவாமிகள், இந்நாள் தருமை ஆதீனம் சின்ன பண்டாரசந்நிதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள்** அவர்களின் பொன்னார் திருவடிகளை வணங்கி மகிழ்கிறேன்.

இந்நூலுக்கு மதிப்புரை வழங்கிச்சிறப்பித்துள்ள திருச்சிராப்பள்ளி அருமை நண்பர் சித்தாந்தச்செம்மணி,சிவஞானக்கலாநிதி, முனைவர் **பழ.முத்தப்பனார்** அவர்களுக்கு என்வணக்கத்தைத் தெரிவித்து மகிழ்கிறேன்

என்றும் வேண்டும் இன்பஅன்பு
க. கதிரேசன்
குன்றக்குடி ஆதீனப்புலவர்
பூவாளூர். 621 712 ,

உ
சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
தொ : 04577 -264227

நமது குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனப்புலவர் வித்துவான் க.கதிரேசன் அவர்கள், " மயூரகிரி உலா "வில் அருள்தரு சண்முகநாதப் பெருமான் பற்றியும், பக்திஉலா பற்றியும் விளக்கவுரை தந்திருப்பது மனமகிழ்வைத் தருகின்றது.

காலம் அறிந்து கருணை புரிவான் குன்றக்குடிக் கடவுள் சண்முகநாதப் பெருமான்! தொழுதகை துன்பம் துடைக்கும் தோழனாக, அழுத விழி துடைத்து ஆறுதல் அளிக்கும் ஆறுமுக அப்பனாக அருள்புரிகிறான்!

கோனாபட்டு ஊரைச்சார்ந்த இளம்பெரும்நல்லறிஞர் கோனாபட்டு சு.மு. இராமசுப்பிரமணியன் செட்டியார், தமது 18 ஆம் ஆண்டு நிறைவுக்குப் பாடிய அருந்தமிழ்ப் பக்தி உலாவினை அனைவரும் படிக்கும்வண்ணம் அழகியதமிழில் பாடியிருப்பது வரவேற்புக்குரியது. காலம் அறிந்து கருணை புரியும் குமரக்கடவுளைப் பாடியிருப்பது மகிழ்வுக்குரியது.

அருள்நிறைந்த சண்முகநாதன் உலா (குன்றக்குடி என்னும் மயூரகிரி உலா) விரைவில் வெளிவர, எல்லாம்வல்ல முருகப்பெருமானை - சண்முகநாதப் பெருமானைப் போற்றி வணங்கித் துதித்துப் பாடி அனுதினமும் தமிழாய்வாழ்ந்துகொண்டிருக்கும் ஆதீனப்புலவர் ஐயா கதிரேசன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்

என்றும் வேண்டும் இன்ப அன்பு

(பொன்னம்பல அடிகளார்)

---

* திருக்குறளே நமது பொதுமறை * திருமுறைகளே நமது மறை *

உ

குருபாதம்

தந்தை தாயும்நீ; என்னுயிர்த் துணையும் நீ
சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவும் நீ; உனையல்லால்
மற்றொரு துணை காணேன்
அந்தம் ஆதியும் அளப்பரும் சோதியே!
ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவன்எனும்
சிரகிரிப் பெருமானே!

ஸ்ரீ தாயுமான சுவாமிகள்

முனைவர். ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை
தருமையாதீனம் ஸ்ரீ மௌனமடம் - மலைக்கோட்டை
திருச்சிராப்பள்ளி - 620 002. போன் : 0431 - 2702472

குன்றக்குடியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்தரு சண்முகநாதப் பெருமான் மீது பாடப்பெற்ற " மயூரகிரி உலா " சிறப்புடையது. இதனைப் பாடியவர், கோனாபட்டு, வள்ளல் சு. முருகப்ப செட்டியார் திருமகன் சு. மு. இராம.சுப்பிரமணியன் செட்டியார் தனது 18 வயதிலேயே மிகச்சிறந்த கவிஞர் என்பதை அந்நாளில் பலஆய்வாளர்கள் அளித்த சிறப்புப்பாயிரத்தின் மூலம் அறியலாம்.

மயூரகிரி உலாவிற்குக் குறிப்புரை , பொழிப்புரை, இலக்கணக்குறிப்பு முதலியவற்றை நமதுபாராட்டுதலுக்குரிய பூவாளூர் வித்வான் க. கதிரேசன் எழுதி வெளியிடுவது சிறப்புக்குரியது .

உலாஇலக்கியத்துக்கு முன்னோடியாகி, முதன்முதலில் தோன்றியதால் ஆதிஉலா என்று போற்றப்பெறுவது சேரமான் பெருமாள் அருளிச்செய்த "திருக்கயிலாய ஞான உலா" ஆகும். பல உலாஇலக்கியங்கள் கிடைத்தாலும், மரபுவழி, சமயநெறியில் வரும்"மயூரகிரி உலா" சிறப்புடையது.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என ஏழுபருவப்பெண்கள், தலைவன்மீது கொண்டகாமத்தை வெளிப்படுத்துவதாக அமைத்துப்பாடுவது உலாவாகும்.

மன்னு தடாதகையின் வான்வயிறு - பன்னுகரு

உற்றதுபோல் ஆக உயர்சோம வாரத்தில் ----------

ஏதம்அற்ற(து) என்ன எழுந்தவன்காண் “ (கண்ணி 7 - 9)

என்ற கண்ணிக்கு, “ பெம்மான் முருகன் பிறவான் இறவான் “ ஆதலின்,
“தடாதகைப்பிராட்டியின் வான் வயிறு கருவுற்றதுபோலாக “ என்றும், முருகனை “ எழுந்தவன் “ என்றும் மரபுதிரியாது கூறினார் எனக்குறிப்பு எழுதியது சிறப்புக்குரியது .

“காழி நகரில் கவுணியர்க்கு ஞானப்பால்

தாழி அளித்தநற் றாய்அணைந்து “

என்ற கண்ணிக்கு” முருகனுக்கோ, விநாயகருக்கோ தாய்ப்பால் தராமையால் அவள் அவர்களுக்குச் செவிலித்தாயே , திருஞானசம்பந்தருக்குத் தாய்ப்பால் வழங்கியதால் அவருக்கு அவள் “ நற்றாய் “ என்றார் -என விளக்கம் அளித்திருப்பது சிறப்பாகும்.

“கரடமிகு

வள்ளல் உதவிசெய வள்ளி யினைமணந்தோன் “

என்ற கண்ணிக்குப் பலமேற்கோள் காட்டியுள்ளார்.. இது “ தம்பிதனக் காகவனத் தணைவோனே ” என்ற திருப்புகழ் வரியைச் சிந்திக்க வைக்கிறது .

“கந்தபுரா ணம்பாடும் கச்சியப்பதேசிகருக்கு ,

முந்தும் அடியெடுத்து முன்அருளி “

என்ற கண்ணிக்கு , விளக்கவரலாறு சுட்டிக்காட்டி , “திகடசக்கரம்” என்பதற்குரிய இலக்கணக்குறிப்புக்கு, வீரசோழியத்தைக் காட்டிய வரலாறு சுட்டப்பெறுகிறது. மேலும் இதனை; பெண்ணாகடத்தில் திருஞானசம்பந்தர், அருளிய
“ துகடீர் கடந்தைத் தடம்கோ யில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே “
“ திகடரு சடைமுடி அடிகள்தம் வளநகர் சேறையே “

என்பன சிந்திக்க வைக்கின்றன. (துகடீர் = துகள்+ தீர் ; திகடரு = திகழ்+தரு)

ஆனைந்து = பஞ்சகவ்வியம் என்பர். அவையாவன: பால் தயிர் நெய் கோமயம் கோசலம் என்று எழுதி, இவற்றில் நம்அருளாளர்கள் அனைவரும் பால் தயிர் நெய் என்பனவற்றை வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளனரேதவிர, எந்தஓரிடத்திலும் கோமயம் கோசலம்

இரண்டையும் குறிப்பிடாதது சிந்தனைக்குரியது . அவர்கள் குறிப்பிடாமைக்குக் காரணம் என்ன? கொடுஞ்செயல் செய்தவர்களை ஊரவவர்க்கு அறிமுகப்படுத்தவும், அவர்களை அவமானப்படுத்துவதன் மூலம்தண்டிக்கவும்,பசுவின்கழிவாகிய கோமயத்தைக் கோசலத்தில் கரைத்து அவர்கள் தலையில் ஊற்றச்சொல்வதுடன், ஊற்றவும் செய்வர். இவை இரண்டும் பிறரை அவமானப்படுத்த முன்நிற்பன. இறைவன் திருமுழுக்கில் வெண்ணெய் உண்டென்பதற்குத் திருஞானசம்பந்தரின்

"நல்வெணெய் விழுதுபெய்து ஆடுதிர் நாடொறும் "

(திருநெல்வெணைப் பதிகம் பா 1) என்பதைக் காட்டும்சிந்தனை சிறப்புக்குரியது .

நவகோள், நவமணி - தொகைக்குறிப்புகள். வாள்ஒளி - ஒருபொருட் பன்மொழி . கழல் - தானியாகுபெயர் . என்றும் உருத்திரர் ஆறைவர், ஒளி பன்னிருவர் , அட்டவசு , இருடியர் எழுவர் , வீரர் ஒன்பான் , எட்டுத்திக்கு , எழுமடவார் - தொகைக்குறிப்புகள் . களதமும் , ஏறும் , உவணமும் முதலியவற்றில் வருவன எண்ணும்மைகள் . விஞ்சையர் யோகர் சித்தர் மாமகரம் பூதர் சித்தர் முதலியனவாக வருவன எண்ணும்மைத் தொகைகள், பாலாழி ---- தொண்டர் - உவமையணி என இலக்கணக்குறிப்புகள் வழங்கி யுள்ளதும் ; மேற்கோள்களில் இலக்கிய நூல்கள் , திருமுறை , சாத்திர நூல்கள் காட்டியிருப்பதும் உரையாசிரியரின் இலக்கிய இலக்கண நுண்மாண் நுழைபுலஅறிவை மிகைப்படுத்துகின்றன.

உரையாசிரியர் பூவாளூர் வித்வான் க . கதிரேசன் அவர்களின் பணி சிறப்புக்குரியது. பலநூல்களைச் சென்றுதேடிஎடுத்து மக்கட்கு அவைகளைப் பயன்பாட்டில் கொண்டுவரும் முயற்சி பயனுடையதாக அமைந்துள்ளது .

அன்னாரின் சீரிய உரையெழுதும்பணி சிறக்கவும், இந்நூலினை பலரும் சுவைத்து மகிழும்வண்ணம் " அகாடமியா . இடியூ" என்ற இணையதள முகவரியில் "ஆதீன .....என்று தொடங்கும் வலைப்பக்கத்தில்." (Academia.edu, Aadheena.....) பதிவேற்றம் செய்யவும், செந்தமிழ்ச் சொக்கநாதப்பெருமான் திருவருளும் தருமையாதீனக் குருமணியின் குருவருளும் கிட்ட, பிரார்த்தித்து வாழ்த்துகிறோம் .



(வணக்கத்திற்குரிய இம்மௌன சுவாமிகள் அவர்கள் தருமையாதீனத்தின் சின்னபண்டார சந்நிதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகளாக இன்று ஒளிர்கிறார்கள்.)

****

மதிப்புரை

தமிழாகரர், சித்தாந்தச் செம்மணி, சிவஞானக் கலாநிதி,

முனைவர் . பழ. முத்தப்பன்

தமிழகத்தில் முருகவழிபாடு மிகத்தொன்மையானதாகும். " சேயோன் மேய மைவரை உலகம் " என்று முதன்மைத் தமிழிலக்கண நூலாம் தொல்காப்பியம் குறிப்பிடுவதும், பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை இடம் பெற்றிருப்பதும் அதனை வலியுறுத்தும். சைவத்தையும் தமிழையும் இருகண்களாகப் போற்றிவளர்க்கும் நகரத்தார் பெருமக்கள் , முருக வழிபாட்டில் தங்களைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டவர் ஆவர். அதிலும் குன்றின்மேல் வீற்றிருக்கும் முருகன்பால் அளவில்லாத பற்றுக் கொண்டவர்கள். செட்டிநாட்டுப் பகுதியைச் சார்ந்த குன்றக்குடிச் செவ்வேளும், கொங்குநாட்டைச் சார்ந்த பழனிமலைப் பாலகனும் நகரத்தார்க்கு வழிபடு கடவுளாவர். " செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை " என்றபழமொழி ஏற்படும் அளவுக்கு நகரத்தார்களின் முருகவழிபாடு குறிப்பிடத் தக்கதாகும்.

மயூரகிரி என்று அழைக்கப்பெறும் குன்றக்குடி முருகப்பெருமானின் பங்குனி உத்திரப்பெருநாளில் ஒன்பதாம் திருநாள் திருத்தேர் விழாவை மைய மாகக்கொண்டு , நகரத்தார் மரபைச்சார்ந்த கோனாபட்டு சு. மு. இராம. சுப்பிரமணியன் செட்டியார் என்பவர் பாடிய " மயூரகிரி உலா " என்றநூல் பாராட்டுதலுக்குரிய "குன்றக்குடி ஆதீனப்புலவர்" வித்துவான். க. கதிரேசன் அவர்களால் உரையுடன் கூடிய புதுப்பொலிவுடன் வெளிவருகிறது. உலாவைப் பாடிய ஆசிரியர் தமது பதினெட்டு வயதுப்பருவத்தில் இந்நூலைப் பாடியுள்ளார் என்று அறியும்போது வியப்பும் பெருமையும் ஏற்படுகிறது. சிறப்புப் பாயிரப்பாக்களால் அவ்விளங்கவிஞர் அக்காலத் தலைமைசான்ற தமிழறிஞர்களால் பாராட்டப் பெற்றிருப்பது கவிஞரின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

மூலநூலாகமட்டும் 1933 இல் வெளிவந்த இந்நூல் , பூவாளூர் புலவர் க . கதிரேசன் அவர்கள் உரையுடன்கூடியதாக இப்பொழுது வெளிவருவது தமிழகம் செய்த தவப்பயனாகும். மதிப்புரையில், நூலின் பெருமையைச் சொல்லிச்செல்வதா அல்லது உரையின் வளத்தை எடுத்துக் கூறுவதா ? என்று எண்ணுகிற அளவிற்கு நூலும் உரையும் உள்ளம்கவரும் பக்திப்பெட்டகமாக விளங்குகின்றன. மயூரகிரி தலபுராணத்தை நூலாசிரியர் 28 ஆவது கண்ணி முதல் 36 ஆவது கண்ணிவரை கொஞ்சுதமிழில் சுருக்கிக் கூறிஇருப்பது அவரின் கவிப்புலமையைக் காட்டுகிறது.

" வீரமயில்

ஏறுவான் பார்த்(து)உயிர்த்(து) எம்மைஅணை வீரீன்று

கூறுவார் மால்கொண்டு குன்றுவார் - சேறுமிகு

மாலை அணிஎன்பார் மாலை அழிஎன்பார் " (150- 151)

என்ற பகுதியை மூலநூலாசிரியரின் கவிப்புலமைக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். சங்கத்தமிழ் நடையும் , திருமுறைப் பக்தியும் இப்பகுதியில் அமைந்திருக்கின்றன. உலாக்காணும் மகளிர் உலாப்போகும் தலைவனின் மாலையை வேண்டுவர். அதனை இப்பகுதியில்" சேறுமிகு மாலை அணி என்பார்" என்றதொடரும், மாலை பெற்றோரின் உலகமயக்கம் தீரும் என்பதை ' மாலை அழியென்பார் " என்றதொடரும் விளக்கிப் பயில்வோரின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் என்பது உறுதி. இதுபோல நூலின் ஒவ்வொரு கண்ணியும் தமிழாய்ந்து கற்ற கவிஞரின் திறத்தினை வெளிப்படுத்துகிறது .

நூலாசிரியரின் படைப்பிற்கு உரைதந்த உரையாசிரியர், இலக்கணப் புலமையும், பிறஇலக்கியப் பயிற்சியும் மிக்கவர் என்பதை நூலின் பிற்பகுதியாக அமைந்துள்ள உரைப்பகுதியில் தொட்ட தொட்ட இடமெல்லாம் அறியமுடிகிறது. உரையின் ஒவ்வொரு பகுதியிலும் கண்ணிகளில் அமைந்த இலக்கணக் குறிப்புகளை உரையாசிரியர் தனிப்பகுதியாகக் காட்டியிருப்பது அவரின் இலக்கணப்புலமையை நிலைநாட்டுகிறது. எடுத்துக்காட்டாக, கண்ணி - 112, கண்ணி128 க்கு உரையெழுதியபின், அப்பகுதியில் இடம்பெற்றுள்ள தொகைக்குறிப்புகளையும் , எண்ணும்மைகளையும் , எண்ணும்மைத் தொகைகளையும் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டலாம். உரையாசிரியர் , கண்ணிகளின் ஒவ்வொரு பகுதிக்கும் உரைதரும்பொழுது, முதலில் குறிப்புரைஎன்று அருஞ்சொற்களுக்குப் பொருளும், அதன்பின்பொழிப்புரையும், அதன்பின் விளக்கமும் தந்திருப்பது படிப்போர்க்கு எளிமையாக அமைகிறது., உரையில் பலஇடங்களில் பரிபாடல், திருமந்திரம், திருமுறைகள் ஆகிய பிற இலக்கியப் பகுதிகளை ஒப்புமைப்படுத்திக் காட்டியிருப்பது , உரையாசிரியரின் பிற இலக்கியப் புலமைக்குச் சான்றுகளாக அமைகின்றன.

இவ்வாறு சுமார் ஒருநூற்றாண்டிற்குமுன் படைக்கப்பெற்ற, தன்வாழ்விற்குத் திருவருள்பயந்த, குன்றக்குடி முருகப்பெருமானின் உலா நூலிற்கு உரையெழுதி, போற்றுதலுக்குரிய வித்துவான் பூவாளூர் க. கதிரேசனார் அவர்கள் தம்நன்றிக்கடனை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பது உண்மையாகும். நூலைப் பயின்றபொழுது , பண்டை மரபுமாறாத ஒரு உலாநூலைப் படித்த நிறைவும், அந்த நூலுக்குரிய உரையைப் படித்த பொழுது ஒருசிறந்த உரையாசிரியரைப் பெற்றமகிழ்வும் ஏற்படுகின்றன. மயூரகிரி நாதர் உலாவிற்கு மிகச்சிறந்த உரைதந்து , முருகப்பெருமானையும், நூலாசிரியர் சுப்பிரமணியன் அவர்களையும் நினைக்க வைத்த உரையாசிரியர் குன்றக்குடி ஆதீனப்புலவர் அவர்களுக்கு உள்ளார்ந்த மகிழ்வைத்தெரிவிப்பாம். அவர்தம் உரையெழுதும் புலமை மேலும் வளர்ந்து, கிடைத்தற்கரிய நூல்களுக்கு உரைவளம்கிட்டிடக் குன்றக்குடிப் பெருமானை வழுத்துவாம்.

திருச்சி பழ . முத்தப்பன்.

24. 2.2016

****

அங்நாளைய சிறப்புப் பாயிரங்கள் (கி,பி 1933)

****

மகிபாலன்பதி(மகிபாலன்பட்டி), பண்டிதமணி,மு.கதிரேசச் செட்டியார்:

வளம்மருவு மயூரகிரி வாழ்முருகன் திருப்புகழை மண்ணில் வாழ்வோர்
உளம்மருவி நலம்அடைய ஒண்தமிழால் உலாஒன்றை உளுற்றித் தந்தான்
அளவில்அறம் சிவபத்தி ஆதிநிறை மாதேவர்க்(கு) அமைந்த மைந்தன்
குளம்மருவு **கோநகர்**வாழ் **இராமசுப் பிரமணியக் குரிசில்** மாதோ.

****

அமராவதிபுதூர், மகாவித்வ சிரோன்மணி, வயி.நாக.ராம.அ.இராமநாதன்செட்டியார்:

பலாப்போழ்ந்து விண்ணவர்க்குப் பழம்உதவு **மயூரகிரி**ப் பெம்மான் செவ்வேள்
உலாப்போந்த உயர்ந்தபிர பந்தம்உல(கு) உவந்திடநன்(கு)உளுற்றி னானால்
துலாப்போந்த நிறைகுணக்**கோ நகர்ச்சூனா முருகப்பன்** சூனு சென்னி
நிலாப்போந்த வனைஏத்தி **ராமசுப்ர மணியக**லா நிதியன் னோனே.

****

அமராவதிபுதூர்,வயி.நாக.ராம.அ.வேங்கடாசலம் செட்டியார்:

மூதறி வாளர் முதுமொழி எனவே
யாவரும் போற்ற இன்பமீ தூரக்
குன்ற நகரக் குமரக் கடவுள்
தன்திரு வடியில் சாத்துதற்(கு) உரித்தா
உலாப்பிர பந்தம்என்(று) உரைஉயர் வண்மைப்
பாமாலை தன்னைப் பகர்ந்தனன் **கோநகர்ச்**
சிவபத்தி யாளன் சிறந்த**மா தேவன்**
நாமம்எந் நாளும் நவிற்றும் பெரியோன்
செய்தவப் பயனாய் சிறக்கவந்(து) உதித்தோன்
நற்குண சீலன் நயம்பெறு மொழியன்
இலக்கணம் இலக்கியம் எழிலுறக் கற்றோன்

சித்திரப் பாக்கள் சீர்பெற இயற்றும்
வித்தகன் புலவர் வியக்கும் சிகாமணி
சமயப்ர சங்கம் சால்புற மொழிவோன்
இராமசுப் பிரமணிய நாவ லோனே.

****

பலவான்குடி "சிவநேசன் " உதவிஆசிரியர்.உ.ரா. சுவாமிநாத பிள்ளை:

குமரன் **மயூரகிரிக்** கோமான் **உலாவை**
அழுதிற் புலவோர் அருந்தத்–தமிழில்
புகர்இராம லேபுனைந்து பூண்டான் புகழ்க்**கோ**
நகரிராம சுப்ரமண்யன் நன்கு.

****

மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கலாசாலைத் தலைமைாசிரியர்,
மு.அருணாசலம் பிள்ளை:

சொல்நயமும் பாடல் தொடையும் பொருட்சுவையும்
பன்னலமும் தோன்றப் பகர்ந்தனனால்– பொன்னார்
மயிலாகும் பாறை வடிவேலர் மீது
செயிர்தீர்உ லாச் செய்யுள் தேர்ந்து.

மற்றவன்யார் என்னில் வணிகர் குலக்கொழுந்து
குற்றமிலா நற்குணத்தான் **கோநகரான்–** புற்றார்
அராமதிசூ டிக்(கு)அன்பன் அன்பர்க(கு) இனியன்
இராமசுப்ர மண்யன் இவன்.

****

ஆவினிப்பட்டி விவேகாநந்தர் கல்விக் கழகத் தமிழ்ப் பண்டிதர்,
பிரம்மசிரீ வ.மு. இரத்தினேசுவர ஐயர்:

குன்றைக் குமரனுக்(கு)ஓர் கோதில்உலாச் சாற்றினான்
துன்றுபல மாமலரில் தூயதென– நன்(று)அறிஞர்
செப்பமுரு **கப்பவள்ளல்** செய்தவத்தோன் பேர்**ராம**
சுப்பிர மண்யனென்றே சொல்.

வானவர் நாயகன் குன்றைக் குமரன் வருபவனி
வானமிழ்(து) ஏய்ப்ப வகுத்தனன் **கோநகர்** வாசன்உயர்
வானவர் போற்றுமா தேவன் மலரடி மன்னுமன
வானமை சீர்**ராம சுப்ரமண் யன்**மாண் வளர்குகவே.

****

பலவான்குடி திருவாசக மடத்தில் இருந்த கவிஞர் பொன்னம்பலசிவம்:

மாதேவர் சேய்மஞ்ஞை சையசுப்ர மண்யர்க்கு
மாதேவா சேய்ராம சுப்ரமண்யன்– தீதில்
உலாப்பிரபந் தஞ்செய்(து) உயர்ந்தான் உரனார்
கலாப்புலவர் கண்டுவக்கக் காண்

****

கோநகர்க் கற்பகவிநாயக கலாசாலைத் தலைமைாசிரியர், தி.சோமசுந்தரம்பிள்ளை:

திருவளரும் **கோநக**ரில் சீர்சாரு **மகதேவச்** செல்வன் ஈன்ற
அருள்வளர்**இ ராமசுப் பிரமணிய** அன்பன்மிக ஆய்ந்தே நீப
மருவளரும் தாருடையான் **மாயூர** மாமலையான் மகிழ்**உ லா**ஒன்(று)
உருவளரச் செய்தமைத்தே உயர்உலகில் புகழ்படைத்தான் ஊழி வாழி.

****

மதுரை தமிழறிஞர், பிர்மசிரீ மு.முத்துவேங்கடாசலம் ஐயர்:

பூங்கமலத் தவன்முதலாம் புத்தேளிர் தினம்பரவத்
தேங்கிடும்ஆ தரத்துடன்இச் செகம்இறைஞ்சப் பலவரங்கள்
ஓங்கிடுமா **யூரம்**எனும் உயர்சயில மிசையின்அமர்ந்(து)
ஈங்(கு)அருளும் **ஆறுமுகத்(து) எம்பிரான்** பதமிசையே.

பெருந்தனமாய்க் கல்வியினைப் பேணிவரும் அறிஞர்குழீஇ
இருந்துபல கலைச்சுவையை என்றென்றும் எடுத்தருந்தத்
திருந்தியஅச் சிந்தையையும் திரைகொள்ளு மாண்புமிகப்
பொருந்தும்**உலாச்** சூட்டியநற் புனிதவான் யாவன்எனில்

சித்தம்நனி கனிந்(து)உருகும் தீந்தமிழிற் பயிற்சியுளோன்
வித்தகன்எத் துணைக்கவியும் விரைந்(து)இயற்றும் வலியுடையோன்

எத்திசையும் இவன்தந்தை என்நோற்றான் என்றுசொலச்
சித்திபெறு **தனவணிகச் சீமா**னாய் விளங்கிடுவோன்.

கற்றைவார் சடைப்பெருமான் கழலிணைகள் உளத்தமைத்து
மற்றவன்தன் திருநாம **மகதேவ**ப் பெயரதனை
நற்றவத்தால் எதுபோழ்தும் நவின்றுவரு **முருகப்பன்**
பெற்றருள்**இ ராமசுப் பிரமணிய**ப் பெருந்தகையே.

****

நெற்குப்பை தமிழறிஞர், லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார் :

சீர்அருள்**மா தேவன்**அருட் செல்வன்உயர் **கோநகரான்**
ஆர்**இராம சுப்பிரமணி** யப்பெயரான்– பேரமிர்தோ
மன்மறையோ என்ன **மயூர கிரிஉலா**
நன்கிசைத்தான் வாழ்கபன் னாள்.

****

புகலூர், தமிழறிஞர், அ.கணபதி ஐயா:

சீர்மலி வணிக மாபெருங் குலத்துச் செம்மலாம் திரு**முரு கப்பப்**
பேர்பெறும் அறிஞர் பெற்றநல் தவத்துப் பிறந்துபல் கலைபயின் றுள்ள
நார்திகழ் **இராம சுப்பிர மணியன்** நவையறச் சுவைபல தழுவிப்
பார்புகழ் **குன்றை உலா**வினைப் பகர்ந்தான் பகலவன் விளக்குறும் பண்பால்.

****

மேலைச்சிவபுரி, தமிழறிஞர், அ.சிதம்பரசுவாமி:
சி.ஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

மாமலையி னிடைப்பிறந்து மாட்சிமிகு தொல்லுலகில்
நாமலைவு தீருதற்கு நடத்திடும்சீர் உயர்தமிழாம்
பாநவிலும் பண்புடையான் பண்ணவரும் விரும்பியமர்
கோநகரி னிடைப்பொலிந்தான் குல**வணிகர்** கோமானே.
இதுதரவு
ஆங்கொருசார்,
ஆலத்தால் துஞ்சியவள் அரும்பொடிநல் உயிர்பெறச்செய்
சீலத்தால் உயர்**ஞான சம்பந்தர்** எனத்துணிந்தார்
கோலக்காப் பெற்றபொருள் இன்மையால் குனிந்தனரே.
ஆங்கொருசார்,
மழவிடையான் திருத்தொண்டை மாறாமல் அனுதினமும்

கிழமையுடன் இயற்றிடுவா கீசராப் பாவித்தார்
உழவாரம் இன்மையால் ஓய்ந்து மயங்கினரே.
ஆங்கொருசார்,
கரம்மருவு மழுவுடையான் களித்திடவே தமிழ்ப்பாடல்
சுரமுடனே இயற்றியசீர் சுந்தரராப் பாவித்தார்
சிரசின்முடி இன்மையால் தியங்கிக் கலங்கினரே
இவை மூன்றும் தாழிசை
அ.ஃதொன்று இதுதனிச்சொல்

பெருகப் புகழைப் பீடுற இயற்றிய
முருகப்பன் என்ற மூதறி வுடையோன்
என்றே நனிபலர் துணிந்தனர் அன்னோன்
பன்னெடுந் தவத்தால் பாரினில் தோன்றிய
சொல்நிலை பெருகிய தூயோர் புகழும்
இராம சுப்பிர மணியன்என்(று) உரைக்கும்
சீர்சால் கலைஞன் கூர்மதி யுடையன்
எங்கள் அன்பன் இனி(து)உரை யாளன்
பராவுதொல் குணத்தன் பாடி உதவினன்
சேய்உயர் **மயூர கிரிஉலா**
மாயிரு ஞாலம் மகிழ்ந்துபோற் றிடவே.

இதுசுரிதகம்.

****

கண்டனூர், தெ.அரு.சித.கரு. இராமநாதன் செட்டியார்:

என்றும் இளைய எழில்முருகன் இணைத்தாள் ஏத்தும் எண்ணத்தான்
என்றும் தமிழின் சுவைநுகர்வான் **இராம சுப்ர மணி**என்போன்
என்றும் புலவர் களிகூர இசைத்தான் **மயூர கிரி**யின்**உலா**
என்றும் மதியும் உள்ளளவும் இசையோ(டு) இலங்கி வாழியவே.

****

புரிசை, சு. முருகேச முதலியார்

வானவர்க்(கு) அன்(று)அளவில் தானவர்கள் செய்தசிறை
மாற்றிஉயர் வாழ்வு தருவேள்
மானவர்கள் போற்றமயில் மலைதனில் வந்தவல
மாண்பினைப் பாடி மகிழ்வான்

ஞானவர்க் கத்தவரும் நன்னூல் படிப்பினரும்
நன்றுநன்(று) என்று புகழ
மாநகர்ச் செல்வநல **கோநகர்த் தனவணிக**
இராமசுப் பிரமணிய னே.

****

பரிமணங்குடி, சைவசன்மார்க்க சங்கம், மு. முத்துப்பிள்ளை:

ஏர்மருவு குன்றைமுரு கேசன்உலாச் செந்தமிழால்
சீர்மருவும் **கோநகர்மா தேவன்**சேய்– பார்மரு(வு)எப்
பாவினையும் நன்கு பயில்**ராம சுப்ரமண்யன்**
பூவுலகில் சொற்றான் புகழ்ந்து.

மயூரகிரி உலா ---ஆராய்ச்சி

உலகத் தவர்புகழ் குன்றாக் குடிமலை உச்சியிலே கலகப்பிறவிக்கு ஓர்மருந்தாக , இருமயில் ஏறிய இருமயிலார் புடைசூழத் தான்ஒருமயில் ஏறிய அருள்தரு சண்முகநாதப்பெருமான் மும்மையிலும் தன்அடியார்களுக்குத் தண்ணருள்புரியப் பங்குனி உத்தரத்திருநாள் விழாவின் ஒன்பதாம் திருநாளன்று திருத்தேர் ஏறி உலாவருகின்றான் . அவன்அருளும் தண்ணார் அமுதப்பெருங்கடலை மாந்திக் களிக்கும் அடியார்கூட்டத்துடன் ," நறுந்தாது உண்டு நயனில்காலை வறும்பூ துறக்கும் வண்டுபோல் " வாழும் ஏழுபருவப் பொதுமகளிரினமும் அவன் "தோள்மாலை" பெறும் நோக்குடன் உடன் வருகின்றனர் . பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை என்ற ஆறுபருவமகளிரும் தம்காமநோக்கின் காரணமாக வறிதே வீடுதிரும்ப மூத்துமுதிர்ந்த பேரிளம்பருவத்தாள் தனது பத்திப்பெருக்கால் முருகனைப்போற்றும் திருப்புகழ் முதலியன பாடிக்கொண்டே தேருடன் வந்து , தேர்நிலையடைந்து அவன்அருளிய தோள்மாலை பெற்றுப் பெரியவளானாள் என்று இவ்வுலாநூல் நிறைவுபெறுகிறது . இதன்கண் பள்ளந்தாழ் உறுபுனலில் அமைந்துள்ள கருத்தாழம் கற்பனைவளம் சொல்லாட்சி மாண்பு முதலிய சிறப்புகளைச் சிறிது நுகர்வோம் .

1. **சிவபிரானும் முருகனும் வேறலர் :**

"ஆதலின் நமதுசத்தி அறுமுகன் அவனும் நாமும் வேறலம் " (கந்தபுராணம்) என்று சிவபரம்பொருளால் குறிப்பிடப் பெற்றவன் , அறுமுகப்பரமன் ஆகிய குன்றக்குடி ஆறுமுகஅப்பன் . அருள்தரு சண்முகநாதப் பெருமான் சிவபரம் பொருளேயாதலின் பிறப்பினோடு இறப்பும் இல்லாப் மீப்பெருநிலையன் . சிவபரம்பொருளை நிலையாற்றல் அல்லது குணி என்பதும் , சிவசத்தியை இயங்குஆற்றல் அல்லது குணம் என்பதும் நம்மரபு . இயங்கு ஆற்றலாகஇருந்து அருள்வழங்கும் சிவசத்தியின் ஒருகூறே அருள்தரு சண்முகநாதப்பெருமான் . இவ்வம்மையைப் போலவே , இவன் இம்மைஇன்பமும் மறுமைஇன்பமும் இவற்றுக்கு மேலான அம்மைஇன்பமும் தன்அடியார்க்கு எளிதில் அருள்பவன் . இதன்பொருட்டுச் சிவபரம்பொருள் ஏற்ற திருக்கோலமே அறுமுகச் செவ்வேட்கோலம் . இதனை;

" வெள்ளிக் கிரியான் விளங்கும்உமை அம்மையினைத்

தெள்ளிஇரு கூறாக்கிச் சேர்ஒருகூறு) - உள்ளியே
வாமபா கத்து)அமைத்து மற்றொருகூற் றைஒருசீர்ச்
சேமக் குழவியாச் செய்தருளி - ஆம்அவற்கு
ஞானசத்தி யைமனத்துள் நல்கிஇச் சைகிரியை
ஆனசத்தி யும்படைய தாஈந்து ..... (கண்ணி 17 - 19)

என்று இவர் தெளிவுபடுத்துகிறார் .

2 . பெம்மான் முருகனின் ஆயுதங்கள் :

பன்னிருதிருக்கையுடைய முருகப்பெருமான் ஏந்தியுள்ள பன்னிரண்டு ஆயுதங்களையும் இவர் ஒருசேர

" .....திகழ்தோ மரம் , கொடி , வாள் ,
போர்குலிசம் , அம்பு , புகழ்மிகவே ---ஆர்அங்கு
சம் , மணி , நல் தாமரையும் , தண்டம் , வில் , வன்மழு , வேல்
அம்மஇவை ஆயுதமே யாவுடையான் " -------(கண்ணி 43 - 44)

இப்பன்னிரு திருக்கைகளும் பாற்பட இயற்றிய அருளிப்பாடுகளைத் திருமுருகாற்றுப்படை , கந்தர்கலி வெண்பா ஆகிய அருள் நூல்களில் கற்றுமகிழலாம் .

3 . அரசங்காடு :

இன்றைய குன்றக்குடிப்பகுதி , இதன் தலபுராண காலத்துக்குமுன் குன்றில்லாத அரசங்காடாக இருந்தது . அன்று இப்பகுதி அரசங்காடாக இருந்தது என்பதை இன்றும் இங்கு ஆங்காங்குள்ள மூத்துமுதிர்ந்த அரசமரங்கள் மெய்ப்பிக்கும் . இதனை இந்நூல்

" யாவுலகும் போற்றும் இயல்மிகுசீர்த் -- தேவுசிவன்
சிந்தை மகிழும் திருப்புத்தூ ரின்குணபால்
அந்தம் உறும்அரசா ரண்ணியத்தில் .....(கண்ணி 34 - 35)

என்று குறிக்கிறது .

4 . திருஞானசம்பந்தர் முருகனா ?

இந்நூலின் இடைஇடையே கண்ணிகள் 59 - 61 ; 131 ; 312 - 314 ஆகியவற்றில் இவர் , ஆதியும் அந்தமும் இல்லா அநாதிப் பரம்பொருளான ஆறுமுக அப்பனை , கைபுனைந்து இயற்றாக் கவின்பொருளாய் உள்ளவனை , சீர்காழிச் சிவபாத இருதயர்க்கும் பகவதிஅம்மையார்க்கும் கருவாய்ப்பட்டுப் பிறந்தவனாகக் கூறுகிறார் . **அவை :**

" நாடரிய வேல்இறைவன் நாநிலத்தில் தோடகங்கள்
மன்னும் உயர்வாவி வான்காழி நன்னகரில்
பன்னுசிவ பாதமனப் பண்புடையார் ---- இன்னலுறும்
தேசம் செழிக்கச் சிவன்அருளை வேண்டவர்
ஆசில் மனம்களிக்க அன்னவற்குத் --- தேசுமிகு
சம்பந்த னாய்உதித்த தன்மையும் .....(கண்ணி 311 - 314) என்றும் ;

“” கார்மருவு சோலைசூழ் காழிக் கவுணியரின்
சீர்மருவு செல்வக் குலம்சிறப்ப - ஏர்மருவு
சம்பந்த னாய் உதித்து ‘’ .....(கண்ணி 59 -60) என்றும் ;

முருகப்பிரான் திருத்தேரில் எழுந்தருளியதைத் திருச்சின்னக்குழல்
‘’ காழியினில் வந்தான் வந்தான் ‘’
என்று முழங்குவதாகவும் கூறுகிறார் . (வந்தான் வந்தான் ==சீர்காழியில் திருஞானசம்பந்தரான முருகன் வந்தான் .)

இவர் இவ்விடங்களில் இங்ஙனம் கூறுவது ; இவர் தெளிவாக அறிந்த நம் சைவ மெய்யியலுடன் முரண்படுவது மட்டுமன்றி , முன் கண்ணி 17 - 19 ஆகியவற்றுடன் முரண்படுவதையும் , இவரே முருகன் ‘ பிறந்தான் ’ என்று கூறாது ‘’ வேதம் முழங்கஉயர் விண்ணவரும் மண்ணவரும் ஏதம் அற்றதுஎன்ன ‘ எழுந்தவன் ‘ காண் ‘’ என்று கூறுவதுடன் ஒருசேர வைத்து எண்ணும் நிலையில் , இவர் நம் மெய்ப்பொருளுடன் முரண்பட்டு நின்றவரல்லர் என்பதும் , இவர்காலத்தில் வல்லாண்மையுடன் விளங்கிய ஆதிக்கக்காரர்களின் கருத்துடன் அறிஞர்களும்கூட ஒத்துப்போக வேண்டிஇருந்த கொடிய நிலைமையுமே முருகனைத் திருஞானசம்பந்தராகக் கூறச்செய்தது என்பதை உணரலாம் .

5 . உலா நாளும் , ஊர்தியும் :

அருள்தரு சண்முகநாதப்பெருமான் பங்குனி உத்தரத்திருவிழாவின் ஒன்பதாம்நாள் விழாவன்று திருத்தேரில் எழுந்தருளி உலாவந்ததை ;

‘’ ..... --- சீலத்தேர்
பெரிதுஏறி ‘’ (கண்ணி 112)

‘’ ..... --- மண்ஆளும்
சேயோன் உவக்கும் திருத்தேர் உலாக்காண
மேயோமே எங்கடவம் (எங்கள் தவம்) மேல்என்பார் ‘’ கண்ணி 147 - 148)

ஆங்காங்கு , பருவமாதர் முருகன்மேல் மையல்கொண்டு பலவாறு புலம்பும் நிலையில் , இவன் ,
உம்பர் பெருமான் உயர்குமரன் சேய்இளைய
நம்பன் திருத்தேர் நடத்தினான் ‘’ (கண்ணி 224 - 225)

மேலும் ; .... -- அம்மான்சேய்
வீதியினில் தேரில் விளங்கினான் .....(கண்ணி 347)

என்பன எடுத்துரைக்கும்

6 . முருகன் பெருமைகள் ------ எண்ணலங்காரத்தில் :

அருள்தரு சண்முகநாதப்பெருமான் பெருமைகளைக் கண்ணி 67 - 70 களில் ஒன்றுமுதல் பன்னிரண்டு ஈறான வரிசையில் அவ்வெண்ணிக்கை யுடையவற்றை அழகுற அடுக்குகிறார் . அது : ஒருவேல் , இருமனைவியர் , மூன்று பறவைகள் உடையவன் . நால்வாய் -- தொங்கும் வாய் -- பெற்ற விநாயகனுக்குத் தம்பி , ஐந்து திருமுகச் சிவனாகிய சதாசிவத்துக்குத் மகன் , ஆறுதிருமுகமுடையவன் , ஏழிசையும் நமக்கு அருள்வான் , எண்திசையினரும் தொழும் சீர்த்தியன் ,
ஒன்பான் செல்வங்களையும் நமக்கு அருள்கிறவன் , பத்து அங்கம் (தசாங்கம்) உடையவன் , ஆதித்தர்

பதினொருவர் போற்ற வளர்ந்தவன் , நமக்கு அருளப் பன்னிரண்டு திருக்கண்கள் உடையவன் என்று போற்றுகிறார் .

7 . முடிமுதல் அடிவரை -----கேசாதிபாதம் --- வருணனைகள் :

அ . பெருமான் திருவாபரணம் புனைந்தருள்வது பற்றிக் கூறும்பகுதியில் ---- கண்ணி 86 -- -96 வரையிலான பகுதியில் திருமுடி முதல் திருவடி ஈறான உறுப்புகளில் புனைந்த அணிவகை கூறுகிறார் .

ஆ . மங்கைப் பருவத்தாளின் முடிமுதல் அடிஈறான வருணனை ---- கண்ணி 229 -- 235 ;

இ . மடந்தைப் பருவத்தாளின் முடிமுதல் அடிஈறான வருணனை ---- கண்ணி 249 -- 255 ;

ஈ . அரிவைப் பருவத்தாளின் முடிமுதல் அடிஈறான வருணனை ---- கண்ணி 274 -- 280 ;

உ . தெரிவைப் பருவத்தாளின் முடிமுதல் அடிஈறான வருணனை ---- கண்ணி 300 -- 305 ;

ஊ , பேரிளம் பருவத்தாளின் முடிமுதல் அடிஈறான வருணனை ---- கண்ணி 334 - 342 என்று அவ்வப்பருவத்துக்கேற்றவாறு வருணிக்கின்றார் .

8 . உடன்வந்தோர் :

உலாவில் உடன் வந்தோர் இன்னார் இன்னார் என்று மட்டுமே கூறுவது மரபு . இவர் அங்ஙனமின்றி வந்த ஊர்திகளையும் அவற்றில் ஊர்ந்துவந்தவர்களையும் கூறுகிறார் . (எ . டு) மைவான வண்ணன் களதம் = மேகநிறத்து விநாயகர் ஊரும் பெருச்சாளி)

9 . பேதைப்பருவ இயல்புகள் .

அறிவது அறியாப்பருவம் பேதைப்பருவம் . இவள் சொல்லும் செயலும் இப்பருவத்திற்கு உரியனவாகவன்றி மூத்தவர்களின் சொல்லையும் செயலையும் ஒத்தனவாக அமையும் . இவள் தன் மார்பில் அரும்பாமுலையில் , விளையாட்டு மரப்பாவையை அணைத்துக்கொண்டு பாலூட்டிமகிழ்தல் ; ஓவியத்தில் அமைந்த வாழைக்கனியைத் தன்கிளி உண்ண ஊட்டிமகிழ்தல் , கண்ணாடியில் தோன்றும் தன்உருவத்தைத் தன்னுடன் விளையாடவருமாறு அழைத்தல் , தனது மரப்பாவை பால்குடிப்பதே இல்லையாதலால் மருந்தூட்டினால்தான் பால்குடிக்கும் என்று கூறுதல்என்பன இவளது பேதைப்பருவச் சொற்களும் செயல்களுமாகக் கூறுவது சாலப்பொருந்துவதாகும் . (கண்ணி 166 –170)

சின்னஞ்சிறுமகளிர் , மணலில் சிற்றில்இழைத்தும் மணலால் சிறுசோறு ஆக்கியும் மகிழ்வர் . இதனைஉட்கொண்ட ஆசிரியர் இவள்சொல்லாகவும் செயலாகவும் கூறுவன சுவைக்கத் தக்கன . .தன்தாயர்முருகனைத் தொழுவது கண்டு தானும் தொழுதலும் , உலாவரும் இம்முருகன் தான்இழைத்த சிற்றிலுக்கு வந்து தான்சமைத்த சிறுசோறு உண்ணத்தான் வருகிறானா என்பதும் ,தான்கற்ற கழற்காய் விளையாட்டைத் தன்னிடம் கற்றுக்கொள்ள வருகிறானா என்பதும் (கண்ணி 182 – 185) .

தேரூர்ந்துவரும் முருகனைக்காட்டி இவன்யார் என்பதும் , வள்ளித்தாயினைக் காட்டி இவள்யார் என்பதும் முருகன்கையில், ஏந்திய வேலினைக்காட்டி இது என்ன என்பதும் , ஊர்தி மயிலினைக்காட்டி இது என்ன என்பதும் , அதனை என்கிளியுடன் சேர்த்துக்கொண்டு நான் விளையாட எனக்கு வாங்கித்தா என்று கேட்பதும்இச்சிறுமியின் பேதைமையை உணர்த்துவன (கண்ணி 190 – 193) .

இப்பேதையாள் ,தன்அழகிய மரப்பாவைக்கு திருமணம் செய்துவைப்பதாகக் கூறுவதும் பொருத்தமானது . அழகியசோலையில் இயற்கையாகக் கொடிகள் தம்முள் பின்னிக்கொண்டிருக்கும் இடம் திருமணப்பந்தர் , குளத்தில் மலர்ந்திருக்கும் அரக்காம்பல்மலர் வேள்வித்தீ . இவள் வளர்க்கும் கிளிதான் வேள்விசெய்வோன் . சோலைத்தேன் வேள்வித்தீயில் சொரியும் நெய் . மணக்கும் வெண்ணிறப் புன்னை அரும்பு வேள்வித்தீயில் இடும் பொரி . இங்ஙனம் இவள் தனது மரப்பாவைக்கு மணம் செய்து

மகிழ்கிறாளாம் .

பேதைப்பருவம் என்பது 5 முதல் 7 வயதுக்குட்பட்ட பருவம் . பிற்காலத்தில் வெளிப்படும் இவள் முலைகள் தற்போது வெளிப்படவில்லை . இதனை இவர் ; பிற்காலத்தில் மரமாகவுள்ள முளை அதன் விதைக்குள் அடங்கி மறைந்து இருப்பதுபோல , முன்நாளில் திருமாலின் காதுகளில் மறைந்திருந்த மது கைடவர்களைப் போல , வாலியை எய்ய இராமன் மறைந்திருந்தது போல , இந்திரனுக்கு அஞ்சிக் கடலில் மறைந்துகிடந்த மைந்நாக மலைபோல , சிவனது சடையில் கங்கை மறைந்திருப்பது போல , அசுரர்களுக்கு அஞ்சி இந்திரன் தாமரைத்தண்டில் மறைந்திருந்ததுபோல இவள் முலைகள் இவளது மார்பில்மறைந்து கிடந்தன என்கிறார் .

10 . **பெதும்பைப் பருவ வருணனை :**

பெதும்பைப் பருவம் இரண்டுங்கெட்டான் பருவம் --- காமஉணர்ச்சி பற்றிப் புரிந்தும் புரியாத பருவம் . இப்பருவத்தை வருணிப்பது வாள்மேல் நடப்பது போன்றதாகும் . இப்பருவத்து உணர்வுகளை வருணிப்பது அத்துணை எளிதன்று . எனவே ;

" காசினியில் பிள்ளைக் கவிக்(கு)அம் புலிபுலி
பேசும் உலாவில் பெதும்பைபுலி - ஆசு
வலவர்க்கு வண்ணம் புலிமற்றும் எல்லாப்
புலவர்க்கும் வெண்பாப் புலி . --- தனிப்பாடல் .

(புலி = பாடுதற்கு அச்சம் தருமளவு கடினமானது .)

பெதும்பைப்பருவத்தாளின் மனநிலையையும் உடல்உறுப்பு அழகையும் உரியவாறு கூறும்இவர் ;

" ..... உயர் பார்மகன்தன் பாணம்
மருவ நினைக்கும் மடமான் --- உருவத்துச்
செந்தா மரைத்திருவின் செவ்வி வளர்அன்னம்
பைந்தா(து) உகாத பரும்அரும்பு - கந்தரம்கண்(டு)
ஆடாத மஞ்ஞை அழையாத கோகிலம்
வாடாத மன்மதன்நூல் வாசிப்பாள் --
.....
.....என்பினைப்பெண் ஆகச்செய்
மன்னன்கைத் தாளம்போல் வான்கமுகில் --- துன்னும்இளங்
காயைப்போல் புற்றில்உறு கட்செவியைப் போல்சிறிது
தூயமுகம் காட்டும் துணைமுலையாள் . (கண்ணி 196 - 202)

" ..... -- துங்கமணம்
வேட்டுத் தனதுகிளி மென்மணத்தை நோக்கிஉளம்
வாட்டம் அடைந்து வருந்துவாள் . (கண்ணி 203 - 204)

இப்பகுதிகளில் உள்ளனவாகிய மருவ நினைக்கும் , வளர்அன்னம் , தாதுஉகாத பரும்அரும்பு , ஆடாத , அழையாத , மன்மதன் நூல் வாசிப்பாள் என்றசொல்லாட்சிகளும் ; தாளக்கருவி , பாக்கின் இளங்காய் , புற்றுக்குள் இருந்துகொண்டு மெள்ளத் தலையைமட்டும் நீட்டும் பாம்பு ஆகியவை ஒத்த இளமுலைகள் என்ற உவமைகளும் ; தன்இணையுடன் சேரும் கிளியின் நுட்பமான புணர்ச்சிகண்டு ஏங்குதலும் ஆகியன பெதும்பைப் பருவம் பற்றியனவாக அமைந்து சிறக்கின்றன .

11 . முருகப்பெருமான்மேல் பெதும்பைகொண்ட இச்சையை அவளது பொருள்பொதிந்த சொற்களால் உணர்த்துதல் :

ஓவியன் ஒருவன் வரக்கண்ட பெதும்பை அவனிடம் " இம்முருகன் மேல்பேராவல் கொண்ட எனக்கு இவன் திருவுருவைப் படமாக வரைந்து எனக்குதா " என்றுகேட்டலும் அவ்வோவியன் அவ்வுருவை ஓவியமாகத் தீட்டித்தர , முருகனின் தேவியரைக்காட்டி அவர்கள் முருகனின் மனைவியர் என்றறிந்ததும் ,அவர்களைப் பார்த்து (அத்தகு வாய்ப்புத் தனக்குத் தற்போது இல்லையே என்பதால்) பெருமூச்செறிந்து அம்முருகன் பக்கத்தில் தன்உருவையும் எழுதித்தருமாறு கேட்கிறாள் . இச்செயல் மூலம் இவளது உள்ளக்கிடக்கையை --- காமத்து மனநிலையை ---நமக்கு ஆசிரியர் குறிப்பாக உணர்த்துகிறார் .

12 . முருகப்பெருமானின் தாய் தந்தை அண்ணன் மாமன் ஆகியோரின் பெருமைகளை மறைத்து , நகைச்சுவை தோன்றக் கேலியாகக் கூறுதல் :

பெதும்பைப் பருவத்தாள் , தன்தோழியரிடம் " வள்ளி தெய்வானைபோல நானும் இம்முருகன் பக்கத்தில் ஏன்இருக்கக் கூடாது " என்றுகேட்க அவள்உள்ளக்கருத்தை அறிந்த பாங்கியர் ;

" .....சொலும்அப்பன் காபாலி
வாழிஅனை யோநன் மலைநீலி --- சூழும்அம்மான்
வெண்ணெய் திருடி விளங்குமுன்னோன் மாவயிறன்

என்று கூறி " இதன்பொருட்டா இவன்மேல் மையல் கொண்டாய் என்று கேட்டு நகையாடினர் .

13 . மடந்தைப் பருவத்தாளின் உறுப்பு நலன்களை , பாடல் பெற்ற திருத்தலப் பெயர்களில் காட்டிக் கூறுதல் :

இவளது அணி ,திருத்து அணி (திருத்தணி) ; வளைந்தநெற்றி , வில்லின் கோலம் - வில்லின்அழகுடையது (திருவிற்கோலம்) ; விழிப்பார்வையால் ஆலம் (நஞ்சு) காட்டுவாள் (திருவாலங்காடு) ; மூக்கு எள்ளுப் பூஅழகு (திருப்பூவணம்) ; வாய் வெண்பற்களால் முல்லை வாயினாள் (திருமுல்லைவாயில்) ; கழுத்து -- களம் , வஞ்சிக்கொடிஒத்தகளம் (திருவஞ்சைக்களம்) ; முலைகள் வல்அம் -- சூதாடும் வல்லுக்காய்களின் அழகுடையன (திருவல்லம்) ; இனிய சொற்கள் பால்தேன் கூடியன --- கூடலாக உடையவள் (கூடல் -மதுரை) ; அழகிய வயிறு குற்று (சிறிய) ஆலிலை ---குற்றாலம் ஒத்தது (திருக்குற்றாலம்) ; உருவமற்ற -- மிக மெல்லிய வஞ்சிக்கொடிஒத்த இடுப்பில் மேகலையாகிய காஞ்சிஎன்னும் அணிஅணிந்தவள் (காஞ்சீபுரம்) ; அழகில் மயில் - மயூரம் (திருமயிலாடுதுறை) ; அல்குல் பெரிய பாம்புப்படத்தின் இருப்பிடம் (நாகர்கோவில்); நடையால் நான்முகன் - கஞ்சன் ஊரும் அன்னம் ஒத்தவள் (கஞ்சனூர்) ------ என்றஇப்பகுதி இவரது நுண்மாண் நுழைபுலம் காட்டுவது .

14 . மகள் ஆகிய மடந்தைமேல் , தோழியாகிய தெரிவைமேல் அவரவர்கொண்ட பாசம் :

மகள் மேல் தாயர் கொள்ளும்பாசம் பெரிது . மடந்தைக்கு , முருகன் மையல்ஊட்டியதாகக்கருதிய இத்தாய் முருகனை நோக்கி " உனக்கு இருமனைவியர் இருந்தும் என்மகளையும் விரும்பினீரோ ? இவளது கைவளையல்களைக் கவராவிட்டால் உம்மை வெற்றிச்சூழல் பொருந்தாதா ? இவளது மேகலையைக் கவராமல் உமக்கு அழகுபொருந்திய மான்தோல்முடிச்சிட்ட பூணூல் அமையாதா ?

இவளின்மென்மையான ஆடைகளைக் கவராமல் உமக்கு விருதுக்கொடித்துகில் வேறு கிடைக்காதா? இவற்றை எல்லாம் கவரும் தொழில் புரியவா இங்கு விரைந்து வந்தீர் '' என்பன பாசம் காட்டுவன.

மடந்தையின்தாய் போலத் தெரிவையின் தோழிஒருத்தி முருகனைநோக்கி மிகுந்த சினத்துடன் , '' வல்லவனே ! உன்மயில்மலை நல்லதா ? எம்தலைவியின் அழகிய முலை நல்லனவாஎன்று அவற்றில் பொருந்திக்காண வா !அச்சந்தரும் உம் வேற்படையோ இவளது அழகிய விழியோ நன்று என்று கூறு ; ;வள்ளியின் தாய்ஆகிய மானின் மருண்ட விழியோ ?இவளது மருண்ட விழியோ நன்று ? என்று மிக்க தோழிப்பாசத்தால் முருகனைச் சினந்து கேட்கின்றாள் . இவை உலகியலுடன் ஒத்தவை .

15 . தன்காரியம் முடிக்கக் கருதும் சிலர் செயல் :

அரிவைப்பருவத்தாள் முருகன்மேல் கொண்ட வேட்கையை அவனிடம் கூறச்செய்யும் பொருட்டுத் தன் உயிர்த்தோழிக்குச் செய்யும் உபசாரங்கள் (கண்ணி 281 - 285) இந்நாள் காரியம் கருதிச்சிலர் செய்யும் உபசாரங்களை நினைவூட்டும் .

16 . காமமெய்ப்பாடுகள் :

காமமெய்ப்பாடுகள்பற்றித் தொல்காப்பியர் பொருளதிகார மெய்ப்பாட்டியலில் ' புகுமுகம் புரிதல் ' முதல் ' கண்டவழி உவத்தல் ' ஈறாக 32 மெய்ப்பாடுகள் கூறுவார் . இந்நூலுள்இவர் ''

'' ..... அல்குல்வேள் ஆசை இனும்விரிய
வீங்குமுலை விண்ணடைய மெய்ம்மயிர்க் கூச்சு --- ஓங்கியே
மன்னிய காமம் வளர்காலை '' (கண்ணி 287 -288)

என்பதுடன் அமையாது இரவின் இருளை எமனாகக் கருதுதல் , தென்றலை வெறுத்தல் நிலவைப் பழித்தல் முதலியன கூறுவதும் அவ்வகைப்பட்டனவே . குற்றாலக்குறவஞ்சியில் ;

பெண்ணுடன் பிறந்ததுண்டோ வெண்ணிலாவே __ என்றன்
பெண்மை கண்டும் காயலாமோ வெண்ணிலாவே
தண்ணமுதுடன் பிறந்தாய் வெண்ணிலாவே -- அந்தத்
தண்ணளியை ஏன்மறந்தாய் வெண்ணிலாவே

என்பனவும் இத்திறத்தனவே .

17 . தோள்மாலை பெற்றாள் ஒருத்தி :

மன்மதனின் நீலமலர்க்கணை தரும் ஓர் அனுபவம்தவிரப் பிற அனைத்து அனுபவங்களையும் பெற்றுக்களித்தவள் பேரிளம்பெண் . நீலமலர்க்கணையாகிய கருங்குவளை , வதைத்துக் கொல்லும் குணமுடையது என்றுகூறும் இரத்தினச் சுருக்கம் என்னும் நூல் , ஐங்கணைகளையும்பற்றி ;

'' நினைக்கும் அரவிந்தம் நீள்பசலை மாம்பூ
அனைத்துஉணவும் நீக்கும் அசோகம் --- வனத்திலுறும்
முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம்
கொல்லுமதன் அம்பின் குணம் ''

பிறகாமநுகர்ச்சி அனுபவங்கள் அனைத்தையும் பெற்றுத்திளைத்தஇவள் அவை ஓய்ந்த நிலையில் பெருமான் உலாவரும் தேருடன்வருகின்ற அடியார் கூட்டத்துடன் சேர்ந்து பத்தியுடன் திருப்புகழ்

பாடிக்கொண்டும் , தன் வளர்ப்புக்கிளியை முருகன் புகழ் கூறச் சொல்லிக் கேட்டுக்கொண்டும் திருத்தேர் நிலையடைந்து பெருமானை வணங்கினாள் . அந்நிலையில் அவன்தந்தருளிய தோள்மாலை பெற்று அங்குவந்தாருள் பெரியள் ஆயினாள் .

18 . **மிக நயமான சொல்லாட்சிகள் சில :**

குழாங்கள் பகுதியில் ; .

" நல்லோனே எம்முடைய நாணைஅழித்(து) இல்இருவா
உம்முடைய நாணை உவந்(து)ஆகத் தேஅணிந்தீர்
வெம்மலையில் செண்டை விரட்டினீர் - எம்முலையில்
செண்டை விரட்டுவீர் " (கண்ணி 157 - 159)

(நாண் = நாணம்---வெட்கம் ; பூணூல் . செண்டு = செண்டுஎனும் ஓராயுதம் ; கைப் பூச்செண்டு)

மங்கைப்பகுதியில் அவள் தாய்மார் சமாதானம் கூறும் பகுதியில் ;

" ஒப்பிலான் மாலை மருவவுனைச் --- செப்புவேம்
மாலைஅளித்(து) உன்னை மருவுவார் ஆகலின்நீ
மாலை ஒழிக " (கண்ணி 246 - 247)

(மாலை = மாலை நேரம் ; தோள்மாலை ; மயங்குதல்)

19 . **சிலேடைவகையும் பிற அணிகளும் ;**

மடந்தை இரவுஉறக்கத்தில் தான்காணும் கனவுபற்றிக் கூறுகையில் ;

கனவில் கண்ட முருகனை " நீர்ஆர் " என்றுவினவ அவன் என்தந்தை சிவபிரான் முடியில் அவை உள்ளன என்றான் . இவள் உன்னைப்பற்றிக் கேட்கிறேன் என்றபொருளில் " நீர் " என்றுகூற , அவன் நான்பிறந்தது நீரில் என்றான் . " நீர்எந்தஊர் நாடு " என்றாள் . அவன் , " நல்லுறவே நாடு " என்றான் . உன்பெயர் " மாதேவா தானே "என்றாள் . அவன் " மாதே வா " என்றான் . இவள் அவனுடைய ஏட்டிக்குப் போட்டியான விடைகளால் " வானவா சம்போ கந்தா " என்றாள் . அவனோ "சம் போகம் தா " என்றபகுதி சுவையானபகுதி என்பதுடன் இதில் செம்மொழிச் சிலேடையும் பிரிமொழிச் சிலேடையும் உள்ளதை அனுபவிக்கலாம் .

மேலும் இதில் ஆங்காங்கு தக்க உவமைகள் , உருவகங்கள் , பல்பொருள்உவமைகள் , தற்குறிப்பேற்றம் , வஞ்சப்பகழ்ச்சி முதலிய அணிகள் ஒளிர்கின்றன .

****

மயூரகிரி உலா

ஆசிரியர்

கோநகர்(கோனாப்பட்டு). சு.மு.இராம சுப்பிரமணியன் செட்டியார்.

****

காப்பு:1.

செய்ய மயூரகிரி சேர்முருகப் பெம்மாற்குத்
துய்ய உலாஓதத் துணையாமே _பைஅரவ
மாதங்க வண்ணத்த வன்அருளும் தோகையடி
மாதங்க வண்ணத்த வன்.

2. வேல்அறாக் கையர்உலா விற்குத் துணையாமே
பாலறா வாயர் பதம்.

நூல்

1. பொன்னுலகம் காக்கும் புரந்தரனும் வானவரும்
மன்னும் அரிஅயனும் வண்மையுற– இன்னநிறத்(து)
2. இப்படியன் இவ்வணத்தன் இவ்வுருவன் என்(று)அறிந்து
செப்பும் வகையறியாச் செல்வன்காண்–இப்புவியில்
3. முத்துடைத்தே என்(று)அவ்வை மூதாட்டி யார்புகழ்ந்த
தத்தைஅர சாள்கன்னித் தண்நாட்டில்–வித்தகநூல்
4. ஓங்கிவளர் சங்கம்உயர் ஒண்கூடல் நன்னகரில்
தேங்குபுகழ் ஆரஅமர்ந் தேசிவனார் –பாங்குறவே
5. அங்கயற்கண் அம்மை அளித்தஅர சாட்சியினை
இங்(கு)அயற்கண் உள்ளார்கள் இன்பமுறப்– பொங்குபெருங்
6. கங்கைச் சடையைக் கரந்து கதிர்மகுடம்
துங்கமுற வேஅணிந்து துள்ளுகயல்_தங்குகொடி
7. என்ன உயர்த்தி இருந்(து)ஆண்ட முன்னாளில்
மன்னு தடாதகையின் வான்வயிறு–பன்னுகரு
8. உற்றதுபோல் ஆக உயர்சோம வாரத்தில்
கொற்றவர்கள் நின்று குதூகலிக்க–முற்றியநால்
9. வேதம்மு ழங்கஉயர் விண்ணவரும் மண்ணவரும்
ஏதம்அற்ற(து) என்ன எழுந்தவன்காண்–சோதிமணிச்

10. சொக்கலிங்க னார்அரு ளும் தூவேல் வளைசெண்டு
மிக்க(து)எனப் பெற்ற விமலன்காண் –தக்கவடி

11. வேலைக் கடல்சுவற விட்டபெரு மான்முத்து
மாலை அளித்த மகபதியின்–கோலமுடி

12. சிந்த வளைஎறிந்த செல்வன் மகமேரு
நந்து நிதிபெறவே நற்செண்டை–உந்தியவன்

13. கோழியையும் பாடிஅதன் குஞ்சையும்பா டேன்என்ற
வாழியபொய் யாமொழியை வாழ்விக்கத்–தோழமையால்

14. வெங்கா னகம்நடுவண் வேடுவனாப் போந்தருளி
அங்(கு)ஆர்விற் பன்னனனி அச்சமுற–இங்(கு)ஆரும்

15. முட்டையையும் பாடுகென முன்னவன்சொல் ‘‘பொன்போலும்’’
சிட்டஉயர் வாசகத்தைச் சேர்த்தவன்காண்–மட்(டு)அவிழும்

16. கொன்றை மலர்த்தாமக் கோவினுக்(கு) உயர்பிரமம்
அன்று மொழிந்த அமலன்காண்–துன்றியசீர்

17. வெள்ளிக் கிரியான் விளங்கும்உமை அம்மையினைத்
தெள்ளிஇரு கூறாக்கிச் சேர்ஒருகூ(று)– உள்ளியே

18. வாமபா கத்(து)அமைத்து மற்றொருகூற் றைஒருசீர்ச்
சேமக் குழவியாச் செய்தருளி–ஆமவர்க்கு

19. ஞானசத்தி யைமனத்துள் நல்கிஇச் சைகிரியை
ஆனசத்தி யும்படைய தாஈந்து–வானக்

20. கயிலை வரையில் கருது வடபால்
அயில்ஆர்நற் கோயில் அமைத்து–மயில்ஒன்றை

21. ஈந்து கிருத்தியங்கள் ஈரிரண்ட னோ(டு)ஒன்று
தேர்ந்துமுறை செய்யச் செலவிடுத்தான்–போந்துமுறை

22. செய்யுநாள் பூவுலகில் சீரார்காஞ் சீபுரத்தில்
ஐயன்ஊ ரும்மஞ்ஞை ஆகஎனத்–தொய்யலுடன்

23. சிங்கன் பதுமன் திறல்தா ரகன்என்னும்
இங்கம்உடை யார்மூவர் ஏத்தவே –துங்கம்உறச்

24. செய்சூரன் நல்தவத்தைச் செந்தா மரைஅயனும்
பையார்பாம் புப்பாயல் பண்ணவனும்–ஐஊர்தி

25. ஏறு மயிலுக்(கு) இயம்பிடவே அம்மயிலும்
வீறுகொன்டு சென்று விமானம்ஒன்று–தேறிஎடுத்(து)

26. அங்நால் வரையும் அழைத்து வருகஎன
முன்னாக ஏவி முகமலர்ந்து –சொன்னால்வர்

27. வந்தவுடன் அன்னவரை மாகணத்தில் சேர்த்(து)அவரின்
பந்தம்அறுத்(து) இன்பமுறப் பாலித்துச் –சிந்தைமகிழ்ந்(து)

28. ஏயும்நாள் ஓர்நாளில் இந்திரனும் வானவரும்
தூயஅன வாகனனும் தொல்ஆழி– மாயவனும்

29. வந்து குகனை வணங்கி இனிதிருந்தார்
அந்தநாள் சூரன்அடைந்(து) அம்மயிலை–முந்துநாள்

30. பங்கயம்கா ணாது பரமன்அடி கட்குவிழிப்
பங்கயத்தை அர்ச்சித்த பண்புமிகு–சங்(கு)ஜயனால்

31. சிட்டித் தொழில்செய் திசைமுகனா லேயுற்ற
நட்டத்தா லேபகைமை நண்ணியே–முட்டத்தான்

32. வாகனமும் வேதன்ஊர் வால்அனமும் உம்மைஅலர்
சாகசத்தால் சொற்ற(து)எனச் சாற்றவே–வேகமாச்

33. சென்று கலுழனையும் திண்அனத்தை யும்பொருது
கொன்று விழுங்கிவரக் கூர்வேலான் –நன்றுசெய்தாய்

34. பூவுலகம் சென்(று)அங்கண் பொன்நாட ரேமுதலா
யாவுலகும் போற்றும் இயல்மிகுசீர்த்–தேவுசிவன்

35. சிந்தை மகிழும் திருப்புத்தூ ரின்குணபால்
அந்தம் உறும்அரசா ரண்யத்தில்–வந்துவரை

36. யாகக் கிடக்கஎன அண்ணல் அருள்புரிய
நாக மயூரமா நண்ணும்அதில்– யோகம்

37. புரியும் அடியார் புகழ அயனும்
அரியும் அறியாத அண்ணல் –புரிவேணி

38. ஈசன் நுதற்கண்ணில் எழுபொறிகள் ஓராறும்
வீசுகால் அக்கினியால் விண்நீரால்–தேசுமிகுந்(து

39. உற்ற சரவணத்தில் ஓராறு தீப்பொறியும்
முற்றிய ஆறு முதல்வனாய் –மற்றும்உயர்

40. காழி நகரில் கவுணியர்க்கு ஞானப்பால்
தாழி அளித்தநற் றாய்அணைந்து–வாழியஎன்று

41. ஓதி உருஆறும் ஒன்றாகச் சேர்த்தணைக்கக்
காதல் உறும்அடியார் கண்களிப்பச்–சோதித்

42. திருமுகங்கள் ஆறும் திகழ்கரம்ஈ றாறும்
மருவ உமைமகிழ வந்தோன்–கருணையே

43. சீர்மேனி ஆனான் திகழ்தோ மரம்கொடிவாள்
போர்க்குலிசம் அம்பு புகழ்மிகவே–ஆர்அங்கு

44. சம்மணிநல் தாமரையும் தண்டம்வில் வன்மழுவேல்
அம்மஇவை ஆயுதமே யாவுடையான்–மும்மை

45. மலம்நீக்கு வான்சேவல் வான்கொடியான் வள்ளி
நலம்ஆக்கும் தெய்வஉவா நாரிப்–பலவாகு

46. இந்திரற்கு விச்சுவநல் இன்உருவம் காட்டிஅவன்
தந்தமகா மண்டபத்துத் தான்இருந்து–முந்தும்அவன்

47. செய்மஞ் சனம்ஆடும் தேவசே னாபதியான்
கைகள்ஈ றாறுநறுங் கண்ணுதலான்–வெய்யசூர்

48. மேன்மை யுறஅவனை வேலால் இருபிளவாம்
பான்மை அருளித்திண் பாதிஉரு –வான்மயிலும்

49. பாதிஉருச் சேவலுமாம் பண்பருளி அம்மயிலை
ஓதும்உயர் வாகனமா ஊர்ந்(து)அங்கண் –மாதுவசம்

50. சேவல் எனவுயர்த்தும் செல்வன் அடியவருக்(கு)
ஆவ லுடன்அருள்செய் அண்ணல்காண் –தேவர்

51. அரசு பெறுதெய்வ யானை அணைந்தோன்
பிரசச்சிங் தூரத்தார்ப் பெம்மான் –கரடமிகு

52. வள்ளல் உதவிசெய வள்ளி யினைமணந்தோன்
கள்ளார்பூ வேங்கைக் கடிதருவாய் –மள்ளர்

53. மருள உருக்கரந்தோன் வானோர் இடுக்கண்
வெருள அருள்செய் விமலன்– அருளினால்

54. கந்தபுரா ணம்பாடும் கச்சியப்ப தேசிகர்க்கு
முந்தும் அடியெடுத்து முன்அருளி– அந்தஉயர்

55. நூலைஅரங் கேற்றுநாள் நுண்புலவர் சொல்வழுவை
வாலறிவ னாகஅவை வந்தவர்கள் –சீலமுடன்

56. ஒப்பும்வண் ணம்அருளும் ஒப்பில் தனிமுதல்வன்
செப்புதிறல் தாடகையைத் திண்கரனை=இப்புவியில்

57. ஏழு மரத்தை இயல்பகனை நீலியினை
வாழு விராதனை வாலியைச் –சூழுமுடி

58. பத்துடையா னைத்தடிந்த பண்பன் மருகன்நலார்
நத்தும் எழில்புயம்கொள் நல்லோன்வண் –சித்தமுறு

59. கார்மருவு சோலைசூழ் காழிக் கவுணியரின்
சீர்மருவு செல்வக் குலம்சிறப்ப –வேர்மருவு

60. சம்பந்த னாய்உதித்துச் சைவசம யம்வளர
வெம்பந்தம் ஓட வியன்தமிழ்ப்பா –சம்படியில்

61. சாத்தும் தகைமையினான் தண்கூடல் கூன்அரசன்
ஏத்துதிரு நீறணிய எய்தினோன் –சீர்த்தி

62. அருண கிரியான் அணிபுகழைப் பெற்றுக்
கருணை புரியும் கடவுள் –வருணன்தான்

63. பெற்று வளர்த்த பெருமான்ஈ றாறுகரம்
உற்ற பெருமான் உயர் பெருமான் –கற்றைச்

64. சடையான் அருள்பெருமான் தையல் இருவர்
உடையான் இலைவடிவாம் ஒள்வேல் –படையான்தாள்

65. வேதச் சிலம்பினான் வெற்றி மயூரம்எனும்
சீதச் சிலம்பினான் தேவரெலாம் –ஓதுபலம்

66. ஆகுவான் வாச அணிநீப வாகுவான்
வாகுவான் பாந்தள்உறு மாமயிலான் –ஈகத்(து)

67. இறைவன் **ஒரு**வேல் **இரு** பன்னி **மு**ப்புள்
அரையன்**நால்** வாய்அனுசன்–பரைஆகத்(து)

68. **ஐந்து** முகன் மதலை **ஆறு** முகக்கடவுள்
சந்தநிறை **ஏழ்** இசையும் தான்அருள்வான்–வந்(து) **எட்டு**த்

69. திக்கும் தொழுபுத்தேள் செல்வம்**ஒன் பது**ம்ஈவோன்
சொக்கஅங்கம் **பத்(து)**உடைய தூயோன்மா நக்கர்

70. **பதினொரு**வர் போற்றவளர் பண்பன் அடியார்க்குக்
கதிதருநற் **பன்னிரண்டு** கண்ணான்–விதிநூல்

71. உரைத்தமுறை யேமீன உத்திரத்தில் சேறு
பொறித்தகொடி ஏற்றிப் புலவன்–அருத்தமுடன்

72. கொள்ளுதிரு நாளில் குரைகழல்கள் ஏத்துவரேல்
விள்ளும் உமதுவினை என்னப்–பள்ளிதொறும்

73. விட்ட திருமுகமே மேவும் திருநாளில்
செட்டிஉலாத் தெய்வத் திருநாளில்–கிட்டவந்து

74. வேதிக்கும் மானுடரை மேல்நிலையில் உய்வித்து
வேதியா மானுடரை வேதிக்கும்–தீதில்

75. திருநாளில் உம்பர் திருமகுடப் பத்தி
நிறைநாளில் ஏழுமுந் நீரும்–முறையே

76. சிகிவரைநற் பாக்கத்துச் சேர்ந்ததாம் என்ன
மிகஒலிசெய் நாளில் விளம்பும்–தகவுடைய

77. மாமஞ்ஞை யேமுதலாம் வாகனங்கள் மேற்பவனி
ஏமம் உறவருநல் இன்னாளில்

திருப்பள்ளிஎழுச்சி

–காமன்

78. பெறுதெய்வ யானையினைப் பேருலகம் ஏத்த
வருவள்ளி மானை மருவி–அருணன்

79. எழுமுன்னே அன்பர் இசைமறையின் ஆர்ப்பும்
பழுதிலா வீணைஒலிப் பண்பும்–விழ(வு)அறியச்

80. சாற்று முரசொலியும் சங்கஒலி யும்அடியர்
போற்றுமுரு காஒலியும் பொங்கிஎழக்–கூற்றினைமுன்

81. காதினான் மைந்தன் கடுகத் துயிலினைநீத்(து)
ஏதில்நான் மெய்ப்பொருளை ஏத்(து)அன்பர்–தீ(து)அறவே

82. பெற்றுப் பெருமையுறப் பேருலாக் கொள்ளநினைந்(து)

திருமஞ்சனமாடல்

உற்றஆன் ஐந்தும் உயர்பாலும்–முற்று

83. ததியும் பிரசமும் சந்தனமும் நீறும்

விதிநூல் கனித்தொகையும் மேலாம்–கதிஉதவும்
84. தண்பனிநீ ரும்இறைவன் சார்சரவ ணப்பொய்கை
வண்பனி நீரும் மகிழ்ந்(து)ஆடிப்–பண்புமிகு
85. ஆதிசைவர் நீடும்உயர் ஆகமத்தி லேஅரனார்
ஓ(து)இசைவில் செய்பூசை உட்கொண்டு

திருவாபரணம் புனைந்தருளல்

–கோ(து)இல்உயர்
86. பொன்தூச(து) ஆர்த்துப் புறம்கச்சு வீக்கிஇருள்
உற்றதென ஓதும் உயர்குழலை–முற்றுமறைத்(து)
87. அம்பொன் மகுடம் அணிந்து கதிர்முழுதும்
இம்பரினில் வந்த(து)என எண்ணவே–கம்படரும்
88. வச்சிரநல் தோடு வளர்ந்(து)இலங்க நன்னுதலின்
நிச்சம் உயர்திரு நீறணிந்து–மெச்சும்அடைக்
89. காய்அருந்திக் கந்தரத்துக் கண்ட சரம்அணிந்து
மேயமுத்து மாலை விளங்கஒளி–நாயகமாம்
90. செம்பரிதி என்னத் திகழ்மகரி நற்பதக்கம்
சம்(பு)அருளும் அக்கமணி தான்மலைந்து–நம்பரன்தன்
91. தோளிடைநற் கேயூரம் சூட்டிவலி ஆகமிசை
வாள்ஒளிசெய் மின்னல் வளைந்த(து)என்னக்– கோளறுநூல்
92. சூட்டிஅரை ஞாண்அரையில் தோன்ற மணிக்கடகம்
பூட்டிநவ கோளும் பொலன்கழல்கள்– வேட்((டு)அதனைப்
93. பற்றியதே போலப் பகரு நவமணிகள்
முற்றொளிசெய் நூபுரமும் முன்அணிந்து–கொற்றப்
94. பிரணவத்தை அன்பர் பெரிது நினைந்து
சரணம் எனத்துதிக்கத் தங்கும்–பெருநலவான்
95. வில்என்ன அம்பொன் வியன்திரு வாசியுற
மல்லர் கொடிதமுவு மாஉரத்துச்– சொல்லிய
96. கந்தம் கமழும் களபகத் தூரிஅணிந்(து)
அந்தம்இலா மேனி அழகதனை–முந்து
97. சுருதி மிகத்தேடித் தோன்றரியான் சோதிப்
பருதிநிலைக் கண்ணாடி பார்த்து–முருகுவளர்
98. மல்லிகை முல்லை மருக்கொழுந்தி னால்தொடுத்த
பல்இயலார் கோதை படர்ந்(து)இலங்க–மெல்இயலார்
99. இன்னலுற

திருத்தேரில் எழுந்தருளுதல்

.....மயில்மீ(து) ஏறி முர(சு)ஒலிப்ப
பன்னு முழ(வு)அதிரப் பண்புடனே–ஈன்னயம்சேர்
100. சங்கம் தொனிப்பஉயர் தக்கை குழல்பேரி
துங்க முழ(வு)அதிரப் பண்புடனே–பொங்க இசை
101. ஈாக சுரம்அதிர ஈாரதரும் தும்புருவும்
வேகஇசை பாடவரை வெம்முலையார்–ஆகத்(து)
102. எழுகளை ஈீங்க இருகவரி வீசப்
பழுதில் அடியார் பணிய–முழுதும்
103. அலக்கண்அற வந்திக்கும் அன்பர் பவத்தை
விலக்குவபோல் ஆலவட்டம் வீசத் –துலக்குமுறை
104. வல்லோர் மறைமுழங்க வான்புறவம் வந்தோனும்
கல்லேநல் தோணிஎனக் கண்டோனும்–ஈல்லஈிதி
105. ஆற்றிலிட்டுச் சம்(பு)அருளால் ஆரூர்க் குளத்தில்எடுத்(து)
ஏற்று பெருமானும் இறைசிவனைத்– தோற்று
106. ஈரிபரியே ஆக்க ஈடத்தும் பிரானும்
முறையேசெய் ஈூல்கள் முழங்கக்– குறைவின்றி
107. ஆண்ட அருணகிரி அண்ணல் திருப்புகழும்
காண்தகுசீர் ஓங்கிக் கறங்கஅருள்–வேண்(டு)அடியார்
108. பல்லாண்டு கூறப் பரந்து சயசயென்(று)
அல்லாண்ட கூந்தல் அணிமுலையார்–மல்ஆண்ட
109. திண்தோள்கள் கொள்ளும் திருட்டிபரி காரமா
வெண்தோட்டுக் கைகள் விரித்துப்பொன் தட்டில்
110. ஆலத்தி சுற்ற அணிமிகுவா யில்கடந்து
கோலப்பூம் பட்டுக் குடைநிழற்றச்–சீலத்தார்
111. விண்ணவர்கள் ஐந்தருவின் விண்பூ மழைபொழிய
மண்ணவர்கள் தன்ஈாமம் வாழ்த்தெடுப்பப்–பண்அமரும்
112. தெய்வானை வள்ளி திகழ அருள்மாரி
பெய்வான ஈாதன் பெரிதேறி

உடன்வரும் தேவர்கள் முதலியோர்

–மைவான
113. வண்ணன் களதமும் மாதேவன் ஏறுமழை
வண்ணன் உவனமும் மால்உந்திப்–பண்ணவன்ஊர்
114. அன்னமும்உ ருத்திரர்கள்ஆ(று)ஐவ ஏறும்ஒளி
பன்னிருவர் யந்திரமும் பால்ஈிலா– மன்னிவளர்
115. மானமும் அட்டவசு வான்இருடி ஓர்எழுவர்

ஆன இவர்வருநல் ஆதனமும்–மானமிகு
116. காரி இருவர் களிறும் புரோகதியும்
வீரர்ஒன்பான் தேரும்உயர் விண்இறைவன்–வாரணமும்
117. திக்கெட்டும் காப்போர் திகழும் நரர்விலங்கு
மிக்குயரும் கோள்கள் விளங்(கு)அரியும்
118. ஏழு மடவார் இலங்கு விலங்குபுள்ளும்
யாழின் முரிஅருளும் அண்ணல்ஊர் –மாழைமணி
119. முத்தூர்தி யும்வாய்மூர் முன்னவனின் கேடகமும்
அத்தன்அன்பன் ஏறும்வெள் ளானையும்–சித்தப்
120. பெருந்துறையில் கோயில்அமை பெம்மானின் ஏறும்
அரன்தோழன் கஞ்சிகையும் ஆரூர்ப்– பரனைஇராத்
121. தூதுவிட்ட பெம்மானார் சொல்லும்தொண் டத்தொகையுள்
ஓதிவைத்த நாயன்மார் ஊர்தியும்–கோதறுநல்
122. சீர்புகழைக் கந்தன்அடி சேர்த்தபிரான் கேடகமும்
கூர்ப்புக் குமர குருபரனின்–ஆர்ப்(பு)அறுகும்
123. காமன் அவந்திகையும் காந்தருவர் பைசாசர்
சேமவிஞ்சை யர்யோகர் சித்த(ர்)சுரர்–மாமகரம்
124. பூதர் கருடர் புகழ்சா ரணர்இயக்கர்
ஏதம்இல்விண் வாசர் இயல்உரகர்–மாதேவர்
125. ஏமம்உறு கோக்கள் இசைதைத் தியர்நிருதர்
ஆம்இவரும் பூவில்பால் ஆழிஎனச்–சேமநிதி
126. ஆகும் திருநீ(று)அணிந்துவரு தொண்டரும்
வாகு மிகுபுயத்து மாறனும்வண்–ஈகைமிகு
127. சோழனும் சேரனும் சொல்லுமறை யோர்களும்
கோழிப்ப தாகைக் குமரன்உரு–தோழமையால்
128. தீண்டும் பெரும்பேறு செய்யுமறை வாணரும்
மாண்டல் உறவர

திருச்சின்ன முழக்கம்

மா வண்வடிவேல்– ஆண்டகை
129. வந்திப் பவர்இடர்கள் மாற்றத்தேர் ஊர்ந்துவந்தான்
அந்திப் பிறைணியும்அண்ணற்கு–முந்துநாள்
130. ஞானப் பொருள்விளக்கு நம்குகன்வந் தான்தேவு
சேனைக்(கு) இறைவந்தான் செய்யகான் –மானுக்கு
131. இறைவந்தான் காழி யினில்வந்தான் வந்தான்
கறைமேனிக் கைமுகத்தான் தம்பி– முறையேவந்
132. தான்மூகை நீக்கும் சரவணப வன்வந்தான்

நான்முகனும் மாலும் நயந்தறியா– வானவன்செவ்
133. வேள்வந்தான் என்ன வியன்திருச்சின் னம்ஆர்ப்ப

குழாங்கள்

வாள்விழியார் ஆட வருகுழுவுக்(கு) –ஏழ்கடலும்
134. ஒப்பில்லை என்னஉல(கு) உய்யமறு(கு) எய்தினனால்
செப்புகலை விஞ்சையரின் தேவியரும்–மைப்படியும்
135. நாட்டத்துக் கந்தருவ நல்லாரும் கின்னரரின்
ஆட்டியரும் நாகர் அரிவையரும்– கோட்(டு)அசுரர்
136, கன்னியரும் கிம்புருடர் கன்னியரும் சாரணரின்
கன்னியரும் பூதலத்துக் கன்னியரும்–மன்னும்அயில்
137. தாரகற்செற் றோனைத் தாங்கத் தவம்செய்த
சீரகத்தைக் கண்டுதெரி சிப்பம்என– ஓரகத்தே
138. எண்ணி அடைமயில்கள் என்ன முருகன்எழில்
வண்மை அறிய வருமடவார்–நண்ணுமனை
139. முன்றிலில்மா டத்தில் முகப்பில்திட் டையில்செய்
குன்றினில் சாலத்தில் கோபுரத்தில்–மன்றில்
140. பலாப்பழத்தில் ஈமொய்க்கும் பான்மையே போல
உலாப்போதும் அண்ணல் உளத்தில்–உலாப்போதும்
141. தெய்வத் திருவருளாம் செந்தேனை வான்கயலாம்
மைவைத்(து) அகன்றவிழி வண்டுகளால்–உய்யஉண்பார்
142. வானோர் இறைவன் மகனை வழுத்துவார்
ஏனையோர் பெண்ணை இறைஞ்சுவார்–வானீர்க்
143. கங்கை மதலைதோள் கண்டு தமதுவரைக்
கொங்கையினை நோக்கிக் குழைவர்அகம்–பங்(கு)உயரும்
144. வள்ளிதெய்வ நாயகியை மாமயிலை அன்பர்எலாம்
உள்ளும்ஈ ராறுகணை ஒள்வேலை–வெள்ளைநீறு
145. ஏய்ந்த திருநுதலை இன்முகத்தைப் புன்முறுவல்
வாய்ந்த மலர்வாயை வாகுவினை–ஆய்ந்தமராத்
146. தாமத்தை ஆயுதங்கள் தங்கு மலர்க்கரத்தை
நாமத் திருவடியை நண்எழிலைக்–கோமகனைக்
147. கண்ணார நோக்கிக் கசிந்து வியந்(து)உவப்பர்
அண்ணாந்து நோக்கி அழ(கு)என்பர்–மண்ஆளும்
148. சேயோன் உவக்கும் திருத்தேர் உலாக்காண
மேயோமே எங்கள்தவம் மேல்என்பர்–நேயமிகு
149. கார்ஊர்தி என்னவே கண்ஓ ராயிரம்பெற்
றார்அவரே மேலாம் அமரரென்பார்–வீரமயில்
150. ஏறுவான் பார்த்(து)உயிர்த்(து) எம்மைஅணை வீர்என்று

கூறுவார் மால்கொண்டு குன்றுவார்–சேறுமிகு

151. மாலை அணிஎன்பார் மாலை அழிஎன்பார்
வாலைப் பெருமானே வாஎன்பார்–சீலக்

152. கொடிகள் இருவர் குலவு பெருமான்
படிஅருள்வர் என்று பணிவார்–அடிகளுக்(கு)

153. எம்கணீர் மஞ்சனமோ எம்தொடிகள் பூசனைக்குத்
தங்கு திருப்பள்ளித் தாமமோ –இங்(கு)உறையும்

154. காமன் எமைவருத்தல் காணும்இறை வாஎன்பார்
யாமம்முற்றும் எம்இடர்நீக் காய்என்பார்–சேமத்

155. துகில்இழப்பார் மாரன் தொடுகணையால் துன்பம்
அகம்உறவே ஒன்றும் அறியார்–மிகவெயர்வை

156. சிந்துவார் கொங்கை திரண்டுவிம்ம வஞ்சிஇடை
பந்(து)அதனைத் தாங்காது பாரத்தால் –மந்திரம்உண்

157. புல்லோனைப் போலப் புரள வருந்துவார்
நல்லோனே எம்முடைய நாணைஅழித்(து)–இல்இருவா

158. உம்முடைய நாணை உவந்(து)ஆகத் தேஅணிந்தீர்
வெம்மலையில் செண்டை விரட்டினீர் –எம்முலையில்

159. செண்டை விரட்டுவீர் செவ்வாய் திறந்(து)ஒருகால்
அண்டை வருவேன்என்(று) அறைந்திடீர்– எண்திசைக்கும்

160. மிக்கான செம்மலே வேலாஎன் பார்

பேதை.(வயது 5–7)

உருவில்

மிக்கார் இவருள் விளங்(கு)ஒருத்தி –தக்க

161. பருவச் சிறுபேதை பார்மகன்தன் பாணம்
மருவப் பெறாத மடமான்– உருவினில்

162. ஒப்பற்ற காளையர்கள் உள்ளம்உறா மாமயிலாள்
செப்(பு)அழ(கு)ஓர் தெய்வஉருக் கொண்டென்ன–இப்புவியில்

163. ஏய்ந்ததிருப் பாவை இனியமலர் ஓதிமம்நீர்
வாய்ந்த வளைமருவா வண்தரளம்–ஆய்ந்தமலர்

164. பூத்தறியா வஞ்சி புகழும் மணிச்சுரங்கம்
வாய்த்த(து)அறி யாதஇள மாணிக்கம்–ஏத்தருசீர்க்

165. கொம்(பு)அறாத் தேறல் குறைவில் மருக்கொழுந்து
அம்(பு)அறா மாரன்எடா அம்கன்னல்– வம்(பு)அறாச்

166. சோலை பொதியமலை தோன்றும் உயர்தென்றல்
வேலையிடைத் தோன்றாத விண்அமுதம்–பாலையுணப்

167. பாவையினைத் தோன்றாப் பயோதரத்தில் சேர்த்தணைப்பள்
ஆவலுடன் சித்திரவா ழைக்கனியைத்– தாவறுசீர்

168. வன்னிக்குக் காட்டி மகிழ்(து)உண்ணச் சொல்லுவாள்
துன்னு புளகத்துத் தோன்(று)உருவைத்– தன்னுடனே

169. சிற்றில் அமைத்துத் தெருவில் விளையாட
உற்(று)அணை வாய்என்(று) உரைசெய்வாள்–கொற்றமுலை

170. பால்அருந்து கின்றதிலை பாவைமருந் தூட்டினால்
பால்அருந்தும் என்று பகருவாள்–ஞாலமிசை

171. கூர்த்த மதியிலார் கொண்டுசெயும் ஈற்றொழில்போல்
ஆர்த்து முடியா அளகத்தாள்–தீர்த்தத்துப்

172. பங்கயங்கள் என்னப் பகரும் இணைவிழியாள்
திங்கள்என ஓதும் திருமுகத்தாள்–தங்குகுழல்

173. என்ன இசைக்கும் இளமழலை வாயினாள்
துன்னுவித்தில் மாமரங்கள் தொக்கதுபோல்–முன்னநெடு

174. மால்செவியின் உள்ளே மறைந்தமது கைடவர்போல்
வாலிஎய்ய ராமன் மறைந்ததுபோல்–வேலை

175. ஒளித்தமைநா கம்போல் உமைஇறைவன் வேணி
ஒளித்த பகீரதிபோல் உம்பர்– களிக்கும்இறை

176. அம்போரு கத்(து)ஒளித்த ஆகண் டலன்போல்
மொய்ம்(பு)ஏறத் தோன்றா முலையினாள்– பைம்பொழில்வாய்

177. மன்னு கொடிப்பந்தர் மணப்பந்த ராவாவி
உன்னும் அரக்காம்பல் உயர்தீயாத்–தன்னுடைய

178. கிள்ளையே வேட்டற் கிரியைசெயும் அந்தணராக்
கள்ளையே நெய்யாக் கடிவிரவு–வெள்ளைநிறப்

179. புன்னை அரும்பே பொரியாகப் பொற்பாவைக்(கு)
உன்னுமணம் செய்யும் உயர்காலை–மன்னுவேல்

180, வேந்தன்வந் தான்தேவ வேழம் உவந்தணையும்
காந்தன்வந் தான்என்னும் காகளமும்–தாந்தமென

181. கிண்ஒலிசெய் பல்லியமும் கேட்டு முலைத்தாயர்
விண்ணவனைச் சேவிக்க மேவினரால்–புண்ணியத்தாள்

182. தாயர் தொழப்பார்த்துத் தானும் தொழு(து)இறைஞ்சி
ஆயஇவர் சிற்றில் அடைந்தனரால்–தூயஎனச்

183 சிற்றில் சிறுசோ(று) உகந்தோ சிறியனேன்
கற்றகழற் காய்ஆடல் கற்கவோ–சொற்றகைய

184. அம்மான் இறைவன் அருளும் அணிமுருகன்
அம்மான் மகள்கணவன் ஆறுமுகப்– பெம்மான்இங்(கு)

185. ஏய(து) உரைமின் எனப்புகன்றாள் பேதைஉயர்
தாயர் அதுகேட்டுத் தையலே–ஆயஇ(து)என்

186. வேதியர்கள் ஆகமமாம் மெய்ந்நூல் முறையேசெய்
கோதில் அமுதுண்ணும் குமரன்தான்–தீதுறுநின்

187. சில்அடிசிற் காஇங்குச் சேருவனோ முத்தொழில்செய்

வல்ல பெருமான் மறைப்பெருமான்–சொல்லுகழற்

188. காய்ஆட இங்ஙண் கடிதில் அடைவானோ
ஆய்இவ்வா(று)ஓத வணங்கும்பின்–மேயதற்குக்

189. காரணம்ஏ(து) என்னக் கடிஉலாப் போந்தான்என்(று)
ஆரம்உடை ஆயர் அறைந்தனரால்–பேரமுதம்

190. தாவில் திருத்தேரில் தங்கும் இளையோனை
யாவன் எனக்கேட்டாள் அன்னைமார்–தேவரது

191. சேனை இறைஎன்றார் தெய்வச்சிலம்பு வள்ளி
மானைஎவர் என்றாள் மனைஎன்றார் –வான்அயிலை

192. என்என்றாள் கூர்வடிவேல் என்றார் சிகாவளத்தை
என்என்றாள் மாமயில்என்(று) ஏத்தினார்–அன்னதனைத்

193. தத்தையுடன் வைத்துவிளை யாடத் தகவுடைய
அத்தனிடம் வாங்கி அளியும்என்றாள்–கர்த்தனும்அவ்

194. வாகனமா ஊரும்இள மாமயிலை ஈவானோ
ஏ(கு)அனையே என்ன இருகணீர்–மாகதிர்கள்

195. வீசும் தரளம்போல் விட்டாள் இறைவனும்அவ்
ஆசில் தெருஅகன்றான்

பெதும்பை(வயது. 8–11)

அங்கொருத்தி –பேசும்

196. பருவப் பெதும்பைஉயர் பார்மகன்தன் பாணம்
மருவ நினைக்கும் மடமான்–உருவத்துச்

197. செந்தா மரைத்திருவின் செவ்வி வளர்அன்னம்
பைந்தா(து) உகாத பருஅரும்பு– கந்தரம்கண்(டு)

198. ஆடாத மஞ்ஞை அழையாத கோகிலம்
வாடாத மன்மதநூல் வாசிப்பாள்–கோடாத

199. வாய்சரவ ணத்தில்உயர் அண்ணல்உருக் கூடுதல்போல்
ஏய முடித்த இருங்குழலாள்–தூயநுதல்

200. வெண்பிறையே என்ன விளங்குவாள் சேல்விழிகள்
தண்சுரும்பே என்னும் தகையாள் –வெண்சங்கம்

201. என்னுமணி கண்டத்தாள் என்பினைப்பெண் ஆகச்செய்
மன்னன்கைத் தாளம்போல் வான்கமுகில்– துன்னும்இளங்

202. காயைப்போல் புற்றில்உறு கட்செவியைப் போல்சிறிது
தூயமுகம்காட்டும் துணைமுலையாள்–ஆயஒளி

203. வெங்கதிர்க்கும் இல்லைஎன மேவும்இள மூரலாள்
செங்கைகைகள் மாந்தளிர்போல் செம்மையாள்–துங்கமணம்

204. வேட்டுத் தனதுகிளி மென்மணத்தை நோக்கிஉளம்
வாட்டம் அடைந்து வருந்துவாள்–ஈட்டமாய்

205. வண்டு பயிலும் மலர்முகத்தாள் மாளிகையில்
தொண்(டு)இயற்ற மன்னும்உயர் தோழியரோடு–அண்டபதி

206. நந்தும்உயர் மாடத்து நாட்(டு)அம் மனைகழங்கு
பந்துபயில் காலை பண்புடனே–சந்தநிறை

207. ஓவியம் தீட்டும் ஒருவன் வரக்கரிய
காவியங்கண்ணி கழறுவாள்–ஓவியனே

208. தோகை வரைவளரும் தோன்றல் திருவுருவை
மாகயி லாயன் மகன்உருவை– வாகையுறு

209. சேவற் கொடியானைச் சீரார் படத்துவரைந்(து)
ஆவல் உறும்எற்(கு)அளிஎன்றாள்–மாவலனும்

210. இப்படியன் இவ்வடிவன் இக்குணத்தன் என்றெழுதிச்
செப்பமுடி யாதான் திருவுருவை– மெய்ப்புலவ

211. நாம இறைவனை நாகங்களுக்(கு) இறையை
மாமறையால் தேடரிய மன்னவனை–யாம்எழுத

212. வல்லோமா ஆயினும்என் மாதே உனக்(கு)அவனை
நல்லார்கள் சொல்லுவபோல் நாட்டியே– ஒல்லையினில்

213. ஈவேன் எனவுரைத்(து) எம்பெருமான் நல்லுருவை
ஓவிமாத்தீட்டி உவந்தளித்தான்–தேவியரை

214. யார்என்றாள் மானின் அமரர் பெருமானின்
சீர்உயரும் மக்கள் தெரிஎன்றான்–நாரியரைப்

215. பார்த்துப் பெருமூச்(சு) எறிந்துபரன் பக்கத்தே
சேர்த்(து)அவ ளையும்எழுதச் செப்பினாள்– கூர்த்தமதி

216. கொண்ட கரவலவன் கூறுவான் கந்தன்அடி
அண்டஎல் லார்க்கும்எளி தாகுமோ–பண்டைநாள்

217. இல்லா வழியே இவன்எழுதி னான்என்றே
எல்லாரும் என்னை இகழுவார்–நல்லாய்கேள்

218. இன்(று)இறைவன் போதும் இனியஉலாக் காட்சியினில்
நன்றுநினைக் கண்டனனே நாளைஅவ்வா(று)–ஒன்றெழுதி

219. ஈவேன் எனவுரைத்(து) ஏகினான் ஓவியன்
மாவேள் மணித்தே ருடன்வந்தான்– பாவைமறு(கு)

220. ஏகிச் சகிகளுடன் எம்பெருமா னைஇறைஞ்சிப்
பாகனைய சொல்லுடையீர் பாங்கியீர்–நாகியரோடு

221. யானும் ஒருத்தியா இவ்விளைஞன் பாலிருக்க
ஏனாகா(து)என்ன இயம்பினாள்–மானம்உறு

222. தோழியரும் மாதே சொலும்அப்பன் காபாலி
வாழிஅனை யோநன் மலைநீலி– சூழும்அம்மான்

223. வெண்ணெய் திருடி விளங்குமுன்னோன் மாவயிறன்
அண்ணல்இவன் இப்பரிசுக் காகவோ–எண்ணுமயல்

224. கொண்டாய் மிகஎன்று கூறிஉடன் நகைத்தார்

வண்டாரும் கோதைஒன்றும் மா(று)உரையாள்–தண்தாரான்
225. உம்பர் பெருமான் உயர்குமரன் சேய்இளைய
நம்பன் திருத்தேர் நடத்தினான்

மங்கை. (வயது12–13)

–கும்பமுலைக்

226. கொங்கையாள் மாரன் குலவ விரும்பும்எழில்
மங்கைப் பருவமட மங்கையாள்–தங்கும்எழில்
227. களையர்க்கு மையல் கடுவாகும் நோய்ஈந்து
கூளியால் நோய்தீர்க்கும் கொள்கையாள்–வாளியான்
228. போகநூல் கற்றுப் பொருளறிந்து பூரிப்பாள்
நா(கு)இறைவன் தோள்அணைய நாடுவாள்–வேகமின்
229. காசினியில் வந்த(து)எனும் காட்சியாள் வாசவனின்
ஆசில் உயர்ஊர்தி அளகத்தாள்–மாசிவனின்
230. வேணி வளருமதி அன்ன வியன்நுதலாள்
நாணிஎனும் புருவ நங்கையாள்–மாண்எழில்சேர்
231. வள்ளி யினைப்பயந்த மான்விழிபோ லேஇறைவன்
உள்ளம் உவக்கும் உயர்அயில்போல் கள்ளவிழிச்
232. சார்அங்கம் கொவ்வைத் தனிக்கனிச் செவ்வாயாள்
சாரங்கி என்னமொழி சாற்றுவாள்– நீர்அங்கண்
233. தோன்று குழல்அனைய தோளினான் தோகைமலை
போன்ற தனத்தினாள் பூவாளித் தோன்றலுடல்
234. மானும் இடையினாள் வான்உயரும் ஓடையினை
மானும்அகல் அல்குலாள் வான்கதலி–மானும்
235. தொடையினாள் நான்முகனின் சோதிவளர் அன்ன
நடையினாள் பூஞ்சோலை நண்ணிப்–புடையினார்
236. சேடியர்கள் கூறத் திருஊசல் ஏறிமணிச்
சூடகங்கள் ஆர்ப்பத் துணைவிழிகா தோடநுதல்
237. வேர்வை அரும்ப வியன்நூ புரம்ஒலிப்பக்
கூர்விழியாள் ஆடிக் குதூகலித்துப்–பார்வரையான்
238. வண்மைஉயர் பாங்கியரால் கேட்டு மகிழ்காலை
திண்மையுடை வேலான் திருத்தேரில்– அண்மையுறும்
239. தொண்டர்க்(கு) அருள்புரியத் தோன்றினான் மங்கைஅடைந்(து)
அண்டர்க்(கு) அரியானை அஞ்சலித்தாள்–புண்டரிகத்
240. தாளான் மறுகு தனைக்கடந்தான் மாமயிலாள்
வேளாண் கணையால் மிகமெலிந்தாள் –தோழியர்கள்
241. மாதுக்(கு) அரசனைய மாமயிலைக் கொண்டேகிப்
போதுப் படுக்கை புகுத்தினார்–நாதன்

242. திருமாலை வேண்டும்உயர் செம்முலையாள் உற்ற
பெருமாலை கண்டு பிதற்றி–ஈறுமாலை
243. வாசம் புரியும்இடம் என்ன வளர்பெருமான்
நேசம் புரியும்உயர் நித்தனே–ஆசையினை
244. நீக்குவாய் என்னும் நிருமலா என்னும்இடர்
போக்குவாய் என்னும் புகழ்முலைகள்–நோக்கி
245. நெடி(து)உயிர்க்கும் தத்தையினை நீபோய் மயலைக்
கடி(து)உரைப்பாய் என்னைக் கழறும்–முடிசோரும்
246. இப்படி ஆகும் இவள்தன்னைத் தாயர் அடைந்து)
ஒப்பிலான் மாலை உனைமருவச் செப்புவேம்
247. மாலை அளித்(து)உன்னை மருவுவார் ஆகலின்நீ
மாலை ஒழிகஎன வாள்நுதலும்–சாலவே
248. ஆறினாள்

மடந்தை (வயது14–19)

அங்(கு)ஒருத்தி ஆயும் இழைமடந்தை
மா(று)இல் மதவேளின் வான்கரும்பு– கூறுமதன்
249. காமச் சுவைஅமிர்தம் காமப் பெருஞ் செல்வம்
நாமத் **திருத்தணி**யின் நற்சுனையில் –சாமக்
250. கருங்குவளை இல்வளரும் காமருபூந் தும்பி
பருங்கொன்றைக் காய்அளக பாரம்=–சுருங்குநுதல்
251. **விற்கோலம்** ஆனாள் விழி**ஆலங் காட்**டினாள்
மற்கோணம் எள்**பூ வணத்**தினாள்–சொற்பால
252. வெண்**முல்லை வாயி**னாள் மேவு**வஞ் சைக்களத்**தாள்
வண்முலைகள் **வல்லம்**எனும் மாண்இழையாள்–பண்மொழிகள்
253. பாலொடுதேன் **கூடலா**ள் பாரில்இடை **வஞ்சி**யாள்
மால்உதரம் **குற்றால** வாய்மையாள்–சாலவே
254. மாரன் உருவனைய **வஞ்சி**யினில் **காஞ்சி**யாள்
சீர்உறு**மா யூரம்**எனும் செவ்வியாள்–ஆர்அல்குல்
255. மா **நாகர் கோயில**ாள் வாழ்**கஞ்சன் ஊர்**அன்ன
சீநடையாள் சேடியினை நோக்கியே–நான்இரவில்–
256. பஞ்சமலர்ப் பாயல் படுத்(து)உறங்குங் கால்கனவில்
அஞ்சுகிற வேலினான் ஆறுமுகம்– எஞ்சல்இலாப்
257. பன்னிரண்டு செங்கைகள் பாரக் கதம்பமலர்
மன்னிஇவண் வந்தனரால் மாசகன்று–துன்னுநீர்
258. **ஆர்**என்றேன் எந்தை அணிமுடியில் **ஆர்**என்றார்
நீர்என்றேன் **என்பிறப்பு நீர்**என்றார்–நீர் **எந்த**
259. **ஊர்நா(டு)**என் றேன்**நல் உறவோநா(டு)** என்(று)உரைத்தார்

பேர்**மாதே வா**என்றேன் பின்னும்அவர்–ஓர்**மாதே**

260. **வா**என்(று) உரைசெய்தார் வானவா **சம்போகந்**
தாஎன்(று) உரைத்தேன்அச் சண்முகனும்–ஆஇன்று

261. **சம்போகம் தா**என்று சாற்றினார் அவ்வேளை
வெம்பாகாம் சொல்லால் விழித்திட்டேன்–நம்பிஇதற்(கு)

262. உற்ற பலனை உரைஎன்றாள் சேடியும்உன்
வெற்றி மயூரமலை மேவினோன்–சொல்தகைய

263. வள்ளல் உனைப்போற்ற வந்தான்என்(று) என்கருத்தில்
உள்ளுகிறேன் என்ன உவந்திருந்தாள்–கள்ளமலர்

264. மாலையான் மாயூர மாமலையான் அவ்வழியே
கோலச் சயந்தனத்துக் கூடினான்–சாலஇவள்

265. நின்று கரம்குவித்தாள் நீள்காமப் பித்(து)ஏறி
ஒன்றும் அறியா(து) உருகினாள்–தென்றல்வேள்

266. வில்அம்பு பட்டு மெலிந்தாள்முன் நாள்கண்ட
நல்ல கன(வு)எண்ணி நலிந்திட்டாள் –சொல்லுவளை

267. நீங்கினாள் கந்தன் நிமலன் புயத்துக்கா
ஏங்கினாள் ஆறுமுக எம்பிரான்–ஆங்கிருந்து

268. செவ்வேள் திருத்தேர் செலுத்தினான் அன்னைஅணைந்(து)
இவ்வா(று) இரங்கும் இளமகளின் செவ்விஅறிந்(து)

269. ஆயசேயை நோக்கி அணிஆர் இருமனையை
மேயநீர் சேயை விரும்பினிரோ–ஆய இவள்

270. கைவளைஇல் லாதுமது கைவளைகள் மேவாதோ
மெய்வளரும் மேகலையை அன்றிஉமக்(கு)–ஐவளரும்

271. மேகலைஇன் றோமகளின் மென்துகில் அல்லா(து)உமக்(கு)
ஆகும் துகில்ஒன்(று) அறியீரோ–வேகமா

272. இத்தொழிலைச் செய்யவோ இங்கணைந்தீர் என்(று)அறைந்து
தத்தைமொழி அன்னை தன(து)இல்லம்–நத்தினாள்

அரிவை(வயது20–25)

273. அன்ன தெருவில் ஆரமுத மாம்அரிவை
பன்னுகச்சி ஏகாம் பரநாதர்–மன்னிவளர்

274. சூத மரம்வளரும் தோகை களகண்ட
மாதேவன் அஞ்செழுத்து வாழ்(வு)உறாப்–பாதகரின்

275. நெஞ்சம் அனையகரு நீள்குழலாள் சம்புகள
நஞ்சனைய கண்ணினாள் நாடுமுகம்–பஞ்சமலர்ப்

276. பாணத்துள் ஒன்றனைய பண்பினாள் ஆடிஎனக்
காணத் தகும்செங் கபோலத்தாள்–மாண்அத்தன்

277. வேலைவிடம் உண்டநாள் விண்ணோர் இனி(து)உண்ட

மால்அமுதம் ஒத்தசுவை வாயினாள்–ஆல்அடியன்
278. முப்புரம்தூ ளாக முதிர்ஞாண் வளைத்தஞாள்
செப்புஞகை அன்ன சிறுஞகையாள்–அப்பில்உறு
279. சங்(கு)அன்ன கண்டத்தாள் சார்கச்(சு) அணிந்துபொன்போல்
பொங்கு பசலை புகுந்துதிரண்(டு)–அங்கத்தைச்
280. சின்னம் எனஇசைக்கும் செம்முலையாள் சேடியர்கள்
உன்னுபலர் நிற்க உயிர்ச்சேடி–தன்னைஅழைத்(து)
281. ஓங்கியசெய் குன்றின் உள்இருத்தி ஆவலொடும்
ஆங்கவளை மஞ்சனநீர் ஆட்டியே–வீங்குவிரைச்
282. சந்தனத்தைப் பூசினாள் தன்ஆ பரணம்எலாம்
அந்தமிக்க(து) என்ன அவட்(கு)அணிந்தாள்–பைந்தொடியைக்
283. கட்டி அகமகிழ்ந்தாள் கைத்தாம்பூ லம்கொடுத்தாள்
மட்டில் மகிழ்ச்சியுடன் வாழ்த்தினாள்–கிட்டப்போய்
284. வஞ்சியே என்றன் மனத்தில் விளைகருத்தைப்
பஞ்சாக ஞான்படும் பாடதனைக் –கஞ்சமுகம்
285. ஆ(று)உடையான் பாலே அறைவாய் எனஉரைத்தாள்
மாறுசொலாச் சேடியும்அம் மங்கையைப்பார்த்(து)–ஆறுமுகப்
286. பெம்மான்மா யோன்மருகன் பேருலா ஞாளைஇவ்வா(று)
அம்மவரு வான்என்(று)அறைந்திட்டாள்– கொம்மைமுலை
287. ஆங்கதுகேட்(டு) அல்குல்வேள் ஆசை இனும்விரிய
வீங்குமுலை விண்அடைய மெய்ம்மயிர்க்கூச்(சு)–ஓங்கியே
288. மன்னிய காமம் வளர்காலை மாலைவர
என்ன மறலிநிறம் இந்நிறமோ– மன்னும்அவன்
289. என்றன் உயிர்குடிக்க இங்குப் பொருந்தினனோ
குன்றவேள் சிந்தை குடியிருக்கத்–தென்றல்வேள்
290. வில்அம்(பு)என் ஆகத்தில் மேவுவ(து)என் என்(று)உரைப்பாள்
வல்அம் புலியின் வளர்ஒளியை–நல்அம்பாச்
291. சுட்டதெனக் கூறுவாள் தோன்றல் நுதல்அழலால்
சுட்டமதன் வாளி தொடுப்ப(து)என்னோ–இட்டப்
292. பொதிய மலைபிறந்த பூங்காற்(று)என் மேனி
உதிரம் அருந்துவ(து)என் உம்பர் –பதியினிடம்
293. என்நிலைமை சென்றுரைப்பீர் என்றுரைப்பாள் சேடியரை
இன்னனைய துன்பத் தினைஆளும்–கொன்நெடுவேல்
294. வேந்தன் தன(து)அடியே மெய்ப்புணையாக் கொண்(டு)இரவாம்
ஏந்தற் கடலை இகழ்ந்(து)இகழ்ந்து–நீந்தினாள்
295. காலை எழுந்து கடன்கள் முடித்(து)இறைவன்
மாலை விரும்பி மறுகு)அடைந்தாள்–வேல்ஐயன்
296. நாடுதிருத் தேர்கண்டு ஞாளைவரும் என்றுசொன்ன
சேடி யினைநினைத்துச் சேவித்தாள்–ஆடினாள்

297. பாடினாள் அண்ணல் இருபதங்கள் அம்சிரத்துச்
சூடினாள் தோத்திரங்கள் சொல்லினாள்–நாடிஅவன்

298. செய்யதிருத் தோள்சேரச் சிந்தித்தாள் இவ்வமயம்
ஐயன் திருத்தேர் அகற்றினான்

தெரிவை. (வயது20–31 .)

–நையும்இடை

299. மங்கை ஒருத்தி வளரும் தெரிவையாள்
பங்கயம் பங்கம் படைத்த(து)என–இங்(கு)அணைந்த

300. செந்திருவே யன்னாள் திகழ்நான் முகன்சிகுவை
நந்திவளர் வாணிஎனும் நாரியாள்–அந்திவணன்

301. உண்ட விடம்அனைய ஓதியாள் நீள்முடியில்
கொண்டபிறை யன்ன குளத்தினாள்–புண்டரிகம்

302. போன்ற இணைவிழியாள் பொன்குமுத வாயினாள்
ஆன்ற வருக்கை அணிமொழியாள்–சான்றகமு(கு)

303. ஆகும்கண் டத்தினாள் அம்பொன் கலசம்எனும்
மோகம் அளிக்கும் முலையினாள்–ஆகத்தில்

304. ஊரும் எறும்(பு)ஒழுங்கை ஒக்கும்உரோ மக்கொடியாள்
சாரும் துடிஅனைய தண்இடையாள்–தேரில்உறு

305. தட(டு)அனைய அல்குலாள் தந்திக்கை போல்குறங்காள்
மட(டு)அவிழும் கஞ்சம்எனும் மாஅடியாள்– இட்டமுடைப்

306. பெம்மான் மயூரகிரிப் பேராளன் தோளிணைகள்
கொம்மைமுலை சேர்கஎனும் கொள்கையாள்–அம்மைமிகு

307. வன்னியைமா யூரகிரி மன்னன்பால் தூதனுப்பிக்
கன்னல்இள வேளின் கணைபாய–மன்அந்திப்

308. போதுவர உள்ளம் புழுங்கி நெடி(து)உயிர்த்து
மாதவனை எண்ணி மனம்பதைத்துக் –காதலுறும்

309. சேடியரை நோக்கிச் சிறியேன் படுதுயரம்
கூ(டு)எவர்கள் ஆற்றிக் குறைதவிர்ப்பார்–மாடுவளர்

310. வேனிலா னையார் விரட்டுவார் என்றுரைத்தாள்
பால்நிலா அன்னமுகப் பண்பினருள்–மான்அனைய

311. சேடி ஒருத்தி திகழும்இசை யாழ்வாங்கி
நாடரிய வேல்இறைவன் நானிலத்தில்–தோடகங்கள்

312. மன்னும் உயர்வாவி வான்காழி நன்னகரில்
பன்னுசிவ பாதமனப் பண்புடையார்–இன்னலுறும்

313. தேசம் செழிக்கச் சிவன்அருளை வேண்டஅவர்
ஆசில் மனம்களிக்க அன்னவற்குத்–தேசுமிகு

314. சம்பந்த னாய்உதித்த தன்மையும் தோணிபுரத்(து)

அம்(பு)அனைய கண்ணாள் அருள்முலைப்பால்–உம்பரெலாம்

315. போற்ற அருந்தியதும் பொற்றாளம் பெற்றதுவும்
ஏற்றமுத் துச்சிவிகை ஏறியதும்–சாற்று

316. முயலகன்நோய் நீக்கியதும் முத்துவிதா னம்பெற்(று)
இயல்இசையால் பொற்பதிகம் ஏத்தி–வயல்சூழும்

317. வீழி மிழலை விமலன்பால் பொற்காசு
தோழமையால் பெற்றுச் சுருதிவனம்–வாழ்கதவம்

318. பூட்டியதும் தென்னன்உடல் பொங்குசுரம் நீக்கியதும்
ஏட்டை நெருப்பிட்(டு)எடுத்ததுவும்– தீட்டுதமிழ்

319. ஆற்றில்எதிர் ஏறவிடும் அப்பெருமை யும்கொடிய
கூற்ற அமணரைக் கூர்க்கழுவில்–ஏற்றியதும்

320. ஓடம் பதிகத்தால் ஓட்டியதும் புத்தநந்தி
மூடன் தலையில்இடி முட்டியதும்–ஏடகத்துச்

321. செங்கனிகள் ஏற்றியதும் சீர்சிவநே சர்மகளின்
அங்கம்பெண் ஆக அருளியதும்–துங்கஒளி

322. தன்னில் கலந்ததுவும் சார்இசையில் சாற்றினாள்
மன்னும் இர(வு)அகன்று வான்ஒளியான்–துன்னினான்

323. பல்லியங்கள் ஆர்ப்பப் பழுதில் குமரன்தான்
ஒல்லையினில் உற்றனன்என்று ஓங்குகிளி–சொல்லவே

324. வேள்யானை யன்ன விரைகுழலாள் அன்னவனின்
வாள்கணை யன்ன மதிமுகத்தாள்–வேள்கரும்பை

325. ஒத்தபுரு வத்தினாள் ஓங்குமுர சக்கண்ணாள்
கத்தும்அவன் காகளம்போல் காண்மொழியாள்–வித்தைமிகு

326. மாமகுடம் போலும் வனமுலையாள் மால்மகனுக்(கு)
ஏமம்உறு காலம்போல் ஏகினாள்–நாமவேல்

327. வேந்தன் திருவடியில் வீழ்ந்து வணங்கினாள்
சேந்தா என(து)ஆவல் தீர்என்றாள்–ஏந்தும்இழை

328. சொல்லும் இதுகேட்டுத் தோழி ஒருத்திஅவண்
சொல்லுவாள் மஞ்ஞைமலைச் சோதியே–வல்லாய்நின்

329. மாமலையோ எம்தலைவி மாமுலையோ நன்(று)என்று
வாமம்உறக்காண வந்திடாய்–நாமவேல்

330. நற்படையோ எம்தலைவி நல்விழியோ நன்றென்று
சொல்படையாய் இங்(கு)அணைந்து சொல்லுவாய்

331. வள்ளிமான் தாய்விழியோ மான்இவளின் வாள்விழியோ
உள்ளிஇவை யின்நன்(று) உரைத்திடாய்–தெள்ளுதமிழ்

332. நாதா எனஉரைத்தாள் நாதன் திருத்தேரில்
ஓதா(து)அகன்றதற்பின்

பேரிளம்பெண்(வயது32–40)

ஓர்வனிதை –பூதலத்துக்

333. காமன் தவத்தால் கடிதின் அடைந்ததிரு
மாமயில் பேரிளம்பெண் வாய்மையாள்–காமன்நூல்

334. கற்றுப் பயன்அறிந்த காரிகை வானழகு
பெற்ற மகளனைய பெட்பினாள்–உற்றமதன்

335. கைக்கணையின் நீலக் கணையன்றி மற்றவற்றால்
புக்க செயலறியும் பொற்பினாள்–மிக்கமலர்

336. சூடி னால்நுசுப்புச் சோரும் எனநினைந்து
தோடலர்கள் சூடாச் சுரியலாள்–வேள்தனையும்

337. கூற்றினையும் ஏவல்கொள் கூர்விழியாள் எண்ஒன்பான்
சாற்றும் இசைவெல்லும் தண்மொழியாள்–ஆற்றஇடை

338. தாங்குமோ என்(று)அறியச் சாய்ந்ததோ அன்றிஇடை
தாங்கா(து) எனஅறிந்து தாலம்உற–ஆங்கிருந்து

339. நோக்குகின்ற தோதன்னை நோக்கிஎதிர்ந் தோரைஎலாம்
தாக்கி அலுத்த தகைமையோ –மூர்க்கர்முன்

340. சொல்லுமொழி கேளாது துன்பமுற்றுப் பின்புகுனி
நல்ல பொருள்விளக்க நண்ணியதோ–வல்லதிசை

341. எட்டுச் சிலம்பைவெல எண்ணிக்காஞ் சீபுரத்தை
முட்டியதோ என்னும் முலையினாள்–வெட்டவெளி

342. ஆன இடையினாள் ஆலவட்ட அல்குலாள்
மான அனிச்சம்எனும் வான்அடியாள் வேல்முதலை

343. காலைபகல் மாலை கடிதின் அடைந்(து)இறைஞ்சும்
வேலை உடையாள் விமலன்அடி–சாலவே

344. அண்ணாமலையில் அருணகிரி யார்அணியும்
பண்ஆர் திருப்புகழைப் பாடுவாள்–பெண்ஆவாள்

345. வள்ளி எனும்தனது வன்னியினை நோக்கிஉயர்
வள்ளி மணாளன்தன் வண்புகழை–வள்அயில்ஆர்

346. பெம்மான் திருப்புகழைப் பேசெனச் சொல்லஅது
எம்மான் புகழை இசைக்குங்கால்–அம்மான்சேய்

347. வீதியினில் தேரில் விளங்கினான் பேரிளம்பெண்
காத லுடன்அணைந்து கைகூப்பி–ஓதிவரும்

348. சீர்புகழ்க் கூட்டத்தில் சேர்ந்து திருப்புகழால்
சூர்ப்படைவென் றானைத் தொழு(து)இறைஞ்சி –ஆர்ப்புடன்

349. செல்லும் குழுவுடனே தேர்நிலைக்குச் சென்(று)இறைவன்
வல்ல முருகன்அடி வந்தித்துச்–சொல்லிய

350. வான்பெருமை பேசி வளர்இறைவன் தார்பெற்றுத்

தான்பெரியள் ஆயினாள் சாரும்இவ்வா –றான்இறைவன்
351. பார்இறைவன் அண்டர் பதிஇறைவன் மாமஞ்ஞை
ஊர்இறைவன் போந்தான் உலா.

வாழி

வாழி மயூரகிரி வாழி முருகன்அடி
வாழி அவன்அடியார் வாழியவே–கோழிஅயில்
மாமயிலும் வள்ளி வருதெய்வ யானையும்
சேமமுற என்றும் சிறந்து

மயூரகிரி உலா

உரை,விளக்கம்

****

காப்பு.1

குறிப்புரை: செய்ய=சிறந்த. மயூரகிரி=குன்றக்குடி மயில்மலை. முருகப்பெம்மான்= அருள்தரு சண்முகநாதப் பெருமான்.பை அரவம்=படம்உடைய பாம்பு.நல்லபாம்பு. மா தங்க வண்ணத்தவன் =சிறந்தஞானமேயான ஒளிவடிவன்\ அழகிய பொன்னார் மேனியன். தோகையடி மாதங்க வண்ணத்தவன்=யானைமுகத்து அருள்தரு தோகையடி விநாயகர். குன்றக்குடி மலையாகிய மயில்மலையின் அடிவாரத்தில் எழுந்தருளியுள்ளவர் இவர்.இது காரணப்பெயர்.

பொழிப்பரை: சிறந்த குன்றக்குடி மயில்மலைமேல் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முக நாதப்பெருமானுக்குத் தூய உலாநூல் இயற்ற,படமுடைய பாம்பினை அணிகலனாக அணிந்த சிறந்தஞானமேயான ஒளிவடிவனாம் சிவபிரான் அருளியவனாகிய குன்றக்குடி மயில்மலையின் அடிவாரத்தில் எழுந்தருளியுள்ளஅருள்தரு தோகையடி விநாயகர் துணையாவார்.

விளக்கம்: குன்றக்குடி மயில்மலை நுழைவாயிலாகிய வளைவிற்கு எதிரே கிழக்கு நோக்கிச் செல்லும் உ.சிறுவயல் சாலையில்1.கி.மீ சென்று திரும்பி இம்மலையினைக்கண்டால்,மேலேறும் படிகள் மயில்தோகை போலவும்,மேல்தளம் மயிலின் முதுகு போலவும்,பெருமான் இம்மயிலின் முதுகில் இருசத்தியருடன் எழுந்தருளி இருப்பது போலவும்,திருக்கோபுரம் மயிலின் கொண்டை போலவும் கண்டு மகிழலாம்.

இலக்கணக் குறிப்பு: செய்ய–சிறந்த என்றபொருள்தரும் பெயரெச்சப் பண்புச்சொல். ஆமே–ஏகாரம் அசைநிலை.

காப்பு. 2

குறிப்புரை: வேலறாக்கையர்=வேல் ஏந்திய அருள்தரு சண்முகநாதப் பெருமான். பாலறாவாயர்=சிவஞானத்து இன்அமுதம் குழைத்தபால்அருந்தியதன் பயனாகிய இருவகை ஞானமும் வெளிப்படுதல் அறாத திருஞானசம்பந்தர்.

பொழிப்புரை: வேலினைப் பிரியாது ஏந்திய அருள்தரு ஆறுமுக அப்பன் மீது இயற்றும் உலாவிற்இருவகை ஞானம் வெளிப்படுதல் அறாத திருவாயராகிய திருஞானசம்பந்தர் துணையாவார்.

விளக்கம்: வேல்,ஞானத்தின் குறியீடு. முருகன் வேறு வேல்வேறு இல்லை. ''கடம்புசூடி உடம்பிடி ஏந்தி''என்பது சிலப்பதிகாரமாதலின் முருகனை ''வேல்அறாக்கையர்'' என்றார்.

பாலறாவாயர்: ''முற்றும் ஞானமே ஆனவள் முலைசுரந்து ஊட்டப்
பெற்ற பாலறா வாயன் வந்தான்'' –பெரியபு. 2125:3–4.

நூல்

கண்ணி1–2. (பொன்னுலகம்.....செல்வன்காண்)(மயூரகிரியான் பெருமைகள்)

குறிப்புரை:பொன்னுலகம்=தேவருலகம். வண்மையுற=அழகுற. செல்வன்=வீறுடையான்.

பொழிப்புரை:தேவருலகைக் காக்கின்ற தேவேந்திரனும், தேவர்களும், பெருமை பொருந்திய திருமாலும், நான்முகனும் அழகுற இவன் இன்ன நிறமுடையவன், இப்படிப்பட்டவன்,இன்னவகையன்,இன்னஉருவினன் என்று அறிந்துகூறும் வகையறியாத வீறுடையவன்.

விளக்கம் :வண்மையுற ....செல்வன்: '' இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே''–திருமு. 6. வினாவிடை. திருத்தாண். 10.

கண்ணி:2–9. (இப்புவியீல்.....எழுந்தவன்காண்)

குறிப்ரை:தத்தை=மீனாட்சி. வித்தகநூல்=அறிவுசார்நூல். கதிர்=ஒளி. துங்கம்=வெற்றி.

பொழிப்புரை:இவ்வுலகில் முத்துடையது என்று ஒளவை மூதாட்டியால் புகழப்பெற்றதும், மீனட்சியம்மை அரசாண்டதும், அறம் சிறந்ததுமாகிய பாண்டிநாட்டில், அறிவுநூல்கள் ஓங்கி வளர்ந்த தமிழ்ச்சங்கத்தால் உயர்வுபெற்ற ஒளியுடைய மதுரையாகிய நன்னகரில், அளவிடற்கரிய புகழ்மிக்க சிவபெருமான்,தனக்கு மனைவியாகிய அங்கயற்கண்ணி பக்குவமாக அளித்த அரசாட்சியை இங்கு அருகில் உள்ள நாட்டவர் அனைவரும் இன்புற, மிகப்பொங்கும் கங்கையைத் தன்சடையில் மறைத்து,ஒளிவீசும் திருமுடியை வெற்றி பொருந்தச்சூடி,துள்ளிஎழும் கயல் சின்னம் பொறித்த கொடியினை உயர்த்தி ஆண்ட முன்நாளில்,பெருமை பொருந்திய தடாதகைப்பிராட்டியார் மேலான கருவுற்றதுபோலாக,சிறந்த திங்கட்கிழமையன்று அரசர்கள் அனைவரும்

குதூகலிக்க,முதிர்ந்த நான்மறைகளும் முழங்க,விண்ணகத்தேவரும் மண்ணகத்தவரும் தம்துன்பம் அற்றதென்று போற்றத் தோன்றியவன் காண்.

விளக்கம்: சிவனுக்கு அங்கயற்கண்ணம்மை அரசாட்சியளித்தது:

"விடைக்கொடி யவற்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளாீராடியருளே"

–மீ.பி.த.நீராடல் 1–5 மகுடம்.

தடாதகைப் பிராட்டிக்கு மகனாக வந்தவன் முருகன்:

"தமராநீர்ப்புவனம் முழுதுஒருங்கு ஈன்றாள் தடாதகா தேவி என்றுஒருபேர்
தரிக்கவந்ததுவும் தனிமுதல் ஒருநீ சவுந்தர மாறன்ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்கொண்டதும் தண்டமிழ் அமுதம்
கூட்டுண எழுந்த வேட்கையால்"–மதுரைக்கலம்பகம். 93.

பெம்மான் முருகன் பிறவான் இறவான்"ஆதலின் தடாதகைப்பிராட்டியின்வான்வயிறு "கருவுற்றதுபோலாக"என்றும் முருகனை "எழுந்தவன்"என்றும் மரபு திரியாது கூறினார்.

கண்ணி :9–16. (சோதிமணிச்–அமலன்காண்)

குறிப்புரை: மணி=அழகு .தூ=வலிமை .வேல், வளை, செண்டு=ஆயுதங்கள். விமலன் =இயல்பாகவே மலம் இல்லாதவன்.மகபதி=தேவேந்திரன். நந்துநிதி=வளரும் செல்வம்.உந்தியவன்=வீசிஎறிந்தவன்.பொய்யாமொழி=பொய்யாமொழிப் புலவர்.கோழி என்பது சிவபிரானையும் குஞ்சு என்பது முருகனையும் குறிப்பன.விற்பன்னன்=அறிவு வலிமையுடைய பொய்யாமொழிப் புலவர்.பொன்போலும் என்று தொடங்குவது முட்டையைப் பாடிய பொய்யாமொழிப் புலவர் பாடல்.சிட்ட உயர்வாசகம்=அறிவில் உயர்ந்த சொல்லாட்சி. கொன்றை மலர்த் தாமக் கோ=கொன்றைமலர்மாலை அணிந்தசிவபிரான்.

பொழிப்புரை: ஒளியுடன் அழகும் அமைந்தவராகிய மதுரை அருள்தரு சொக்கலிங்கப் பெருமான் வழங்கிய வலிமைவாய்ந்த வேல், வளை, செண்டு ஆகிய படைகளைச் சிறந்தனவாகப் பெற்ற விமலன்; தமது கூரியவேலினைக் கடல்வற்ற தக்கவாறுவிட்ட பெருமான்;தமக்கு முத்துமாலை யளித்த தேவேந்திரனின் அழகிய கிரீடம் சிந்த வளை என்ற ஆயுதத்தை எறிந்த வீறுடையவன்; மாமேருமலை வளரும் செல்வம்பெறச் செண்டு என்னும் ஆயுதத்தை வீசி எறிந்தவன்;"கோழியைப்பாடிய வாயால் குஞ்சைப் பாடமாட்டேன்" என்ற பொய்யாமொழிப்புலவரை வாழ்விக்க வேண்டிச் சினம்கொள்ளாது தோழமை உணர்வுடன் கொடிய நடுக்காட்டில் வேடனாக வந்து,அறிவு வன்மையுடைய அப்புலவர் மிக அஞ்சுமாறு செய்து, முட்டை என்ற தன்பெயரைப் " பொன்போலும் " என்று தொடங்கும் பாடலில் வைக்கச் செய்ததன் மூலம் அறிவில் உயர்ந்த தொடரை அதில் சேர்த்தவன்;தேன்சுரக்கும் கொன்றைமாலை அணிந்த சிவபெருமானுக்கு மிகஉயர்ந்த ஓங்காரப் பொருள் உபதேசித்த அமலன்.

விளக்கம்: முருகன் வேல் வளை செண்டு கொண்டுஆடிய திருவிளையாடல்களைத் திருவிளையாடற் புராணத்து 12–15ஆகிய அவ்வப் பகுதிகளில் காண்க.

பொய்யாமொழிப்புலவர், குஞ்சினைப்பாடிய பாடல்:

''பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே
என்பேதை செல்லற்கு இசைந்தனளே–மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்குங் காடு.'' _தனிப்பாடல் திரட்டு.

இதில் முட்டை என்பது இருமுறை வந்தது காண்க.முன்னேவரும் முட்டை வேடன் பெயர் குறிக்கும்.பின்னது முள்+தைக்கும் என்று இருசொற்களாக நின்று முட்கள் தைக்கும் என்று பொருள் தரும்.

சிவபிரானுக்கு ஓங்காரப் பொருள் உபதேசித்தது:சிவபிரான் ''சீயனம் போதிஎன வாய்புதைத்துச் செவிதர'' (கந்தர்அந்தாதி .19.);'' தெட்சிண செவிதனிலே போதம் அருளிய குருநாதா''(திருப்புகழ்1025);''புரத்தானை எரித்தசடைப் புரத்தானை அருகிருத்திப் பொருளைச் சொன்ன வரத்தானை''(குன்றக்குடி போற்றிமடக்குப் பதிகம்,2.)என்பன கூறும்.

கண்ணி16–22:துன்றியசீர்...செய்யுநாள்)(ஐந்தொழில்புரிய முருகனைச்சிவன்அனுப்புதல்)

குறிப்புரை: துன்றிய=நெருங்கிய–அளவற்ற.விளங்கும்=ஞானவடிவாக விளங்கும். தெள்ளி= ஆராய்ந்து .உன்னி=நினைப்பளவிலேயே.வாமம்=இடது.சேமம்= பாதுகாப்பு. ஆம்= அவ்வகையிலான.மனத்துள் நல்கி=நினைப்பளவிலேயே அளித்து.படையதா=பரிவாரங்களாக. கிருத்தியம்=தொழில் .ஈரிரண்டோடுஒன்று=ஐந்து.முறைசெய்யா=முறைப்படி செய்ய.

பொழிப்புரை: அளவற்ற சிறப்புவய்ந்த கயிலைப் பரமன்,ஞானவடிவாக விளங்கும் உமையம்மையை ஆராய்ந்து நினைப்பளவிலேயே இருகூறுகளாக ஆக்கி, ஒன்றினைத் தமது இடது பாகத்தில் அமைத்துக்கொண்டு, மற்றொன்றினை உயிர்க்குலத்துக்குப் பாதுகாப்பு வழங்கும் குழந்தையாக–முருகனாகச் செய்தருளி,அவ்வகையிலான அக் குழவியை ஞானசத்தியாக மனத்தால் நினைப்பளவில் ஆக்கி,இச்சை கிரியைஆகிய சத்திகளையும் அருளி,வானளவு உயர்ந்த கயிலைமலையின் போற்றத்தக்க வடபால் அழகிய திருக்கோயில் ஒன்றினை அமைத்து,மயில் ஒன்றினையும் ஊர்தியாக அளித்து ஐந்தொழில்களையும்ஆராய்ந்து முறைப்படி செய்யுமாறு அனுப்பினான்.முருகன் அவ்வாறே ஐந்தொழில்களையும் அங்குச் செய்துகொண்டிருக்கும் நாளில்,

விளக்கம்: அம்மை ஞானவடிவினள்:''சத்திதன் வடிவேது என்னில் தடையிலா ஞானம் ஆகும்''(சத்தி.சுபக்.82.) வள்ளி நாச்சியாரும் தெய்வயானை அம்மையும் முறையே விருப்பம்(இச்சை), தொழிற்படுதல்(கிரியை) ஆகிய சத்திகளின் குறியீடுகள்.ஐந்தொழில் படைத்தல்,காத்தல், அழித்தல்,மறைத்தல்,அருளல் என்பன.

கண்ணி:22–28: (பூவுலகில்..,.ஏயுநாள்)(முருகனின் ஊர்தியாக ஆக நால்வர் தவம்)

குறிப்புரை: மஞ்ஞை=மயில். தொய்யல்=அன்பு. இங்கம்=நோக்கம்.துங்கம்=வெற்றி. பண்ணவன்=திருமால். ஐ=தலைவன்–முருகன்.ஏறு= ஆண். வீறு=பெருமை.தேறிஎடுத்து

ஆராய்து எடுத்து.மாகணம்= சிறந்த தன்கணித்தவர். பந்தம்=வினைக்கட்டு. ஏயும்= பொருந்தி வாழும்.

பொழிப்புரை: இப்பூவுலகில் சிறப்புவாய்ந்த காஞ்சீபுரத்தில், முருகப்பிரான் ஏறிச்செல்லும் ஆண்மயிலாகத் தாம் ஆகவேண்டும் என்று வலிமையுடைய சூரனுடன் சிங்கன்,பதுமன், தாரகன் ஆகியோர் அன்புடன் தவம்செய்து வழிபடுவதை அறிந்த செந்தாமரையில் எழுந்தருளிய நான்முகனும், படமுடைய பாம்பினைப் பாயாகக்கொண்டச் திருமாலும், அதனை முருகனது ஊர்தி மயிலுக்குக் கூற, அந்தமயில் தன்பதவி பற்றிப்பெருமை கொண்டு''நீவிர் விமானம் ஒன்றினை ஆராய்ந்து எடுத்துச்சென்று அவர்களை இங்கு அழைத்து வருக'' என்று ஏவியபின்,அவர்கள் வந்ததும் தன் முகம்மலர அவர்களின் வினைக் கட்டினை அறுத்துத் தமது சிறந்த கணத்தில்சேர்த்து இன்பமுற அருளி மகிழ்ந்து வாழும் நாளில்

விளக்கம்: மயில் பெருமை கொள்ளக்காரணம் தன்பதவி,பிறர்விரும்பும் சிறப்புடையது என்ற எண்ணமேயாகும்.

கண்ணி 28–36: (ஓர்நாளில் ....நண்ணும்)(மயில் சாபம் பெற்று மயில்மலைஆதல்)

குறிப்புரை: ஆழி=திருப்பபாற்கடல்.முந்து நாள்=முன்நாளில்.பங்கயம் காணாது= 1008 தாமரைகளில் ஒன்று காணாமையால்.விழிப்பங்கயம்= கண்ஆகியதாமரை.சங்கையன்= சங்கு+ஐயன்=சங்கேந்திய திருமால். நட்டம்=இழப்பு.முட்டத்தான்=திருமுட்டம் என்ற ஊரில் எழுந்தருளியுள்ள திருமால்.அலர் சாகசத்தால்=அலர்தூற்றும் பகையால்.கலுழன்=கருடன். நன்று செய்தாய்= நல்லது செய்யவில்லை(புகழ்வது போல் பழித்தல்).குணபால்=கீழ்த் திசையில்.அந்தம்=அழகு.அரசாரண்யம்=அரசங்காடு(குன்றக்குடியின் அன்றைய நிலை). வரை=மலை.

பொழிப்புரை: இந்திரனும்,தேவர்களும் தூய வெள்ளன்ன ஊர்தியனாகிய நான்முகனும், பழைமையான பாற்கடலில் பள்ளிகொண்ட திருமாலும் ஒருசேர வந்து முருகப்பெருமானை வணங்கி இனிது இருந்த ஒருநாள்;சூரன் , தான் முருகனின் மயிலூர்தியாவதில் தடையாக இருந்தவர்களான,சிவபெருமானை1008தாமரை மலர்கொண்டு அருச்சித்தபோது ஒன்றுகுறைய அதனை ஈடுசெய்யத் தனது கண்மலரை இட்டு வழிபட்ட பண்புமிக்க சங்கேந்திய திருமாலும்,படைப்புத்தொழில் செய்யும் நான்முகனும் ஆகிய யிருவர்க்கும் இடர்செய்ய எண்ணி மயிலிடம்;''திருமுட்டத்தில் எழுந்தருளியுள்ள திருமாலின் ஊர்தியாகிய கருடனும்,நான்முகன் ஊர்தியாகிய அன்னமும் இரண்டும், உன்னைப் பழித்துப் பகையுடன் அலர்தூற்றின'' என்று கூற ,அதுகேட்ட மயில் விரைந்து போய் வலிய கருடனுடனும் அன்னத்துடனும் போரிட்டு அவற்றைக் கொன்று விழுங்கி வர ,அதுகண்ட முருகப்பெருமான் மயிலை''நன்று செய்தாய்'' என்று பழித்து நீபூவுலகம் சென்று, அங்குத் தேவர்கள் முதலாக எவ்வுலகவரும் போற்றும் இயல்புடன் கூடிய புனிதம்மிக்க சிறப்புடைய சிவபெருமான், மனம் மகிழ்ந்து எழுந்தருளியுள்ள ஊராகிய திருப்புத்தூரின் கிழக்கேயுள்ள அழகிய அரசங்காட்டில் மலையாகக் கிடப்பாயாக'' என்று அருள்புரிய மயில் அரசங்காடாக இருந்த குன்றக்குடிக்கு வந்து மயில் மலையாகக் கிடக்கும்.

விளக்கம்: திருமால் தன்கண்மலரால் அருச்சித்தது:
''பச்சைமால் சிவந்த கண்மலர் சாத்தியும் காண்பரிதான கழல்மலரே''–திருவாரூர் நான்–31.
''மால் கண்வைத்தும் காணாக் கழலினான்'' – திருவிடைமருதூர் உலா.
முருகன்,மயிலை நோக்கி''நன்று செய்தாய்'' என்றது , புகழ்வது போலப்பழித்தல்.

கண்ணி36–44.(அதில்...உடையான்.) (நுதற்கண்தீப்பொறிகள் சரவணத்தில் முருகனாதல்)

குறிப்புரை: யோகம்=தியான நிட்டை.புரிவேணி=முறுக்கிய சடை.விண்நீர்= கங்கை.முற்றியவாறு=முதிர்ந்தவகை.கவுணியர்= கவுணியர்குலத்துத் திருஞானசம்பந்தர். மருவ= பொருந்த. தோமரம் முதலிய பன்னிரண்டும் முருகனது படைக்கலன்கள்.தாழி= வாய்அகன்ற பாத்திரம்–பொற்கிண்ணம்.தோமரம்=கைவேல்.

பொழிப்புரை: தியான நிட்டைபுரியும் அடியவர்கள் புகழ,நான்முகனும் திருமாலும் அறியமுடியாத தலைமைசான்ற சிவபெருமான் ஆகிய முறுக்கிய சடையுடைய ஈசனின் நெற்றிக்கண்களில் எழுந்த தீப்பொறிகள்ஆறும் இயங்கும் காற்று,தீ,கங்கையால் சரவணப் பொய்கையில் பொருந்தி முதிர்ந்த ஆறு முதற்பொருள்களாகி–முதல்வன்ஆகி விளங்க, உயர்ந்த சீர்காழிநகரில் கவுணியர் குலத்துத் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பாலினைப் பொற்கிண்ணத்தில் அளித்த நற்றாய் ஆகிய உமையம்மை அங்குவந்து வாழ்க என்று வாழ்த்தி,ஆறு திருவுருவையும் கட்டியணைத்து ஒருருவாக்க, அன்புமிக்க அடியவர்களின் கண்கள் களிப்புறஒளிவடிவான திருமுகங்கள் ஆறும், விளங்கும் திருக்கைகள் பன்னிரண்டுமாகப்பொலிய அதுகண்டு உமையம்மை மகிழ வந்த இவன்,கருணையே தமது திருமேனியாகக் கொண்டவன்ஆவான்.அவன்;விளங்கும் கைவேல், கொடி,வாள்,போர்வல்ல குலிசம்,அம்பு ,புகழ்மிகப் பொருந்தியஅங்குசம்,மணி,நல்லதாமரை,தண்டம்,வில்,வலிய மழு, வேல் ஆகிய பன்னிரண்டினையும் தமது ஆயதமாகவே உடையவன்

விளக்கம்: உமையம்மை; முருகனுக்கோ விநாயகருக்கோ தாய்ப்பால் தராமையால் அவள் அவர்களுக்குச் செவிலித்தாயே;திருஞானசம்பந்தருக்குத் தாய்பால் வழங்கியதால் அவருக்கே அவள் நற்றாய் என்பார் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின்சப்பாணிப்பருவத்தில் அருள்திரு குமரகுருபர அடிகள்.(''முலைப்பாலால் கழுமல மதலை வயிற்றை நிரப்பி மயில்சேயைக் களிறொடும் வளர்த்தசெவிலித்தாயே'')இச்செய்தியை இவர்''கவுணியர்க்கு ஞானப்பால் தாழி அளித்த நற்றாய்'என்று குறிப்பதன் மூலம் நினைவூட்டுகிறார்.

பன்னிருபடைக்கலன்களுள் தோமரம்என்பது இருப்பு உலக்கையையும்குறிக்கும். வேல்என்பது நெடுவேலையே குறிக்கும்.

முருகப்பிரானின் பன்னிரு படைகளையும் இப்பகுதியில் காணலாம்.

கண்ணி44–53(மும்மை.....உருக்கரந்தோன்) (முருகன்திருவிளையாடல்கள் சில)

குறிப்புரை: மும்மை மலம்= ஆணவம்,கன்மம் மாயை .தெய்வ உவாநாரி= தெய்வயானையம்மை.பல வாகு=வலிமைபொருந்திய தோள்.விச்சுவ நல் இன்னுருவம்=தானே எல்லாமாகும் இனிய பேருருவம்.மஞ்சனம்=நீராட்டு. கண்ணுதல்=கருதப்பெறுதல்.வெய்யசூர்= கொடிய சூரன்.வான்மயில்=மேலான மயில்.மாதுவசம்=வெற்றிக்கொடி.அண்ணல்=பெருமையில்

சிறந்தோன். அணைந்தோன்=மணந்தவன். பிரசம்=தேன். சிந்துரத்தார்=கடப்பமாலை. கரட மிகு வள்ளல்=மதம் பெருகு விநாயகர். கள்=தேன். கடிதரு=புதுமையாகத்தோன்றிய மரம். மள்ளர்=குறிஞ்சி நிலத்தார். உருக்கரந்தோன்=மறைந்தவன். வெருள=அஞ்சிஓட.

பொழிப்புரை: ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களையும் உயிர்களிடமிருந்து நீக்குகிறவன்; சேவற்கொடியுடையவன்;நலம்தரும் வள்ளிநாச்சியார், தெய்வயானையம்மையாகிய இருபெண்களையும் சத்திகளாக உடையவன்;வலிமை பொருந்திய இந்திரனுக்குத் தானேஎல்லாம்ஆகும் தன்மையைக்காட்டி,அந்த இந்திரன் தந்த மகா மண்டபத்தில் எழுந்தருளித் தேவசேனாபதியாகும் திருமஞ்சனமாடியவன்; திருக்கைகள் பன்னிரண்டு உடையவனாய் நம்மால் மிகவும் கருதப் பெறுகிறவன்; கொடியசூரன் மேல்நிலை பெறத் தமது வேலால் அவன் இருகூறு ஆகும் தன்மையருளி ஒருபாதிஉருவைச் சிறந்த மயிலாக்கி அடியவர் புகழும் தன் ஊர்தியாகக்கொண்டு ஊர்ந்து,ஒருபாதி உருவைச் சேவலாகும் தன்மை அருளி அதனை வெற்றிச் சிறப்புடைய கொடிச் சின்னம்என்று உயர்த்திய வீறுடையவனாய்த் தன்அடியவருக்கு ஆவலுடன் அருள்புரியும் பெருமையில் சிறந்தவன்;தேவருலக அரசாட்சி பெறுதற்குரிய தெய்வயானையம்மையை மணந்தவன்;தேன்சுரக்கும் கடப்பமலர் மாலையணிந்து,மதம் மிகப் பெருகும் விநாயகரின் உதவியுடன் வள்ளி நாச்சியாரை மணந்தவன்;குறிஞ்சி நிலத்தவர் வியக்க, தேன்பொருந்திய மலர்களுடன் புதிதாயத்தோன்றிய வேங்கைமரமாகிப் பின்னர் மறைந்தவன்; தேவர்களின் துன்பம்அஞ்சிஓட அருள்புரிந்த இயல்பாகவே மலமில்லாதவன்.

விளக்கம்: வள்ளியின் பொருட்டு உதவுமாறு விநாயகரை அழைத்தது:

'' தன்னேரி லாதமரும் தந்திமுகத்து எந்தைதனை
முன்னே வருவாய் முதல்வா எனநினைந்தான்.'' –கந்தபு.வள்ளியம்மைதிருமணப்110.

''மாயானைஅடவிதனில்வருக என்று ஓதும் வாயானை''–குன்றக்குடி போற்றிமடக்குப்.10.

கண்ணி 53–67.(அருளினால்.....இறைவன்)(முருகன் திருவிளையாடல்கள் மேலும்சில)

குறிப்புரை: கச்சியப்பதேசிகர்=காஞ்சீபுரத்துக் கச்சியப்ப சிவாசாரியார். முந்தும்அடி= முதலடி. வாலறிவன்=தூயஅறிவினன்.ஒப்பும் வண்ணம்=ஏற்குமாறு. திறல்=மாறுபாடு, நத்தும் =விரும்பும்.வண்சித்தம்உறு=வளமையும்புகழும் மிக்க .வேர்மருவு= வேராகவிளங்கும்.வெம்பந்தம்பாசம் படியில்ஓட=கொடிய வினைக்கட்டும்பாசமும் (ஆணவம், கன்மம் ,மாயை) உலகை விட்டோட. சாத்தும்= இறைவன்மீது பாடும். கூன்அரசன்=கூன் பாண்டியன். ஏத்து=புகழ்.வருணன்=நீர்– சரவணப்பொய்கை.சீத மயூரம் எனும் சிலம்பினான்= மேகம்படியம்மயில்மலையுடையவன். பலமாகுவான் வலிமையாக நின்றவன்.நீபம்=கடம்பு. வாகு=திருத்தோள்.பாந்தள்=பாம்பு.நாகத்து இறைவன்= மலைகள் தோறும் எழுந்தருளியுள்ள இறைவன்.

பொழிப்புரை: கச்சியப்பசிவாசாரியாருக்குக் கந்தபுராணம்பாடத் ''திகடசக்கர'' என்று அடி எடுத்துக் கொடுத்ததுடன் அந்தச் சிறந்தநூலை அரங்கேற்றும்போது அவைப் புலவர் நுட்பமாகக்கூறிய வழுவினை, வழுவன்று என்று நிறுவத்தூய அறிவு உடையவனாக வந்துஅவையோர்முன் முறைப்படிகூறிஅவர்கள் வியந்துஏற்குமாறு செய்த தன்னேரில்லா முதற்பொருள்ஆவான்.இவ்வுலகில் ஆற்றல்வாய்ந்த தாடகை,வலியகரன்,ஏழுமரங்கள்,

மாறுபாடு கொண்ட பகன், ரீலி,விராதன்,வாலி, அணிந்ததிருமுடிகள் பத்துடைய இராவணன் ஆகியோரைக் கொன்ற இயல்புடைய திருமாலுக்கு மருகனும், மகளிர் போற்றும் அழகிய திருத்தோள்கள் உடையவனும், வளமையும் புகழும்கொண்டு விளங்கும் மேகம்படியும் சோலை சூழ்ந்த சீர்காழியில் கவுணியரின் சிறப்புவாய்ந்த செல்வக்குடும்பம் சிறப்பதற்கு வேராக விளங்கிய திருஞானசம்பந்தராகத் தோன்றி,சைவசமயம் வளரவும், உலகில் கொடிய வினைக்கட்டும் பிற பாசங்களும் அகலவும்இறைவனைப்பாடும் இயல்புடையவனாய்,தண்ணிய மதுரையில் கூன்பாண்டியன் திருநீறு அணியுமாறுசெய்து வெப்புநோய் தீர்த்த புகழ்பெற்றவனும், சிறப்புவாய்ந்த அருணகிரியாரின் திருப்புகழ் பெற்றுக் கருணை வழங்கும் கடவுளும்,பன்னிரு திருக்கரங்கள் கொண்ட உயர்பெருமானும்,சடைக் கற்றையுடைய சிவனால் அருளப்பெற்றவனும்,இச்சை கிரியை ஆகிய இருமனைவியரை யுடையவனும், தமது நிலைத்த திருவுருவாக ஒளிவடிவான வேற்படையுடன் விளங்குகின்றவனும்,வேதச் சிலம்பணிந்தவனும்,மேகம்படியும் வெற்றி பொருந்திய மயில்மலைக்கு உரிமையுடையவனும்,தேவர்கள் அனைவரும் புகழ அவர்களுக்குப் பலமாக விளங்கியவனும்,மணக்கும் கடப்பமலர்மாலை அணிந்த திருத்தோளனும்,நீண்டபாம்பினைத் தன்கால்களால் பற்றிக் கொண்டுள்ள வெற்றியுடன் அழகும் பொருந்திய மயில் ஊர்தியுடையவனும், மலைகள்தோறும் எழுந்தருளியுள்ள இறைவனும்ஆகிய இம்முருகன்;

விளக்கம்: கந்தபுராணம் இயற்றக் கச்சியப்பசிவாசாரியர்க்கு முருகப்பெருமான் அடியெடுத்துக் கொடுத்த அந்நூலின்முதற்பாடற்பகுதி ''திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்''என்பது.இதில்,''திகழ்+தசக்கரம் = திகடசக்கரம்'' என்று புணர்தற்குரிய விதி தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களில் இல்லையே என்று குற்றங்கூறி நூல்அரங்கேற்றத்தை அவையோர் தடை செய்ய, கச்சியப்பரின் வேண்டுதலை ஏற்ற முருகப்பெருமான் அவர் கனவில் விதி கூறியதுடன், மறுநாள் அரங்கேற்று அவைக்கு இலக்கண நூலுடன் வந்து,''நாம் சோழநாட்டினேம், திகழ்+தசம் என்பது திகடசம்என்று புணர்தற்குரிய இலக்கணம், இந்த வீரசோழிய இலக்கணநூலில் சந்திப்படலம் பதினெட்டாம் செய்யுளில் உள்ளது என்று கூற நூலினை வாங்கிப் பார்த்த அனைவரும்ஏற்றுக் கந்தபுராணத்தை அரங்கேற்ற அனுமதித்தனர் என்பது கந்தபுராண அரங்கேற்றத்தின் வரலாறு.

கூன்பாண்டியனின் வெப்பு நோய் தீர்த்தது:

''திருவளர் நீறுகொண்டு திருக்கையால் தடவத் தென்னன்
பொருவரு வெப்பு நீங்கிப் பொய்கையிற் குளிர்ந்தது'' –பெரியபுரா. 2668.

''திருமுகம் கருணைகாட்டத் திருக்கையால் நீறு காட்டிப்....பின்னும்
ஒருமுறை தடவ அங்கண் ஒழிந்துவெப்பு அகன்று பாகம்
மருவுதீப் பிணியும் நீங்கி வழுதியும் முழுதும் உய்ந்தான்,– பெரியபு2673.

இவ்வாசிரியர்,கண்ணிஎண்59– 60,131,311—322 ஆகியவற்றில் முருகப்பெருமான், திருஞானசம்பந்தராகப் பிறந்தான் என்பது பொருந்தாது.ஏன்?

முருகப்பெருமான்,சிவபரம்பொருளே என்பது கந்தபுராணமுடிபு.எனவே ''பெம்மான் முருகன் பிறவான் இறவான்.'' சேக்கிழார் பெருமான் அருளியபெரியபுராணத்துத்

திருஞானசம்பந்தர்புராணம்''பரவும் காதலியார் மணிவயிற்றில் உருத்தெரிய வரும் பேறு உலகுய்ய உளதாக'' என்று கூறுவதன் மூலம் பகவதியார் கருக்கொண்டு பெற்ற பிள்ளையே திருஞானசம்பந்தப் பெருமான் என்பதால் இடைக்காலத்தில் புகுந்த பொருந்தாக் கருத்தைக் கூறும் நிலைக்கு இவர் தள்ளப் பெற்றவராதல் வேண்டும் என்க.

கண்ணி 67–77. (ஒருவேல்.....பன்னிரண்டு)
(எண்ணலங்காரத்தில் முருகன், பங்குனி உத்தரம்)

குறிப்புரை: பன்னி=மனைவி. முப்புள்=மூன்றுபறவைகள்(சிவபிரான்தந்த மயில்–பின்னர்இதுவே மயில்மலையாய் ஆனது,சூரபத்மனாகிய மயில், சேவல்.). நால்வாய்=தொங்கும்வாயுடைய விநாயகர். அனுசன்=தம்பி. பரைஆகத்து= பராசத்தியை உடம்பின் பாதியில்கொண்ட. ஐந்துமுகன்=ஐம்முகச்சிவன்–சதாசிவன். ஏழிசை குரல்,துத்தம்,கைக்கிளை,உழை,இளி,விளரி,தாரம். செல்வம்ஒன்பது=நுகர்ச்சிக்குஉரிய அரிசி,கோதுமை,துவரை,பச்சைப்பயறு,கடலை,மொச்சை,எள்ளு,உழுந்து,கொள்ளு என்பன. சொக்க அங்கம்பத்து=தூய உறுப்புகள்பத்து=மலை,ஆறு,நாடு,நகர், குதிரை,களிறு, மாலை, கொடி,முரசு,ஆணைஎன்பன. மாநக்கர்பதினொருவர்=சிறந்த உருத்திரர் பதினொருவர். இவர்கள்ஏகாதச உருத்திரர்எனவும் கூறப்படுவர். மீனஉத்தரம்= பங்குனித் திங்களில் வரும் உத்தரவிண்மீன்நாள். சேறு=சேவல். குரைகழல்=ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த திருவடி. விள்ளும்=பிளந்து சிதறும். பள்ளி=ஊர். செட்டி=முருகன். வேதிக்கும்=வழிபடும். வேதியா=வழிபடாத. வேதிக்கும்=துன்புறுத்தும். திருமகுட உம்பர் பத்தி=அழகிய முடிசூடிய தேவர்கள் வரிசை. எழுமுந்நீர்=ஏழுவகைக் கடல்கள். அவை: உவர்நீர்,நன்னீர்,பால்,தயிர்,நெய்,கருப்பஞ்சாறு,தேன்கடல் என்பது இலக்கிய வழக்கு. பாக்கம்=பக்கத்துஊர். ஏமம்உற=பாதுகாப்புப்பெற.

பொழிப்புரை: ஒரு(ஒப்பற்ற)வேல்,**இரு** மனைவியர்,சிவபெருமான் தந்த மயில், சூரபதுமனைத் தடிந்து ஆக்கிய மயில் சேவல் ஆக **மூன்று** பறவைகளுடன்,**நால்** (தொங்கும்) வாயராகிய விநாயகருக்கு இளவல். **ஐந்து** முகம் கொண்ட சதாசிவமூர்த்தி தந்த **ஆறு**முகன்,**ஏழு** இசையாகவும் தானே விளங்கி அருள்பவன்,**எட்டு**த்திசையினரும் வணங்கும் கடவுள்,**ஒன்பது** வகைச் செல்வங்களையும் வழங்குகின்றவன், தனது அருளாட்சியில் மலைமுதலிய தூய **பத்து** உறுப்பகளை(தசாங்கம்) உடையவன்,சிறந்த **பதினொரு** உருத்திரர்களும் போற்றவளர்ந்த பண்பன்,அடியவர்களுக்கு நற்கதி வழங்கும் **பன்னிரண்டு** திருக்கண்களுடையவனாகிய இப்பெருமான்,ஆகமம் விதித்த விதிப்படி பங்குனிஉத்தர விழாவிற்காகச் சேவல் சின்னம் பொறித்த கொடிஏற்றி முருகப்பெருமானின் அருள்பெறப் பொருள்பொதிய மேற்கொள்ளும் இத்திருநாளில்அவனுடைய ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த திருவடிகளை வணங்கினால்உமது இருவினைகளும்பிளந்து சிதறும்என்று ஊர்தோறும் அனுப்பிய திருமுகத்துடன் பொருந்திய திருநாளில்,அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருவீதி உலாவரும் திருநாளில்,இவன்அருகில்வந்து கண்டு வழிபடும் மனிதர்களை மேல்நிலையில் உயர்த்தி வாழ்வித்து. அங்ஙனம்வழிபடாதவரைத் துன்புறுத்தும் குற்றமற்ற பங்குனி உத்தரத் திருநாளில்,அழகிய முடிசூடிய தேவர்கள் வழிபட வரிசையாக நிறையும் நாளில்,ஏழ்கடலும் முறையே மயில்மலைப் பக்கத்து ஊர்களில்

சேர்ந்ததுபோலப் பேரொலிஎழும் அந்நாளில் புகழும் தகுதியுடைய அழகியமயில் முதலிய ஊர்திகளில் பெருமான் எழுந்தருளித் திருவீதி உலாவரும் நன்னாளில்

கண்ணி 77 –82(காமன்,,,,பெருமையுற) (திருப்பள்ளிஎழுச்சி)

குறிப்புரை:காமன்=தேவேந்திரன்.மருவி=தழுவி.அருணன்=ஞாயிறு.இசைமறை= கூறும்வேதம் காதினான்=அழித்தவன்.ஏதில் நான் மெய்ப்பொருள்=குற்றமற்ற அறம்பொருள்இன்பம்வீடு ஆகிய நால்வகை உண்மைகள்.

பொழிப்புரை: தேவேந்திரன் பெற்ற தெய்வயானையம்மையையும் ,அகன்ற உலகம் போற்ற வந்த வள்ளிநாயகியாரையும் தழுவி,காலைஞாயிறு கதிர்விரித்து எழுமுன் அடியவர் இசைக்கும் மறையின் ஆரவாரமும், குற்றமற்ற வீணை இசையின்அழகும்,திருவிழாவினை மக்கள்அறியுமாறு எடுத்துரைக்கும் முரசின் முழக்கும், சங்கின் ஒலியும்,அடியவர் கூடிப்போற்றும்''முருகா''என்ற ஆரவாரமும் மேன்மேல் மிக, எமனை முன்பு உதைத்துக் கொன்றவனுக்கு மகனாகிய முருகப்பெருமான் விரைந்து துயில் விட்டெழுந்து,குற்றமற்ற அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நால்வகை உண்மைகளையும் போற்றும்அடியவர்களின் தீமைகள் அறவும்,நலம்பெற்றுப் பெருமையுறவும் தாம் பேருலாக் கொள்ள நினைந்து

கண்ணி 82–85(உற்றஆனைந்து.....பூசையுட்கொண்டு) (திருமஞ்சனமாடல்)

குறிப்புரை: ஆனைந்து= இதனைப் பஞ்சகவ்வியம் என்பர்.அவையாவன:பால்,தயிர், நெய்,வெண்ணெய்,திருநீறு.முற்றுததி=கட்டித்தயிர்.கதி=நிலை.இசைவில் பூசை=புகழுக்கு உரிய பூசை. பிரசம்=தேன்.

பொழிப்புரை: சிறந்த உலாப்போந்தருள எண்ணிய பெருமான்,பொருத்தமான ஆனைந்து, கட்டித் தயிர், தேன், சந்தனம்,திருநீறு, ஆகமங்கள் விதித்த பழவகை, மேலான நிலைஅருளும் வளமான மணம்மிக்க பன்னீர்,முருகப்பெருமானைச் சார்ந்த சரவணப்பொய்கையின் வளப்பம் மிக்க நன்னீர்ஆகியவற்றில் மகிழ்ந்து திருமஞ்சனம் மேற்கொண்டு, பண்பாட்டில் மிக்க ஆதிசைவர்கள்,மிக்குயர்ந்தநிலையில் ஆகமத்தில் சிவபெருமான் ஓதிபடியான புகழுக்குரிய பூசனையைச் செய்ய ஏற்று,

விளக்கம்: ஆன்ஐந்துஆவன ;பபால்,தயிர் நெய் ,கோமயம் கோசலம்என்பர்.இவற்றில் நம்அருளாளர்கள் அனைவரும் பெருமான் திருமஞ்சனத்திற்கு உரியனவாகப் பால் தயிர் நெய் என்பனவற்றை வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளனரேதவிர, எந்த ஓரிடத்திலும் கோமயம் கோசலம் இரண்டையும் குறிப்பிடாதது நம்சிந்தனைக்குரியது. அவர்கள் குறிப்பிடாமைக்குக் காரணம்என்ன? கொடுஞ்செயல் செய்தவர்களை ஊரவர்க்கு அறிமுகப்படுத்தவும்,அக்கொடியவர்களை அவமானப்படுத்துவதன் மூலம் தண்டிக்கவும் பசுவின் கழிவுகளாகிய கோமயத்தைக் கோசலத்தில் கரைத்து அவர்கள் தலையில் ஊற்றச் சொல்வதுடன் ஊற்றவும் செய்வர்.இவை இரண்டும் பிறரை அவமானப்படுத்த முன்நிற்பன என்ற அடிப்படையிலே இவற்றைக் குறிப்பிடாததுடன் வெண்ணெய், திருநீறு ஆகியவற்றை வெளிப்படையாகக் குறிப்பதன் மூலம் ஆனைந்தாவது பால்,தயிர்,நெய், வெண்ணெய், திருநீறு என்று கொள்ளச் செய்திருப்பர் எனலாம்.இவை ஐந்தும் பசு தரும் புனிதப் பொருள்களே.பெருமான் திருமஞ்சனப் பொருள்களில் வெண்ணெய் உண்டு என்பதைத்

திருஞானசம்பந்தரின் திருநெல்வெண்ணெய்த் தலப்பதிகம் (திருமுறை 3) பா1 இல் வரும்
''நல்வெணை விழுதுபெய்து ஆடுதிர் நாடொறும்'' – என்பது கூறும்.

கண்ணி 85 –98 .(கோதில்உயர்..... இலங்க) (திருவாபரணம் மாலைபுனைந்தருளல்)

குறிப்புரை: கோதில் உயர்=குற்றமின்றி உயர்ந்த.பொன்தூசு= பொன்னாடை. ஆர்த்து= கட்டி.புறம்கச்சு வீக்கி=முதுகுப்புறம்கச்சையாக வரிந்து கட்டி.இம்பர்=இவ்வுலகு. கம்படரும்=வெள்ளொளி பரவும். நிச்சம்=எப்போதும். அடைக்காய்=வெற்றிலைபாக்கு. கந்தரம்=கழுத்து.மேய=மேம்பாடுடைய.நாயகம்=தலைமை.மகரி நற்பதக்கம்=சுறாமீன் வடிவிலானசிறந்த பதக்கம்.சம்பு=சிவபிரான்.அக்கமணி=உருத்திராக்கம்.நம்பரன்=நமது பரம்பொருள்.கேயூரம்=ஒருவகைத் தோளணி.ஆகம்=மார்பு.வாள்=ஒளி. நூல்=பூணூல். நாண்=அரைஞாண்.நவகோள்=ஒன்பான் கோள்கள்.பொலன்கழல்=பொலிவுமிக்க திருவடி. வேட்டு=விரும்பி.நூபுரம்=சிலம்பு.கொற்றம்=வெற்றி. சரணம்=அடைக்கலம்.மல்லர்= மள்ளர்= குறிஞ்சிநில மக்கள்.மாஉரம்=அகன்ற மார்பு.கந்தம்=நறுமணம்.அந்தம்=எல்லை. சோதிப் பருதி=ஒளிவடிவான ஞாயிறு.பல்இயல்ஆர்=பலவகை அழகு பொருந்திய.முருகு=மணம்.

பொழிப்புரை: குற்றமின்றி உயர்ந்த பொன்னாடை உடுத்து, அதனை முதுகுப்புறம் கச்சையாக வரிந்து கட்டி, இருள் வந்து சேர்ந்தது என்றுகூறுமாறு கரியசிறந்த கூந்தல் முழுதும் மறையுமாறு அழகிய பொன்னாலான திருமுடி சூடி,ஞாயிறுகள் எல்லாம் இவ்வுலகுக்கே வந்தன என்று எண்ணுமாறு வெள்ளொளி படரும்வைரத்தோடு விளங்க, அழகிய நெற்றியில் எப்போதும் உயர்ந்த திருநீறு அணிந்து,அனைவரும் புகழும் வெற்றிலை பாக்கு அருந்தி, திருக்கழுத்தில் கண்டசரம் அணிந்து,மேம்பாடுடைய முத்து மாலை விளங்க,ஒளிர்வதில்தலைமை சான்ற செஞ்ஞாயிறு போல விளங்கும் சுறாமீன் வடிவிலான சிறந்த பதக்கம்அணிந்து,நமது பரம்பொருளான முருகனின் திருத்தோள்களில் தோளணிகள் மின்ன,வலிமை மிக்க மார்பினைத் தூயஒளி வீசும் மின்னல் வளைத்தது போலக் குற்றமற்ற பூணூல் சூழ, திருவரையில் அரைஞாண் ஒளிர,அழகிய கடகம் பூட்டி,ஒன்பான் கோள்களும்பொலிவு மிக்க திருவடிகளில் விருப்பமுடன் அவற்றைப் பற்றிக் கொண்டதுபோல்முதிர்ந்த ஒளிவீசும் பருத்த நவமணிச் சிலம்பு அணிந்து, வெற்றி பொருந்திய பிரணவத்தை அடியவர்கள் அடைக்கலமாக இடைவிடாது நினைத்துத் துதிக்கத் தங்கும் பெரிய அழகிய பெருமை பொருந்திய ஓங்காரத் திருவாசி பொருந்த, குறிஞ்சி நிலமக்களின் கொடியாகிய வள்ளிநாயகியார் தழுவும் வலிமைபொருந்திய திருமார்பில் புகழ்ந்து கூறுதற்கரிய மணங்கமழும் கத்தூரி கலந்த கலவைச் சாந்து பூசி, எல்லையற்ற அழகுடைய திருமேனியனும் வேதங்கள் தேடியும் அவற்றுக்குப் புலப்படாதவனும் ஆகிய அருள்தரு சண்முகநாதப் பெருமான் தன் எதிரே உள்ள ஞாயிறு போன்று அகன்ற நிலைக் கண்ணாடியில் தன்உருக் கண்டு,மணம்மிகும் மல்லிகை,முல்லை,மருக்கொழுந்து ஆகியவற்றால் பலவகை அழகு பொருந்தத் தொடுக்கப்பெற்ற மாலைகள்பெருமானின் திருமார்பில் படர்ந்து விளங்க,

விளக்கம்: திருநீறு எப்போதும்யார்க்கும் உயர்வு தரும் என்பதைத் திருஞானசம்பந்தரின் திருநீற்றுப்பதிகம்விளங்க உரைக்கும். பிரணவம் பெருமானுக்குத் திருவாசி: ஓங்காரமே நல் திருவாசி''–உண்மை விளக்கம்.34.இறைவன் வேதங்கட்கு

அகப்படாதவன்: ''வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே''– சிவபுராணம்.

இலக்கணக் குறிப்பு: நவகோள்,நவமணி–தொகைக்குறிப்புகள். வாள்ஒளி–ஒருபொருட பன்மொழி. கழல்–தானியாகுபெயர்.

கண்ணி 97 –112 .(மெல்லியலார்.....பெரிது ஏறி) (திருத்தேரில் எழுந்தருளுதல்)

குறிப்புரை: மெல்இயலார்=மென்மனத்து மகளிர். இன்னலுற=காமநினைவால் மனம்வருந்த . நல்நயம்ஆர்=நல்ல இனிமை பொருந்திய. தொனிப்ப=முழங்க. திண்டு தூரியம்= மிகப்பெரிய இசைக்கருவி. களை=களைப்பு. அலக்கண்=துன்பம். பவம்=பிறவி. வான் புறவம்= மேலான சீர்காழி. கறங்க=ஒலிக்க. அல்ஆண்ட கூந்தல்=கருங்கூந்தல். மல்ஆண்ட= வலிமையை ஆளும். ஏற்று=கரையேற்றிய. நரிதோற்று=நரியின் பிறப்பை. வெண்மை= இளமை. தோட்டுக் கைகள்=மலரிதழ் ஒத்தகைகள். கோலப்பூம் பட்டு= அழகியமென்மையான பட்டு. ஐந்தரு= கற்பகமரம். நாமம்=திருப்பெயர். பண்=அலங்காரம்.

பொழிப்புரை: மென்மனத்து மகளிர் காமநினைவால் மனம் வருந்த,பெருமான் மயில்மேல் ஏற, அதனால் முரசு முழங்க, புகழும் முழவுஅதிர,நல்ல இனிமை பொருந்திய ஒலியுடன் சங்கு அழகுற முழங்க,சிறந்த தக்கை,குழல், பேரிகை.பெருமைபொருந்திய முழவு, மிகப் பெரிய மங்கல முரசு முதலியவற்றின் முழக்குடன் நாதசுர இசை அதிர,நாரதர் தும்புரு இருவரும் விரைந்து இசைபாட,மலைஒத்த விரும்பத்தக்க மார்புகளையுடைய இருமகளிர் முருகப்பெருமானின் திருமேனிக் களைப்பு நீங்கும் பொருட்டு இருபுறம் இருந்து கவரிவீச,பழுது ஏதும்இல்லாத அடியவர் பணிய, தமதுதுன்பம் முழுதும் அறும்பொருட்டு வணங்கும் அடியவரது பிறவியை நீக்குவன போல ஆலவட்டம் வீச, விளங்கும் முறையில் கூற வல்லவர்கள் மறைமுழங்க,சிறந்த சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தர்,கல்லையே தோணியாகக் கொண்டு கரைஏறிய அப்பரடிகள்,உயர்ந்த செல்வமாகிய பொன்னை மணிமுத்தாற்றில் இட்டுச் சிவனருளால் திருவாரூர்த் திருக்குளத்தில் எடுத்த சுந்தரர் பெருமான், சிவபெருமானைக்கொண்டே நரிகளின்பிறப்பை உயர்ந்த சாதிக் குதிரைகளாக நடத்திவந்த வாதவூரடிகள் ஆகியோர் அருளிய திருமுறைகள் முழங்க, பெருமையில் சிறந்த அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் முழங்க, தாம் காணத்தக்க சிறப்பும் பெருமான் திருவருளும் வேண்டிவந்த அடியார்களின் சயசய ஒலி எங்கும் பரவ, பெருமானின் வலிமையை ஆளும் திருத்தோள்கள் பெற்ற கண்ணேறு கழிக்கும் பொருட்டு, ஆலத்திக்குரியன உள்ள பொன்னாலான அழகிய தட்டினை,இருண்ட கூந்தலும் அழகிய முலைகளும் கொண்ட இளமகளிர், தம்மலர்ஒத்த கைகளை நீட்டி எடுத்து ஆலத்தி சுற்ற, அழகு மிக்க திருக்கோயில் வாயில் கடந்து, மென்மையான அழகிய பட்டுக்குடை நிழற்ற,தேவர்கள் தேவருலகக் கற்பகமலர்களை மழையாகப் பொழிய,மண்ணவர்கள்,பெருமானை ''முருகா'என்று அவன் திருநாமம் சொல்லி வாழ்த்த, அலங்காரம் பூண்ட தெய்வயானையம்மையும் வள்ளிநாச்சியாரும் சீலமுடன் உடன்திகழ, அனைவர்க்கும் அருள்மழை பொழியும், அனைவர்க்கும் மேலான தலைவனாகிய அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருத்தேரில் விரும்பி ஏறினான்.

கண்ணி 112–128 .(மைவான.....உற வர) (உடன்வரும்தேவர்களும் பிறரும்)

குறிப்புரை: மைவான வண்ணன்= கரிய மேகம் ஒத்த நிறமுடைய விநாயகர். களதம்= பெருச்சாளி. மாதேவன்=சிவபிரான். ஏறு=விடை–இடபம். உவணம்=கருடன். பண்ணவன்= நான்முகன். உருத்திரர்கள் ஆறு ஐவர்=மாதேவன் ,அரன்,உருத்திரன், சங்கரன், நீலலோகிதன்,ஈசானன். விசயன் ,வீமதேவன்,பவலோற்பவன், காபாலி, சௌமியன்ஆகியோர், ஒளி பன்னிருவர்=சூரியர் ஆகிய தாத்துரு,சக்கரன்,அரியமன் மித்திரன்,வருணன், அஞ்சுமான், இரணியன்,பகவான், திவச்சுவான்,பூடன்,சவித்துரு, துவட்டா என்ற பன்னிருவர். யந்திரம்=தேர்,மானம்=விமானம், அட்டவசுக்கள்=வசுக்கள் எண்மர் ஆகிய அனலன்,அனிலன்,ஆபச்சைவன் சோமன், தரன், துருவன்,பிரத்யூசன், பிரபாசன் என்போர். வான் இருடி எழுவர்= அத்திரி,ஆங்கீரசர், கவுதமர், சமதக்னி, பரத்துவாசர், வசிட்டர், விசுவாமித்திரர்என்போர்.ஆதனம்=இருக்கை. காரி இருவர்= ஐயனார் பைரவர். களிறு= ஐயனாரின் ஊர்தியாகிய ஆண்யானை.புரோகதி=நாய்(இது பைரவரின் ஊர்தி).வீரர் ஒன்பான் =வீரவாகு,வீரகேசரி,வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்தரர்,வீரராக்கதர்,வீரமார்த்தாண்டர், வீராந்தகர்,வீரதீரர் என்போர். விண்இறைவன்= தேவேந்திரன். எண்திசைக் காவலர்=இந்திரன்,அக்கினி,எமன், நிருதி, வருணன்,வாயு, குபேரன்,ஈசானன்.இவர்களின் ஊர்திகள் நரரும் ,விலங்குகளுமாகும். அரி=தேர். மாதர் எழுவர்=அபிராமி,மகேசுவரி, கௌமாரி,நாராயணி,வராகி,இந்திராணி,காளி.இவர்களின் ஊர்திகள் ;அன்னம்,இடபம்.மயில். கருடன்,சிங்கம்,யானை,பேய்.யாழின் முரி அருளும் அண்ணல்=திருஞானசம்பந்தர்.இவர்க்கு ஊர்தி முத்துப்பல்லக்கு.வாய்மூர் முன்னவன்= திருநாவுக்கரசர்.அத்தன் அன்பர்=சுந்தரர். சித்தப்பெருந்துறை= சிவபிரானது திருப்பெருந்துறை– ஆவுடையார் கோயில்.பெம்மான்= மாணிக்கவாசகர்.ஏறு=இடபம், அரன்தோழன்=குபேரன்.கஞ்சிகை= இரத்தினச்சிவிகை. சீர்புகழைக் கந்தனடி சேர்த்த பிரான் =அருணகிரிநாதர்.கூர்ப்பு=அறிவுக் கூர்மை.ஆர்ப்பு அருகு=முழங்கும் ஆண்சிங்கம். அவந்திகை=கிளி.மாமகரம்=அரச சின்னங்களுள் ஒன்று. பூவில்பால் ஆழி= பூவுலகுக்கு வந்த திருப்பாற்கடல்.பதாகை=கொடி..மறைவாணர்= ஆதிசைவர். மாண்டல் உற= மாட்சிமை பொருந்த.

பொழிப்புரை: விநாயகரின் கரிய நிறமுடைய பெருச்சாளியும், சிவபிரான் ஏறும் எருதும், மேகவண்ணனான திருமால் ஊரும் கருடனும்,திருமால் உந்தியில் தோன்றிய நான்முகனின் அன்னமும்,பதினோரு உருத்திரர்கள் ஏறும் இடபமும்,கதிரவர் பன்னிருவர் தேரும், பால்போலும் சந்திரன் ஏறிவரும் விமானமும்,எட்டு வசுக்கள் மேலானமுனிவர் எழுவர் இவர்கள் ஏறிவரும் நல்ல ஆசனங்களும்,நேசம்மிக்க கரிய ஐயனார் வைரவர் ஆகியோரின் யானை நாய் என்பனவும்,நவவீர்களின்தேரும்,உயர்ந்த தேவேந்திரனின் வெள்ளானையும், எண்திசைக்காவலர்களின் நரர் விலங்கு ஆகியனவும்,மிகச்சிறந்த ஒன்பான் வீரர்கள் ஏறிவரும் தேரும்,தக்க சிறப்புடைய ஏழு மாதர்(சப்தமாதர்)களின் விலங்கு பறவைகளும், யாழ் முரிப்பண்தந்த திருஞானசம்பந்தரின் பொன்னாலானஅழகிய முத்துப் பந்தரும், முன்னவராகிய திருவாய்மூர்த் திருநாவுக்கரசரின் கேடகமும், சிவபிரானுக்கு நண்பன் ஆகிய சுந்தரர் ஏறும் வெள்ளானையும்,சிவபிரானுக்குத் திருப்பெருந்துறையில் கோயில் கட்டிய திருவாதவூரடிகள் ஏறும் ஏறும்,அரன் தோழனான குபேரன் ஊரும் இரத்தினச் சிவிகையும், திருவாரூர்ப்பெருமானை இரவில் தூதுவிட்ட சுந்தரர் திருத்தொண்டத்

தொகையில் போற்றிய நாயன்மார்களின் ஊர்திகளும், குற்றமற்ற நல்ல திருப்புகழைக் கந்தன் அடியில்சேர்த்த அருணகிரிநாதரின் கேடகமும், அறிவுக் கூர்மையரான குமர குருபரனாரின் முழங்கும் ஆண்சிங்கமும்,மன்மதனது கிளியும், கந்தருவர்,பைசாசர், விஞ்சையர்,யோகர், சித்தர்,சிறந்த அரச சின்னங்கள்,பூதர், கருடர், புகழ்வாய்ந்தசாரணர், இயக்கர்,குற்றமற்ற வானுலகோர், நாகர், மாதேவர், அரசர்கள்,தைத்தியர்,அசுரர்ஆகிய இவர்கள் அனைவருடன், பூவுலகிற்குப் பாற்கடல் வந்தாற்போல் பாதுகாப்புத்தரும் செல்வமாகிய திருநீறணிந்த தொண்டர்களும், தோளாற்றல் மிக்க பாண்டியன், கொடை மிக்க சோழன், சேரன்,மறைஓதுகின்றவர்,சேவற்கொடி ஏந்தும் முருகப் பெருமானின் திருமேனி தீண்டும் பேறுபெற்ற ஆதிசைவராகிய மறைவாணர் முதலியோர் மாட்சிமை பொருந்தச் சூழ்ந்துவர;

விளக்கம் : ஊர்திகள் கலந்து கொண்டது கூறுவதன் மூலம் அவற்றுக்கு உரியவர்களின் வருகை கூறினார்.

இலக்கணக் குறிப்பு : உருத்திரர்கள் ஆறைவர்,ஒளி பன்னிருவர்,அட்டவசு, இருடியோர் எழுவர்,வீரர் ஒன்பான்,திக்கு எட்டு, ஏழு மடவார்--தொகைக்குறிப்புகள். களதமும்,ஏறும்,உவணமும் முதலியவற்றில் வரும் உம்மைகள்-எண்ணும்மைகள். விஞ்சையர், யோகர், சித்தர்,மாமகரம்,பூதர்,கருடர் முதலியனவாக வருவன எண்ணும்மைத் தொகைகள்.பாலாழி என.....தொண்டர்-உவமையணி.

கண்ணி 128-133: (மாவண்.....ஒப்பில்லை என்ன)(திருச்சின்னப் பேரொலி)

குறிப்புரை: மாவண்=சிறந்த அழகு.வந்திப்பவர்=தம்மை வணங்குவோர். முந்துநாள்=முன்நாளில்.ஞானப்பொருள்=ஓங்காரத்தின் உட்பொருள்.தேவு =தேவர். செய்ய கான்மான்=சிறந்த குறிஞ்சிக்காட்டு மான் ஆகிய வள்ளிநாச்சியார். காழியினில் வந்தான்=சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தர்.கறை=கருப்பு நிறம். கைமுகத்தான்= முகத்தில் கையுடைய விநாயகர்.நயந்து=விரும்பி. வானவன்=தேவன். வியன்=பெருமை. வாள்=ஒளி.

பொழிப்புரை: சிறந்த அழகிய வேலினை ஆளும் சிறந்தவனாகிய அருள்தரு சண்முகநாதப்பெருமான்வந்தான், தம்மை வணங்குவோரது துன்பங்களைத் தீர்க்கத் தேர்ஏறி வந்தான்;மூன்றாம் பிறையணியும் சிவபிரானுக்கு முன் நாளில் ஓங்காரப் பொருள் ஓதிய நம்குகன் வந்தான்;தேவர்படைக்குத் தலைவனாகிய தேவசேனாபதிவந்தான்;சிறந்த குறிஞ்சிக்காட்டு மானாகிய வள்ளி நாச்சியாருக்குக் கணவண் வந்தான்;சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தன் வந்தான்; கரிய திருமேனியுடன் முகத்தில் கையுடையவிநாயகனுக்கு இளவல் வந்தான்; ஊமைத்தன்மையை நீக்கும் சரவணபவன் வந்தான்;நான்முகனும் திருமாலும் காண விரும்பியும் காணற்கியலாத மேலான சிவபிரானுக்கு மகனாகிய செவ்வேள் வந்தான் என்று பெருமை பொருந்திய திருச்சின்னம் ஆரவாரிக்க, ஆடுதற்குவரும் ஒளிபொருந்திய கண்களையுடைய மாதர் கூட்டத்திற்கு ஏழ்கடலும் ஒப்பில்லை என்று கூறுமாறு சூழ்ந்து வர,பெருமான் உலகுய்யத் தெருவை யடைந்தான்.

விளக்கம்: முருகன்,சிவபிரானுக்கு ஓங்காரப் பொருள் உபதேசித்தது பற்றிய செய்தியைக் கண்ணி 16இல் காண்க.
திருஞானசம்பந்தர் முருகனல்லர்.இதன்செய்தியைக் கண்ணி 59–61விளக்கத்தில் காண்க.

''மூகை நீக்கும் சரவணபவன்'' : செந்திற்பதியான்,அருட்டிரு குமரகுருபரரைப் பேசவைத்த அருளிப்பாடு போல், குன்றக்குடிஆறுமுகஅப்பன் செந்தில்குமார் என்ற பிறவி மூங்கைச் சிறுவனை(கி.பி1970களில்) பேச வைத்த அருளிப்பாடு . ஊரவரும் நானும்அறிந்த,இதனை;

'' வீர மருது பிளவைநோய் தீர்த்த விறல்மருந்தே
சீரலை வாயிற் குருபரர் நாவைச் செழிக்கவைத்த
பேரருள் போல்இன்று செந்திற் குமரனைப் பேசுவித்தாய்
ஆறு முகஅப்பா குன்றக் குடிஓங்கும் அற்புதமே'
– குன்றக்குடி ஆறுமுகப்பெருமான் பாமாலை.12.

என்று குறிக்கிறது.

குழாங்கள்:
கண்ணி134–160.(உலகுஉய்ய.....வேலா என்பார்)(பல்வகைமகளிரும்,அவர்செயலும்)

குறிப்புரை: விஞ்சையர்=வித்தியாதரர்.மைபடியும் நாட்டம்=மைதீட்டிய கண். ஆட்டியர்= மனைவியர்.நாகர் அரிவையர்=நாகர்உலக மகளிர்.கோட்டு=வஞ்சனை. செற்றோனை= கொன்றவனை.சீரகத்தை=சிறந்த இடத்தை.அடை மயில்கள் என்ன=வந்துசேர்ந்த மயில்கள் போல.வண்மை=வளப்பம்.முன்றில்= வீட்டுமுன்னிடம். உப்பரிகை,முகப்பு,திண்ணை, செய்குன்று,சன்னல்,கோபுரம், பொதுவிடம் என்பன மகளிர் கூடிஇருந்த இடங்கள். செந்தேன்= புத்தம்புதுத் தேன்.ஏனையோர் பெண்= வள்ளிநாச்சியார். வானநீர்=பெருமை பொருந்திய நீர்.மதலை=மகன்.குழைவார்= வருந்துவார்.மராத் தாமம்=கடம்பமலர்மாலை. நாமம்=புகழ்.மேயோமே=வந்தோம்.கார் ஊர்தி=அழகிய ஊர்தியாகிய மயில்.கண்கள்ஓர் ஆயிரம் பெற்றார்=கண்ஆயிரம் பெற்ற தேவேந்திரன்.உயிர்த்து=பெருமூச்சவிட்டு. அணைவீர்=கூடுவீர். மால்=மயக்கம்.குன்றுவார்= மனம் அழிவார். சேறு=தேன். அணி=சூட்டு.மாலை=கழுத்தில் அணியும் மாலையை, மயக்கத்தை. வாலைப் பெருமான்=இளம் பெருமான். வா=எம்மொடு கூடுதற்கு வா. படி– வகையாக,அடிகள்=கடவுள்.கணீர்=கண்ணீர்.யாமம்=இரவு. நீக்காய்= நீக்குவாய். சேமத்துகில்= மானம் காக்கும் ஆடை. விம்ம=பருக்க. வஞ்சி=வஞ்சிக்கொடி. பந்து= பந்தாக உள்ளகொங்கை. மந்திரம்உண்=மந்திரம்ஏறிய. புல்லோன்=அற்பன்.இல்லில் இருவா= எம்முடன் கூடுதற் பொருட்டு எம் வீட்டில் இருக்க வா.நாணை அழித்து=எம் வெட்கத்தை அழித்து. உம்முடைய நாணை=உமது பூணூலை.வெம்மலையில்=கொடிய மாமேரு மலையில். செண்டை=செண்டு என்ற ஆயுதத்தை,உன்கைப் பூச்செண்டினை.அண்டை=மிகப்பக்கத்தில்

பொழிப்புரை: சிறப்பித்துப் பேசப்பெறும் கலைகளில்வல்ல வித்தியாதரர்களின் மனைவியரும், மைதீட்டப்பெற்ற கண்களையுடைய கந்தர்வமகளிரும். கின்னரர்களின் மனைவியரும்,நாகருலக மகளிரும். வஞ்சனையான அசுர மகளிரும்.கிம்புருடர் சாரணர்

கன்னியரும். உலகப் பெண்டிரும்,பெருமை பொருந்திய வேலால் தாரகனை அழித்தமுருகன் நிலையாகத் தங்கியுள்ள குன்றக்குடியில் கண்டுவணங்குவோம் என்று ஒத்தமனத்துடன் எண்ணி வந்து சேர்ந்து பொருந்திய மயில்களாக விளங்கும் மகளிர் அனைவரும் வீடு,வீட்டு முற்றம்,உப்பரிகை, வீட்டு முகப்பு,திண்ணை,செய்குன்று,சன்னல், கோபுரம் மற்றும்பொதுஇடம் என்று எங்கெங்கும் பலாப்பழத்தில் ஈமொய்க்கும் தன்மைபோலக் கூடி,தமது உள்ளத்தில் உலவும் பெருமானின் தெய்வத்திருவருள் ஆகிய புத்தம்புதுத் தேனை,மைதீட்டப் பெற்ற அழகிய கெண்டைமீன் போன்ற அகன்ற விழியாகிய வண்டுகளால் தாம் வாழும் பொருட்டுப் பருகுவார்கள்.பெருமைபொருந்திய நீருடைய கங்கை மகனின் திருத்தோள் கண்டு அத்துடன் தமது மலைஒத்த கொங்கைகளை நோக்கி மனம் வருந்துவர்,இருமருங்கும் சிறந்து விளங்கும்வள்ளிநாச்சியார்,தெய்வயானை ஆகிய அழகிய மயில்களையும்,தன்னை நினைக்கும் அடியவர்களுக்கு அருள் வழங்கும் பன்னிரு திருக்கண்களையும், ஒளிபொருந்திய வேலை, தூயவெண்ணீறு துதைந்த அழகியநெற்றியை,இனிய திருமுகத்தை,புன்முறுவல் பூக்கும் மலர்ஒத்த இதழ்களை, திருத்தோளை, ஆராய்ந்து தொடுக்கப் பெற்ற கடம்பமலர் மாலையை, ஆயுதங்கள் பொருந்திய மலர்க்கரத்தை, புகழ்வாய்ந்த திருவடியை,இவை பொருந்திய எழில் வடிவான தலைமகனைத் தத்தம் கண்ணாரக் கண்டு மனம் உருகி வியப்பர், அண்ணாந்து அவனைப் பார்த்து எத்துணை அழகு என்பர், உலகை ஆளும் சேயோன் ஆகிய அருள்தரு சண்முகநாதப் பெருமானின் திருத்தேர் உலாக்காண நாங்கள் வந்தது எங்கள் மேலான தவம்என்பர்,இவனைக் காணஇவன்பால் அன்பு மிகுந்த அழகிய மயிலூர்தியின் தோகைக் கண்கள் போல ஆயிரம் கண்கள் பெற்ற தேவேந்திரனே மேலான அமரன் என்பர்,வீரம்மிக்க மயில்மீது அமர்ந்துள்ளவனைப் பார்த்து, அவனைக்கூட இயலாமையால் பெருமூச்செறிந்து, எம்மை வந்து கூடுவீர் என்று வேண்டுவார்,மனம்மயங்கி வருந்துவார்,தேன்மிக்க உமது மாலையை எமக்குச் சூட்டுக என்பர்,எம்மைக் கூடி நும்பாலான எம் மயக்கத்தை அழித்தருள் என்பர்,இளமையே வடிவானவனே எம்மைக் கூடுதற்கு வாஎன்பர்,நற்குணத்துக் கொடிகளான பெருமாட்டியர் இருவரும் குலவும் இவன் நமக்கு வகையாக அருள்வான் என்று கூறி வணங்குவர், கடவுளாகிய இவர்க்கு எமது கண்ணீர்தான் திருமஞ்சன நீரோ,எமது வளையல்கள்தாம் பூசனைக்கு உதவும் திருப்பள்ளித் தாமமோ,மன்மதன் எம்மை வருத்துவதைக் காணும் இங்குள்ள இறைவனே எம்மைச் சேர வா என்பர்,இரவு முழுதும் கூடி இருந்து எம்துன்பம் நீக்கு என்பர்,மானம் காக்கும் ஆடைநெகிழ அதனை இழப்பர்,மன்மதனது கணைகளால் தமது மனம் மிகத் துன்பமுறலால் யாதொருநிகழ்வும் அறியார், மிகவியர்ப்பர்,கொங்கைகள் இரண்டும் திரண்டு பருக்க அதன் கனத்தை வஞ்சிக்கொடி ஒத்தஇடை தாங்காது என்று மந்திரம் ஏறிய அற்பனைப்போலத் தரையில் புரண்டு வருந்துவார், நல்லவனே! உம்முடைய நாணினை– பூணூலை–உன் உடம்பில் தரித்தவனே! எம்முடைய நாணினை–வெட்கத்தை– அழிக்க எம் வீட்டில் இருக்க வா, மேருமலைக்கண் செண்டாயுதம் எறிந்தவனே! எமது வெப்பம்மிக்க கொங்கைகளின்மேல் உமதுகைப் பூச்செண்டினால் மோதுங்கள். உமது செவ்வாய் திறந்து ‘‘உமதுபக்கம்ஒருமுறை மிக அருகில் நெருங்கி வருவேன்’’என்று கூறுவீர்.எட்டுத்திசைகளிலும் மேலான தலைமை சான்றவனே! வேலவா! என்று கூறி வேண்டுவார்.

விளக்கம்: பெருமானின் தோள்களையும் தம் கொங்கைகளையும் நோக்கிக் குழைந்தது,புணர்ச்சி விருப்புணர்த்துவது. கண்ணி150–160வரையிலானவை குழாத்தின் காமமெய்ப்பாடு உணர்த்துவன.கண்ணி144–146 வரையிலானவை கேசாதி பாத வருணனை.

இலக்கணக் குறிப்பு: முன்றில்–இலக்கணப்போலி.முன்றிலில் மாடத்தில் முகப்பில் திட்டையில் செய்குன்றில் சாலத்தில் கோபுரத்தில் மன்றில்––எண்ணும்மைத் தொகைகள். கணீர்–இடைக்குறை.காணும் இறை–இறை–அண்மைவிளி.பலாப்பழத்தில் ஈ மொய்க்கும் பான்மைஎன, மந்திரம்உண் புல்லோனைப் போல––உவமை அணிகள். திருவருளாம் செந்தேன்,கயலாம் விழி––உருவகங்கள்.

1.பேதை (வயது 5–7)

கண்ணி 160–195: (உருவில் மிக்கார்.....தெரு அகன்றாள்)

கண்ணி 160–166: பேதைப் பருவ வருணனை

குறிப்புரை: பார்மகன்=மன்மதன்.மருவப்பெறாத=தைக்கப்பெறாத.செப்பு அழகு=புகழத்தக்க அழகு.திருப்பாவை=பேரழகுப் பதுமை.ஓதிமம்=அன்னப்பறவை.வளை மருவா வண்தரளம்=சங்கில் பிறக்காத வளமான முத்து.ஆய்ந்த=அமைந்த.மணி= நவமணிகள். வாய்த்தது=தனக்கு வாய்த்த அழகு.கொம்பு ஏறாத்தேறல்= மரக்கிளையில் பொருந்தாத தேன்.அம்பு அறா=மலரம்புகளை எய்வதில் சளைக்காத.எடாத=எடுத்துஆளாத. வம்பு=மணம். வேலை=பாற்கடல்.விண் அமுதம்=தேவாமிர்தம்.

பொழிப்புரை: பேதைப் பருவத்துக்கு உரிய சிறுமி ஒருத்தி.இவள்,மன்மதனின் மலரம்புகள் தைக்கப்பெறாத இளமான்;தன்னொப்பாரில்லா அழகுடைய காளையர்கள் தம்நினைவில் கொள்ளப்பெறாத அழகு மயில்;புகழத்தக்க அழகு ஒருதெய்வ வடிவம் கொண்டாலொத்து, இவ்வுலகில் உள்ள பேரழகுப் பதுமை;இனியதாமரைமலரில் இருக்கும் அன்னப்பறவை; நீரில் வாழும் சங்கில் பிறக்காத வளமான முத்து;சிறந்தமலர்கள் பூத்தலை அறியாத வஞ்சிக்கொடி;புகழ்வாய்ந்த நவமணிகள் இருக்கும் சுரங்கம்;தனக்கு வாய்த்த அழகினைத் தான்அறியாத மாணிக்கம்;அரிய மரக்கிளையை விட்டுஅறாத ஏத்துதற்கரிய தேன்; குறைவில்லா மணமுடைய மருக்கொழுந்து; மலரம்புகளை எய்வதில் சளைக்காத மன்மதன் வளைக்க எடுக்காத கரும்பு; மணம் அறாத சோலைகளையுடைய பொதிய மலையில் தோன்றும் சிறந்த தென்றல்;பாற்கடலில் தோன்றாத தேவாமுதம்.

இலக்கணக் குறிப்பு: உறா, மருவா,அறியா,அறா–ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்.

கண்ணி 166–170(பாலை உண.....பகருவாள்). (பேதையின் செயற்பாடுகள்)

குறிப்புரை: பாவை=விளையாட்டுப் பதுமை.தோன்றா=தெளிவாகத் தோன்றாத. பயோதரம்=முலைகள். சித்திரம்=பேரழகு.வன்னி=கிளி.புளகம்=கண்ணாடி.தன்னுடனே உற்று விளையாட அணைவாய். கொற்ற முலை=வலிமை வாய்ந்த முலை.

பொழிப்புரை: தெளிவாகத் தோன்றாத தன் முலைகளில் ,தான் விளையாடும் பதுமையை அணைத்துப் பாலூட்டுவாள்;ஆவலுடன் வாழைப்பழத்தை அழகிய குற்றமற்ற

சிறப்புடைய தனது கிளிக்குத் தந்து மகிழ்ந்து உண்ணுமாறு கூறுவாள்;கண்ணாடியில் தோன்றும் தன்உருவத்தைத் தன்னுடன் தெருவில் சிற்றில் இழைத்து விளையாட வந்து சேர்க என்று அழைப்பாள்; வலிமைவாய்ந்த தனது முலைப்பாலைத் தனது பாவை அருந்துவதில்லை ,எனவே பசியுண்டாக்கும் மருந்தினை அப்பாவைக்குப் புகட்டினால்தான் பால் பருகும் என்பாள்.

கண்ணி 170–176: (ஞால மிசை.....முலையினாள்) (பேதையின் வடிவழகு)

குறிப்புரை: ஞாலமிசை=இவ்வுலகில் .ஆர்த்து=கட்டி. அளகம்=கூந்தல். குழல்என்ன = புல்லாங்குழல் போல. இசைக்கும்= இனிமையாகப்பேசும். துன்னு வித்து=வலிமையான விதை. மாமரம்=மிகப்பெரிய மரம். தொக்கது போல்=மறைந்திருப்பது போல. மது கைடவர்=மது, கைடவர் என்ற இருஅசுரர். வேலை=கடல். மைநாகம்=மைநாகம் என்ற மலை. உம்பர் களிக்கும் இறை=தேவர்கள் மகிழும் தேவேந்திரன். அம்போருகம்=தாமரைத் தண்டு. ஆகண்டலன்=தேவேந்திரன். மொய்ம்பு=வலிமை.

பொழிப்புரை: இவ்வுலகில் கூர்மையான அறிவில்லாதவர் மேற்கொண்டு செய்யும் தொழில்சிறப்பாக ஒன்றுபட்டு முடிவடையாதது போல ஒருசேரக் கட்டி முடிக்கப் பெறாத கூந்தலுடையவள்;நன்னீரில் மலர்ந்த தாமரை மலர்போல் மலர்ந்த அழகிய முகமுடையவள், இனிமை நிலைத்த நல்ல புல்லாங்குழல் போல இனிய இளம் மழலை பேசும் வாயுடையவள்; வலிமையான விதைக்குள் பின்னர் வளரவுள்ள பெரிய மரம் மறைந்திருப்பது போலவும்; முன்னொரு காலத்தில் திருமாலின் திருச்செவிகளில் மறைந்திருந்த மது, கைடவர் என்ற இருஅசுரர்களைப் போலவும்;வாலிமீது அம்பெய்ய இராமன் மறைந்திருந்தது போலவும்;(நம் இந்தியநாடு,இலங்கை இவற்றின் இடையுள்ள)கடலில் ஒளித்த மைநாகமலை போலவும்; உமையொரு பாகன் சடையில் ஒளித்த கங்கை போலவும்; தேவர்கள் மகிழும் தேவேந்திரன் அசுரர்க்கு அஞ்சித் தாமரைத்தண்டினுள் ஒளிந்திருந்தது போலவும் வலிமையுடன் முற்பட்டுத் தோன்றாத முலைகளையுடையவள்.

இலக்கணக் குறிப்பு: மதியிலார்–இலார்–இடைக்குறை. தோன்றா–ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். துன்னு வித்தில்.....முலையினாள்–பல்பொருள் உவமையணி.

கண்ணி 176–179 .(பைம்பொழில்.....உயர்காலை) (பேதையின் விளையாட்டு)

குறிப்புரை:மன்னு=நிலைபெற்ற. உன்னும்=விரைந்துவளரும். அரக்காம்பல்=செவ்வாம்பல் கிள்ளை=கிளி. வேட்டல் கிரியை=வேள்விச் சடங்கு. கள்=தேன். கடி=மணம் .பொரி= வேள்வியில் இடும் நெற்பொரி. பொற்பாவை=தனது அழகிய விளையாட்டுப் பதுமை. உன்னு மணம்= கிளர்ச்சியூட்டும் திருமணம். காலை=பொழுது.

பொழிப்புரை: பசிய சோலைக்கண் நிலைபெற்ற கொடிகளால் ஆன பந்தரே மணப்பந்தராகவும். பொய்கையில் விரைந்து வளரும் செவ்வாம்பல்மலரே வேள்வித் தீயாகவும். தான்வளர்க்கும் கிளியே வேள்விச் சடங்கு இயற்றும் அந்தணராகவும். தேனே வேள்வியில் சொரியும் நெய்யாகவும். புன்னைமரத்தின் மணக்கும் வெண்ணிறப் பூக்களே அந்த வேள்வியிலிடும் நெற்பொரியாகவும் கொண்டு தனது அழகிய விளையாட்டுப் பதுமைக்குத் தனது மனத்தில் கிளர்ச்சியூட்டும் திருமணம் செய்யும் பொழுது;

இலக்கணக் குறிப்பு: பந்தர்–கடைப் போலி. கடி விரவு–உரிச்சொற்றொடர். பைம்பொழில்வாய்–வாய்–ஏழன் உருபு. பைம்பொழில்வாய்.....உயர்காலை–முற்றுருவக அணி.

கண்ணி 179–195 : (மன்னுவேல்.....தெருவகன்றான்)
(மயூரகிரியான் அத்தெருவில் எழுந்தருளல்,கண்ட பேதைவினாதல்.தாயர்விடை)

குறிப்புரை: மன்னு=மிகமிக உயர்ந்த.வேல் வேந்தன்=அருள்தரு சண்முகநாதப் பெருமான்.தேவவேழம்=தெய்வயானையம்மை.காந்தன்=கணவன்.காகளம்=எக்காளம்எனும் குழற்கருவி. தாம்தம்=ஒலிக்குறிப்புச் சொற்கள்.பல்லியம்=பலவகை இசைக்கருவிகள். முலைத்தாயர்= செவிலித்தாய்மார்.ஆய இவர்=பேதையும்செவிலித்தயரும்.சிற்றில்=மணல் வீடு. சிறு சோறு= மணற்சோறு.சொல்தகைய=புகழ்வாய்ந்த.அம்மான்இறைவன்= சிவபிரான்.அம் மான்மகள்= மானுக்கு மகளாகிய வள்ளிநாச்சியார்.ஏயது என்=வந்த காரணம்என்ன.ஆய்அவிதென்–ஆய்தென்அவி=ஆராய்ந்துசெய்த அழகிய அவிஉணவு. கோதில்=குற்றமற்ற.தீதறு=தீமை யற்ற.சில்அடிசில்=சிறு சோறு.கடிதில்=விரைந்து.ஆய்= செவிலித்தாய்.கடிஉலா=காத்தல் தரும்உலா.ஆரம்=முத்துமாலை.சேனை இறை=சேனாபதி. தெய்வச்சிலம்பு= தெய்வத்தன்மை யுடைய வள்ளிமலை.மனை= மனைவி.வான்அயில்= பெருமை பொருந்தியவேல்.என்=என்ன. வடிவேல்=கூரிய வேல்.சிகாவளம்=மயில்.தத்தை= கிளி.அத்தன்=கடவுள்.ஊரும்=ஏறிவரும். ஆசில்=குற்றமற்ற.

பொழிப்புரை: மிகமிக உயர்ந்த வேல்ஏந்திய அரசன் வந்தான்;தெய்வயானை யம்மையை மகிழ்ந்து அணையும் அவள் கணவன் வந்தான் என்ற எக்காளமுழக்கம், "தாம்தம்''என்றும் "கிண்'' என்றும் ஒலிக்கும் பல்வகை இசைக்கருவிகளின் முழக்கம் முதலியன கேட்டுச் செவிலித்தாயர் குன்றக்குடியானை வணங்க வந்து சேர்ந்தனர்.உடன் வந்த பேதை,புண்ணியமே வடிவான அப்பெருமானின் திருவடிகளைத் தன்தாய்மார் தொழுவதைப் பார்த்துத் தானும் தொழுதும் போற்றியும் தன் தாயருடன் தனது சிற்றிலை அடைந்தாள்.பேதையாள்,செவிலியரிடம்''தூய எனது சிற்றிலில் சமைத்த சிறுசோறு உண்ண விரும்பியா?சிறியவளாகிய நான் கற்ற கழற்காய் ஆடலைக் கற்கவா? புகழ்வாய்ந்த தகுதியுடைய தந்தையாகிய சிவபெருமான் அருளிய அழகே வடிவான முருகப்பெருமான் ஆகிய கடவுளும், மானுக்கு மகளாகவந்த அழகிய வள்ளிநாச்சியாரின் கணவனும், ஆறுதிருமுகனும் ஆகிய இவன் இங்குவந்தான்? இங்கு வந்ததேன்?'' சொல்லுங்கள் என்றாள்.இப்பேதைப் பருவத்தாள் சொல் கேட்ட செவிலியர்,"பெண்ணே!வேதியர்கள், மெய்ந்நூலாகிய ஆகமமுறைப்படிஆராய்ந்துசெய்த அழகிய அவிஉணவை–அமுதத்தை உண்ணும் குமரன்,குற்றமற்ற உன் சிறுசோறு உண்ண வருவானா? வரமாட்டான்.ஆக்கல், காத்தல்,அழித்தல் என்ற முத்தொழிலும் நினைப்பளவில் புரியும் வல்லமை வாய்ந்த பெருமானும்,மறைகூறும் பெருமானும் ஆகிய அருள்தரு சண்முகநாதன்இங்குக் கழங்காட வருவானா?வரமாட்டான்'' என்று கூற இவள் அவனை வணங்குவாள்.பின்னர் இவள், செவிலியிடம் "இவன் இங்கு வரக் காரணம் என்ன?'' என்றாள்.முத்துமாலை அணிந்தசெவிலியர்"உலகு காக்கும் உலாவந்தான்'' என்ன;குற்றமற்ற பேரமுதமாக விளங்கும்பேதை, திருத்தேரில் ஏறித் தங்கியுள்ள இளையோனைச் சுட்டிக் காட்டி "இவன் யார்''என்றாள்.செவிலியர் தேவரது சேனைத் தலைவனாகிய

தேவசேனாபதி''என்றார்.தெய்வத்தன்மை வாய்ந்த வள்ளிமலைக்கு உரிய மானாகிய வள்ளிநாச்சியாரைக் காட்டி'' இவர் யார்'' என்றாள்.இவர்,''பெருமானுக்கு மனைவி''என்றார்.மேலான வேலினைக்காட்டி''இது என்ன''என்றாள்''கூர்மையான வேல்'' என்றனர்.''மயிலை'' இது என்ன'' என்றாள்.''இது அழகிய மயில்'' என்று வணங்கினர்.''இம் மயிலை என்கிளியுடன் வைத்து விளையாட,தகுதியுடைய இக்கடவுளிடம் வாங்கித் தாருங்கள்''என்றாள்.''இக்கடவுள் தமது ஊர்தியாகக் கொண்டு ஏறிவரும் இவ்வழகு மயிலைத் தருவானா? தரமாட்டான்; தாயே! செல்வோம்'' என்றுகூற, செல்ல மனமில்லாத இப்பேதை தன்னிரு கண்களில் இருந்தும் மிக்க ஒளிவீசும் முத்துக்களைப் போலக் கண்ணீர் சிந்தினாள். பெருமானும் குற்றமற்ற அத்தெருவை விட்டுப் புறப்பட்டுச் சென்றான்.

விளக்கம்: புண்ணியத் திருவடியின் சிறப்பு :

''நின்னிற் சிறந்தநின் தாளிணை அவை'' –பரிபாடல்

''திருவடி யேசிவம் ஆவது தேரில்
திருவடி யேசிவ லோகம்சித் திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே'' –திருமந்திரம்.

சிற்றில்,சிறுசோறு: ''விளையாட் டயரும் மணற்சிற்றில் வீட்டுக் குடிபுக்கு..... வயல்மா மகளிர் குழாம் சிறுசோறாக்கும் பெருந்தண்பணை''–மீ.பி,தமிழ்.தால்.2.

பெருமானின் முத்தொழில்: பெருமானின் தொழில்கள் ஆக்கல்,அளித்தல் அழித்தல், மறைத்தல் அருளல் என்று ஐந்தாயினும்; மறைத்தலை அழித்தலிலும்,அருளலைக் காத்தலிலும் அமைத்து மூன்று என்ற வழக்கம் பற்றி இவரும் முத்தொழில் என்றார்.

தேவரது சேனை இறை: ''திக்கெட்டும் விளையாடும் சேனாபதிக் கடவுள்''
முத்துக் குமார.பி தமிழ்.செங்கீரை.3.

''பூட்டிய சிறை விடுத்து அமரர் குறைமுடித்து உதவு சேனாபதிப் பெருமான்''
முத்துக் குமார.பி.தமிழ்.காப்பு.3.

இலக்கணக் குறிப்பு: தாம்தம் –ஒலிக்குறிப்புச் சொற்கள்.உகந்தோ, கற்கவோ–வினா ஓகாரங்கள். சேருவனோ,அடைவனோ,ஈவானோ–எதிர்மறை ஓகாரங்கள்.கடி உலா– உரிச்சொற்றொடர்.முத்தொழில்–தொகைக்குறிப்பு.அனையே–மரபுவழுவமைதி,இடைக்குறை. இருகணீர்.....தரளம் போல் விட்டாள்––உவமையணி.

கண்ணி 195–225. பெதும்பை.(அங்கொருத்தி....நடத்தினான்) (வயது 8–11)

கண்ணி 195–205. (அங்கு ஒருத்தி.....மலர்முகத்தாள்)(பெதும்பையின் வடிவழகு)

குறிப்புரை: மருவ=பொருந்த.செவ்வி=அழகு.பைந்தாது=வளமான பூந்தாது.உகாத= சிந்தாத.பரும் அரும்பு=பெரிய அரும்பு=போது.கந்தரம்=மேகம்.அழையாத=தன் இணையைக் கூவி அழைக்கத் தெரியாத.கோகிலம்=குயில். கோடாத வாய=கட்டுக்கரை இல்லாததான.ஏய= பொருந்த.அணிகண்டம்=அழகிய கழுத்து. என்பினைப் பெண் ஆகச்செய் மன்னன்= மைலாப்பூர்ப் பூம்பாவையின் நீறு ஆன எலும்பைமீண்டும் பூம்பாவையாகஎழுப்பியதிருஞானசம்பந்தர்.வான்=உயரமான.கட்செவி=பாம்பு.துணை=

இரண்டு.முரல்=பற்கள்.மணம்= சேர்க்கை.

பொழிப்புரை: சிறப்பித்துக் கூறும் பெதும்பைப் பருவமுடையாள் ஒருத்தி, மன்மதனின் காம பாணத்தைத் தழுவ நினைக்கின்ற இளமான்;அழகினால் செந்தாமரையில் வாழும் திருமகளின் அழகு வளரும்அன்னம்;வளமான பூந்தாதினைச் சிந்தாத மலரும் பக்குவத்துப் போது; மேகத்தைக் கண்டு தோகை விரித்து ஆடாத மயில்;தன் இணையைக்கூவி அழைக்காத குயில்;எக்காலத்தும் வாடாத காமஅனுபவத்தை வாசித்துக் கொண்டிருப்பவள்; கட்டுக் கரை இல்லாத சரவணப் பொய்கையில் ஒருருக் கொண்ட முருகப்பெருமானின் ஒருருவைப்போல் பொருத்தமுற முடித்த கருங்குழல் உடையவள்;தன் நெற்றி தூயவெண் பிறை போன்று அமைந்தவள்;கெண்டை மீன் போலும் தண்ணிய பார்வையுடைய விழிகள்,சுரும்புகளே என்று கூறும் தகுதியுடையவள்; வெண்சங்கு எனத்தகும் அழகிய கழுத்தினையுடையவள்;மயிலையில் பூம்பாவையின் நீற்ற எலும்பைப் பெண்ணாக்கிய திருஞானசம்பந்தரின் கைத்தாளம் போலவும்,உயரமான பாக்கு மரத்தில் பொருந்திய இளங்காய் போலவும்;புற்றில் நுழைந்த பாம்பு தன்தலையைச் சிறிதளவுவெளிக்காட்டுதல் போலவும் சிறிதளவு முகங்காட்டும் இருமுலைகளை உடையவள்;தனது செங்கை இரண்டும் மாந்தளிர்போல் சிவந்தவள்;தனது இணையுடன் சேரும் கிளியின் நுட்பமானசேர்க்கையைக் கண்டு,அந்நிலை தனக்கு இல்லையே என்று வருந்துவாள்,மிகுதியாக வண்டுகள் மொய்க்கும் தாமரை மலர்ஒத்த முகமுடைய அவள். இலக்கணக் குறிப்பு: என்பினைப் பெண்.....துணை முலையாள்–பல்பொரு ளுவமையணி.

கண்ணி 205–219, (மாளிகையில்.....ஓவியன்) (பெதும்பையும் ஓவியனும்)

குறிப்புரை :மன்னும்=மிகுந்த.அண்டர் பதி=தேவர்களின் அமராவதி நகர். நந்தும்=வளரும். பயில்காலை=விளையாடும் பொழுது,சந்தம்=அழகு.காவி= கருங் குவளைமலர்.தோகைவரை=மயில்மலை.தோன்றல்=அருள்தரு சண்முகநாதப் பெருமான். படத்து=திரைச்சீலையில். வலன்=வல்லவன்.மெய்ப்புலவ நாமம்=மெய்யான புலமைப் புகழ். நாகம்=மலை. நாட்டி=எழுதி.ஒல்லை=விரைந்து. மானின் அமரர் பெருமானின் சீர் உயரும் மக்கள்=மானின்,தேவேந்திரனின் உயர்ந்த சிறப்புடைய மக்களாகிய வள்ளி, தெய்வயானை. நாரியர்=தெய்வமகளிர். அண்ட=நெருங்க. பண்டை நாள் இல்லா வழி=பண்டுமுதல் இல்லாத வழக்கம்.போதும்=வரும்.

பொழிப்புரை: தனது மாளிகையில் பணிபுரியும் மிகுந்த தோழியருடன்,தேவருலக அமராவதி நகரைத் தொடுமாறு விளங்கும் தனது மாளிகையின் மேல் மாடத்தில் தான் விரும்பும் அம்மனை,கழங்கு,பந்து ஆகியவற்றைத் தன்தோழியருடன் விளையாடும்போது, பண்பு அகலாது அழகு மிக்க ஓவியம் தீட்டும் ஒருவன் அங்குவர, கருங்குவளை மலர்ஒத்த கண்களையுடைய இவள் அவனிடம்'' ஓவியனே! மயில் மலையில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப்பெருமானின் திருவுருவத்தை,மேலான கயிலை மலைக்குரிய சிவபெருமானுக்கு மகனது அழகுருவத்தை, வெற்றிமிக்க சேவற்கொடி உயர்த்தியவனது சிறப்புப் பொருந்திய ஓவியத்தைத் திரைச்சீலையில் வரைந்து அவன் மீது ஆவல் கொண்ட எனக்குத் தா'' என்றாள்.அவளது வேண்டுகோளைச் செவியுற்றவனான பெருமைபொருந்தியஅவ்வல்லவன்''இப்படிப்பட்டவன், இன்ன வடிவினன்,இன்ன குணத்தன்

என்று எழுதவோ கூறவோ இயலாத இறைவனை,சிறந்த மறைகளும் தேடிக் காணற்கரிய பேரரசனை எழுதும் வல்லமை எனக்கு உண்டோ? ஆயினும் பெண்ணே உனக்கு அவன் திருவுருவை நல்லவர்கள் சொல்லியபடி எழுதி விரைந்து உனக்குத் தருவேன்'' என்று எம்பெருமான் நல்லுருவை ஓவியமாகத் தீட்டி மகிழ்ந்து அளித்தான்.அதனைப் பெற்று மகிழ்ந்தவள் இரு தேவியரையும் காட்டி'' இவர்கள் யார்'' என்றாள்.அதற்கு அவன் ''மான், பெற்ற,தேவேந்திரன் பெற்ற உயர் சிறப்புடைய மக்கள் என்பதறி நீ'' என்றான்.தெய்வமகளிர் இருவரையும் கண்டு பெருமூச்சுவிட்டு,''பரன் பக்கத்தில் என்னையும் ஓவியமாகத் தீட்டுக'' என்றாள். கூரிய அறிவு உடைய அவன், ''கந்தப்பெருமான் திருவடியை நெருங்குதல் என்பது எல்லார்க்கும் எளியதன்று, பண்டை நாள்முதல் இல்லாத வழக்கத்தை இவன் செய்தான் என்று என்னை எல்லாரும் இகழ்வார்கள். நல்லவளே! இன்று இறைவன் செல்லும் இனிய உலாக்காட்சியில் உன்னை நன்கு காண்பேனானால் நாளை அவ்வாறே ஒன்று எழுதி உனக்குத் தருவேன்'' என்று கூறி அவ்விடம் விட்டகன்றான் அவ்வோவியன்.

விளக்கம்: இப்படியன் இவ்வடிவன்.....திருவுருவை:

''மைப்படிந்த.....இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே''

–அப்பரடிகள்.திருத்தாண்டகம்

இலக்கணக் குறிப்பு: அம்மனை கழங்கு பந்து–எண்ணும்மைத் தொகைகள். கூறுவான்–முற்றெச்சம்.சொலும்,அனை–இடைக்குறைகள்.

கண்ணி 219–225.(''மாவேள்...நடத்தினான்'') (பெதும்பைவினா,தோழியர்விடை, தேர்புறப்படுதல்)

குறிப்புரை: மாவேள்= குன்றக்குடிப் பெருமான்.மணி=அழகு மறுகு=தெரு.பாகு= வெல்லப்பாகு.நாகியர்=தெய்வமகளிர்.இவ்விளைஞன்=இந்தஇளைஞனாகியமுருகப்பெருமான். மானம்=பெருந்தன்மை.காபாலம்=மண்டைஓடாகிய பிச்சைப்பாத்திரம்.மலை நீலி=மலையில் தோன்றிய கருநிறத்தள்.சூழும்=இவர்களோடு உள்ள. அம்மான்=மாமன். முன்னோன்=மூத்த மகன்.மாவயிறன்=பெருவயிறுடையவன் இப்பரிசு=இத்தன்மை. எண்ணும்=மதிக்கத் தக்க. மாறு==மறுமொழி.இளைய நம்பன்= அனைவரும் விரும்பும் இளையோன்–முருகன். நடத்தினான்=மேற்செல்ல விடுத்தான்.

பொழிப்புரை: அருள்தரு சண்முகநாதப் பெருமான் அழகிய தேர்ஏறி வந்தான். இப்பெதும்பை தெருவுக்குச் சென்று தன் தோழியருடன் எம்பெருமானை வணங்கி''வெல்லப் பாகு போன்று இனிக்கப் பேசுகின்றவர்களே! தோழியரே! அத்தெய்வ மகளிருடன்கூட நானும் ஒருத்தியாய் இந்த இளைஞனிடம் (முருகனிடம்) ஏன் இருத்தலாகாது?'' என்றாள். பெருந்தன்மையுடைய அத்தோழியர்,''பெண்ணே! நீசொல்லும் இவனுக்கு அப்பன் மண்டை ஓட்டினை ஏந்தி அதில் பிச்சை எடுப்பவன்;அதுகிடக்க, இவனுக்குத் தாயோ மலையில் பிறந்த நீலி (கருநிறத்தவள்);இவர்களோடு உள்ள இவனுக்கு மாமன் வெண்ணெய்த் திருடன்;இவனுக்கு மூத்தவன் பெருவயிறன்; பெருமைகளில் சிறந்தஇவனது இத்தன்மைக்காகவா நீ இவன்மேல் மதிக்கத்தக்க மையல் பூண்டாய்?'' என்று கூறி உடனே மிகநகைத்தனர்–கேலிசெய்தனர். வண்டுகள் மொய்க்கும் மாலையணிந்த பெதும்பை

மறுமொழி ஒன்றும் கூறாத இந்நிலையில்,தண்ணிய மாலையணிந்த தேவர் தலைவன் ஆகிய மிகச்சிறந்த குமரனும், செம்மையானவனும், இளமையேயுடையவனுமாகிய விரும்பத்தக்க பெருமான் தன் தேரினை அத்தெருவில் மேல்நடத்திச் சென்றான்.

இலக்கணக் குறிப்பு: சொலும்,அனை–இடைக்குறைகள். வாழி–இடைச்சொல்.

கண்ணி 225 –247. மங்கை(கும்பமுலை.....ஆறினாள்) (வயது 12–13)
கண்ணி 225 –235 . (கும்பமலை.... நடையினாள்.) (மங்கைப் பருவ வருணனை)

குறிப்புரை: குலாவ=கொண்டாட.மையல் கடுவாகும் நோய்=காமம் ஆகிய விடநோய். கூளி=உறவு=சேர்க்கை. வாளியான்=மலர்அம்புகளையுடைய மன்மதன். நாகு=இளமை. வேக மின்=ஆற்றல் வாய்ந்த மின்னல். காட்சி =அழகு. வாசவனின் ஆசில் உயர் ஊர்தி=இந்திரனின் குற்றமற்ற சிறந்த ஊர்தி–மேகம்.அளகம்=கூந்தல். வியன்நுதல்= பெருமை பொருந்திய நெற்றி.நாணி=வில் நாண்.சாரங்கம்=யாழ். நீர் அங்கண்= தண்ணீர் வளமுடைய இடத்தில். குழல்=மூங்கில். தோகை மலை=மயில் மலை. பூவாளித் தோன்றல்=மலர்அம்புகளையுடையமன்மதன்.மன்மதன்உடல்=மன்மதனின்உடம்பு.இதுஉருவமில் லாதது–அருவமானது.வான்உயரும் ஓடை= வானிலிருந்து வரும் சிறந்த ஆறு–கங்கை. மானும்=ஒத்த.கதலி=வாழை. சோதி=ஒளி.

பொழிப்புரை: இவள் குடத்தையும் மலையையும் ஒத்த மார்பகங்களையுடைய மங்கைப் பருவத்தவள் ஆவாள்.மன்மதன் கொண்டாட விரும்பும் அழகி;அழகுதங்கிய காளை ஒத்த ஆண்களுக்குக் காமநோய் தந்து தனது சேர்க்கையால் அந்நோய் தீர்க்கும் கொள்கையுடையவள்;மலர்அம்புகளையுடைய மன்மதனது காமநூல் கற்று அதன் பொருளறிந்து மனம் பூரிப்பாள்; என்றும் இளையோனாகிய முருகப் பெருமானது திருத்தோள் கூடி இன்புற விரும்புகிறவள்; ஆற்றல் வாய்ந்த மின்னல் தரையில் இறங்கி வந்தது போன்ற அழகி;இந்திரனின் குற்றமற்ற கரிய மேகம் போன்ற கூந்தலுடையவள்; மேலானவர்க்கெல்லாம் மேலான சிவபெருமானின் சடையில் வளரும் பிறை போன்று பெருமை பொருந்திய நெற்றியுடையவள்; மன்மதனின் கரும்பு வில்லுக்குரிய நாணாகிய கருவண்டு ஒத்த புருவமுடையவள்;மாட்சிமைப்பட்ட அழகுடைய வள்ளிநாச்சியாரை ஈன்ற மான்ஒத்த மருட்சியும்.முருகன் உவக்கும் உயர்ந்த வேல் ஒத்த கூரிய பார்வையும் வடிவழகும் கொண்டு,உள்ளக்கரவுடன் நோக்கும் விழிகளுடன், கொவ்வைக்கனி போன்ற இதழ்களுடைய வாய்திறந்து யாழ் போல் இனிக்கப் பேசுகின்றவள்; நீர்வளமுடைய இடத்தில்தோன்றும் மூங்கில் ஒத்த தோள்களுடையவள்;மயில் மலை போன்ற முலைகள் உடையவள்;மலர் அம்புகளையுடைய மன்மதன் போல் அருவ இடையுடையவள்; வானிலிருந்து இறங்கும் சிறந்த கங்கை ஒத்த அகற்ற அல்குல் உடையவள்; சிறந்த வாழையினை ஒத்த தொடையுடையவள்;நான்முகனது ஒளிவளரும் அன்னம் போன்ற நடையுடையவள்

விளக்கம்: தங்கும் எழில் காளையர்க்கு மையல் கடுஆகு நோய் ஈந்து கூளியால் நோய்தீர்க்கும் கொள்கையாள்:

"இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு

நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து'' –திருக்குறள் 1091.

இலக்கணக் குறிப்பு: மையல்கடு–உருவகம்.

கண்ணி 235_248.(பூஞ்சோலை.....ஆறினாள்) (மங்கை ஊஞ்சலாடுதல், பெருமானைக் கண்டு காமுறல்)

குறிப்புரை: புடையினார்=சூழ்ந்திருப்போர்.திருஊசல்=அழகிய ஊஞ்சல். மணிச் சூடகங்கள்=ஒளிரும் வளையல்கள்.வியன் நூபுரம்=சிறந்த சிலம்பு. பார் வரையான்=உலக மலைகளை எல்லாம் தனக்கு உரிமையாக உடைய முருகன். அண்மையுறும்=நெருக்கமான. புண்டரிகத்தாள்= தாமரைமலர் ஒத்த திருவடி.மறுகு= தெரு.வேளான்=மன்மதன்.போதுப் படுக்கை=மலர்ப் படுக்கை. திருமாலை=அழகிய தோள் மாலை.தெய்வத் தன்மைவாய்ந்த மாலை எனினும் ஆம்.உற்ற பெருமாலை= கொண்ட பெருமயக்கம்.வளர் பெருமான்=உயர்ந்த தலைவனே. நிருமலா=இயல்பாகவே மலமில்லாதவனே.கழறும்=கூறுவாள்.முடி சோரும்= தலைமுடி அவிழ்ப்பாள். உனை மாலை மருவ=உன்னை இன்று மாலைநேரத்தில் தழுவ. மாலை அளித்து=தன் தோள்மாலை தந்து.மாலைஒழிக=காம மயக்கம் தீர்க.ஆறினாள்= காமம் தணிந்தாள்.

பொழிப்புரை: இம்மங்கை பூஞ்சோலையை அடைந்து சூழ இருப்பவரும் தோழியரும்கூற,அழகிய ஊஞ்சலில் ஏறி, கைகளில் ஒளிரும்வளையல்கள் ஒலிக்க, இருவிழிகளும் காதளவு ஓட, நெற்றியில் வியர்வை அரும்ப,சிறப்புப்பொருந்திய சிலம்புகள் ஆரவாரிக்க,கூரிய பார்வையுடைய இவள் ஊஞ்சலாடிப் பெருமகிழ்வு கொண்டு, உலக மலைகளுக்குத் உரிமையுடைய முருகனின் வள்ளல்தன்மையைத் தோழியர்மூலம் கேட்டு மகிழ்வுடன் இருக்கும் போது,ஆற்றலுடைய ஞான வடிவான வேல் ஏந்திய பெருமான் தமது அழகிய தேரில்ஏறி,தமக்கு நெருக்கமான தொண்டர்களுக்கு அருள்புரிய எழுந்தருளினான். மங்கை அவ்விடம் அடைந்து தேவர்க்கும் அரிய அவனை வணங்கினாள்.தாமரை மலர் ஒத்த திருவடிகளை யுடைய அவன் அத்தெருவைக்க கடந்து சென்றான். அது கண்ட அழகிய மயிலாகிய அவள் மன்மதனின் மலரம்புகளால் மிக மெலிந்தாள்.தோழியர், பெண்களுக்கு எல்லாம்அரசியாக விளங்கும், அழகு மயிலாக விளங்கும் அவளைக் கொண்டுபோய் மலர்ப் படுக்கையில் கிடத்தினர்.முருகப்பெருமானின் தோள் மாலைவிரும்பிய அழகிய முலைகளை உடைய இவளின் பிதற்றுதலுடன் கூடிய காமமயக்கம் கண்டு ,''மணம் மிக்க மாலைகளில் தங்கும் மணம் போல உயிர்களில் எல்லாம் தங்கி அன்பு செய்யும் என்றும் உள்ளவனே–நிலைத்தவனே!இவள் ஆசையை நீக்குவாய்'' என்பர், ''மலமில்லாதவனே'' என்பர்,''இவள் துன்பம் போக்குவாய்'' என்பர்,கிளியைப்பார்த்து ,''தன்பருத்த முலைகளைப் பார்த்துப் பெருமூச்சுவிடும் இவளது காம மயக்கத்தை விரைந்து போய்க் கூறுக'' என்பர்.தலைமுடி சோர வருந்தும் இவளைத் தாய்மார் அடைந்து பார்த்து,''தன்னொப்பில்லா இம்முருகன் இன்றுமாலை உன்னைக்கூடுமாறு கூறுவேன்;இவன் தன் தோள்மாலை சூட்டி உன்னைத்தழுவுவான்.எனவே உன் மயக்கு ஒழிக''என்று கூற, அது கேட்ட ஒளிபொருந்திய நெற்றியையுடைய இம்மங்கை மிக்க ஆறுதல் அடைந்தாள்.

விளக்கம்: ''தத்தையினை நீபோய்க் கடிதுரைப்பாய்'' என்றது ''கேட்பன போலவும்

கிளக்குந போலவும் அ.ஃறிணை மருங்கிலும் அறையப்படுமே'' என்றவாறு அமைந்தது. தழுவுதல் பெறாத தன் முலைகளை நோக்கிப் பெருமூச்செறிந்ததும் முடிசோர்தலும் காமக்குறிப்புடையன.

இலக்கணக் குறிப்பு: ''ஒப்பிலான் மாலை உனைமருவச் செப்புவேம் மாலை அளித்து உன்னை மருவுவார் ஆகலின்நீ மாலை ஒழிக''–சொல்பின்வருநிலை அணி.

கண்ணி 248 –272 . மடந்தை.(அங்கொருத்தி... நத்தினாள்) (வயது14–19)
(மடந்தையின் வடிவழகு)

குறிப்புரை: ஆயும் இழை=ஆராய்ந்தெடுத்தஅணிகலன்.மாறு இல்= தன்இயல்பில் மாறாத. வான்=மேலான.மதன் கூறும்=காமநூல் கூறும்.நாமம்=புகழ். சாமக் கருங்குவளை=இரவில் மலர்ந்து மணம் பரப்பும் குவளை மலர்.காமரு=மிக்க அழகிய. தும்பி=வண்டு.கொன்றைக்காய் அளகபாரம்=சரக்கொன்றைப்பழம் போல் கருமையுடன் நீண்ட கூந்தற் சுமை.விற்கோலம்=வில்லின் அழகு.விழி ஆலம் காட்டினாள்=தனது விழியால் காம நஞ்சினைக்காட்டினாள்.மல்=வளமை. கோணம்=மூக்கு. வஞ்சை=சிறிய. களம்= கழுத்து.வண்மை=அழகு.வல்லம்=அம்+வல்=அழகிய சூதாடு கருவி.கூடலாள்=கூடியவள். வஞ்சியாள்=வஞ்சிக்கொடிபோன்றவள்.மால் உதரம்=பெருமை பொருந்திய வயிறு. குற்றாலம்= சிறிய ஆலிலை.வாய்மை=மெய்மை. மாரன் உருவனைய வஞ்சியில்=மன்மதனின்அருவமாகிய வஞ்சிக்கொடிஒத்த இடையில்.காஞ்சி=மகளிர்ஆடைமேல் இடுப்பில் அணியும் எட்டுக்கோவை அணி. மாயூரம்=மயில்.செவ்வி=அழகு.நாகர்கோஇல்=ஆதிசேடனின் படம் போன்ற. கஞ்சன் ஊர்= நான்முகன்ஏறிச்செல்லும்.

பொழிப்புரை: முருகப் பெருமானைக் காண வந்தாருள் ஒருத்தி ஆராய்ந்தெடுத்த அணிகலன் அணிந்த மடந்தைப் பருவத்தினள் ஆவாள்.இவள் மன்மதனிற் நோக்கத்திற்கு மாறுபடாத கரும்பும், மதன கலைபற்றிக் கூறும் காமச்சுவை கனிந்த அமிர்தமும்ஆவாள். விரும்பத்தக்க பெருஞ்செல்வமாகிய புகழ்வாய்ந்த **திருத்தணி**(திருத்து+அணி கலன்கள்) என்னும் நல்ல சுனையில், இரவு நேரத்துக் கருங்குவளை மலராகிய வீட்டில் வளரும் அழகியவண்டாவாள்.கொன்றைமரத்தின் பருத்த கொன்றைக்காய்போல் நீண்டகரிய கூந்தல் சுமையுடையவள்;வளைந்த நெற்றியானது வளைந்த வில்போன்ற தனது அழகினால் **விற்கோலத்தையும்** ;காமவிடங்காட்டும் தன் விழிகளால்**ஆலங்காட்டினையும்**;வளமான எள்ளின்பூஒத்த அழகுடைய மூக்கினால் அந்தப் **பூவணத்தையும்**;புகழத்தக்க வெண்மையான முல்லைப் பற்களுடைய வாயினால் **முல்லைவாயிலையும்**;பொருந்திய சிறு கழுத்தினால் **வஞ்சைக் களத்தையும்**;அழகிய முலைகள் வல் என்ற சூதாடு கருவி போன்றமையால் **வல்லத்தையும்**;பாலும் தேனும் தம்முள் கூடல் ஒத்தஇன்சொல்லால் **கூடலையும்**;இவ்வுலகில் வஞ்சிக்கொடி ஒத்த இடையால் **வஞ்சியையும்**;அழகிய சிறிய ஆலிலை வயிற்றால் **குற்றாலத்தையும்**; மன்மதனின் அருவத் தன்மையையுடைய இடுப்பாகிய **வஞ்சி**க்கொடியில் கட்டிய மணிகள் கோக்கப்பெற்ற காஞ்சி என்ற எண்மணிக்கோவையால் **காஞ்சியையும்**; மயில் ஒத்த சிறந்த அழகினால் **மாயூரத்தையும்**;ஆதிசேடனின் அகன்ற படம் போன்ற அல்குலால் **நாகர்கோயிலையும்**; கஞ்சன் ஆகிய நான்முகன் ஊர்ந்து செல்லும் அன்னம்

போன்ற நடையால் **கஞ்சனூரையும்** தன்பால் கொண்டவள்.

விளக்கம்: மடந்தையின் வடிவழகை வருணிக்கும் இதில் 13 ஊர்களின் பெயர்கள் பொருத்தமுற ஆளப்பெற்றுள்ள அழகு காண்க.

அவை□திருத்தணி,திருவிற்கோலம்,திருஆலங்காடு,திருப்பூவணம், திருமுல்லைவாயில்,திருவஞ்சைக்களம்,திருவல்லம்,கூடல், வஞ்சி,திருக்குற்றாலம், காஞ்சி,நாகர் கோயில்,கஞ்சனூர் என்பன.

பரத்தையைத் தும்பி–வண்டு–எனல்:''நறுந்தாது உண்டு நயன்இல் காலை
வறும்பூ துறக்கும் வண்டு போல்குலம்'' –மணிமேகலை.

பாலொடு தேன் கூடலாள்: ''பாலொடு தேன் கலந்தற்றே'' –திருக்குறள்.

இலக்கணக் குறிப்பு: கரும்பு, அமிர்தம்,தும்பி–உருவகங்கள்.முல்லை வாய் –வாய்– முதலாகுபெயர்.வல்லம்–ஊர்ப்பெயர்.அம்வல்–இலக்கணப்போலி.

கண்ணி 255–263.(சேடியினை– உவந்திருந்தாள்)(மடந்தை,தோழியிடம் தன்கனவு கூறல், தோழி விடைகூறல்

குறிப்புரை: பஞ்சம்= ஓய்வெடுக்கும்–களைப்பாறும்.பாயல்=படுக்கை. எஞ்சல்இலா= அருளுவதில் குறைவற்ற. கதம்பமலர்=கடம்பமலர்.துன்றுநீர் ஆர்= நெருங்கிவந்த தாங்கள் யார்.என்பிறப்பு ஆர் நீர்=நான்பிறந்தது மிக்கநீரில்_ சரவணத்தில்.எந்த ஊர் நாடு=எந்த ஊரினர் எந்த நாட்டினர். நல்லுறவே நாடு= நன்மையமைந்த உன் உறவே என் நாடுதல்.பேர்=புகழ். மாதேவு+ஆ= மகா தேவனா.மாதே+வா=பெண்ணே என் அருகில் வா.வானவா+ சம்போ+ கந்தா=தேவனே சிவனே கந்தா. சம்போகம்+தா =உன் கலவியினைத் தா.

பொழிப்புரை: நான் இரவில் ஓய்வெடுக்கும் மலர்ப்படுக்கையில் படுத்து உறங்கும் போது கனவில்,பகைவர் அஞ்சும் வேல் ஏந்திய ஆறுமுகப்பெருமான்,அருள் வழங்குவதில் குறையாத செங்கைகளுடன் கனத்த கடம்பமலர் மாலை சூடிப் பெருமை பொருந்தஅதில் வந்தார்.அவரை,''குற்றமற்று நெருங்கி வந்த நீர் ஆர்''என்றேன்.அவர் என்னுடைய தந்தை யாகிய சிவன் முடியில்உள்ளது ஆர்–ஆத்திப்பூ என்றார்.''நீர்யார்''என்றேன்.''நான்பிறந்தது சரவணப்பொய்கையின் மிக்க நீரில்'' என்றார்.''நீர் எந்த ஊர் எந்த நாடு'' என்றேன்.அவர் ''நல்லுறவுகொள்ளுதலே நான் நாடுதல்– விரும்புதல்'' என்றார்.''புகழ்வாய்ந்த மாதேவு ஆ– மாதேவன்தானே–'' என்றேன்.அவர் மாதே+வா=''மாதே+ அருகில்வா'' என்றார். நான்,''வானவா சம்போ கந்தா''=தேவனே,சிவனே கந்தனே என்றேன்.அந்த ஆறுமுகனும்,''ஆ! எனக்கு உன் சம்போகம் இன்று தா''= உன்கலவியினை இன்று தா என்றார்.அப்போது ,''வெல்லப்பாகு ஒத்த இந்த இன்சொல்லால் நான் கண்விழித்தேன். இதனை நீ நம்பி இதற்குரிய பலனைக்கூறு '' என்றாள். தோழி,'' வெற்றிபொருந்திய மயில் மலையில் எழுந்தருளியுள்ள புகழ்ச்சிக்குரிய அவ்வள்ளல் உன்னை ஆதரிக்க வந்தான் என்று நினைக்கிறேன்''என்று அவள் கூற ,அதுகேட்டு மகிழ்ந்திருந்தாள்.

விளக்கம்: இப்பகுதியில்ஆர், நீர், நாடு,மாதேவா,சம்போகந்தா என்பன மடித்து வந்து வேறுபொருள் தந்தமை காண்க.''ஆழமான உள்ளுணர்வுவழிப்பட்ட நினைவின் வடிகாலாகக் கனவு அமையும்'' என்பார் சிக்மன்ட்பிராய்டு என்ற உளவியல் அறிஞர். இவ்வகையில் இவளது ஆழமான உள்ளுணர்வின் வடிகாலாக–கனவு வாய்த்தது என்க. கண்ணி 257–261 கனவுச் செய்திகள் உள்ளன.

இலக்கணக் குறிப்பு: மாதேவா,சம்போகந்தா–பிரிமொழிச் சிலேடைகள்

கண்ணி 263–272. (கள்ளமலர்.....நத்தினாள்)(மடந்தைமுருகனைக் கண்டு காமுறல்,தாய் முருகனை வினாதல்

குறிப்புரை: கள்அம் மலர்=தேனும் அழகும் கொண்ட மலர்.கோலச்சயந்தனம்=அழகிய தேர்.புயத்துக்கா=தோள் தழுவ.அணைந்து=அங்குவந்து.அணிஆர் இருமனை=அழகு பொருந்திய இருமனைவியர். மதுகை வளை=வெற்றிச்சூழல்.மேகலை= இடுப்பில் மாதர் அணியும் ஏழுகோவை மணிவடம். மான்தோல் கொண்ட பூணூல். மென்துகில்=விருதுக் கொடி.

பொழிப்புரை: தேனுடன் அழகும் உள்ள மலர் மாலையுடையவன் ஆகிய மயில் மலையான் அவ்வழியே அழகிய தேர் ஏறி வந்தான்.இம்மடந்தை இருகைகூப்பி வணங்கினாள். காமப்பித்து ஏறி யாதொன்றும் செய்வதறியாது மனமுருகினாள். தென்றல் தேருடைய மன்மதனின்கரும்பு வில்லால் எய்யப் பெற்ற மலரம்புகள்பட்டு உள்ளமும் உடலும் மெலிந்தாள். முன்நாளில் தான்கண்ட நல்ல கனவினை எண்ணி அது கைகூடாமையால் துன்புற்றாள். வருத்தம் மேன்மேல் மிக உடல் மெலிய,புகழ்வாய்ந்த கைவளையல் கழலப் பெற்றாள். கந்தனாகிய நிமலனின்–அருள்தரு ஆறுமுகப்பெருமானின் திருத்தோள் தழுவ ஏங்கினாள்.அச் செவ்வேள்,தேரினைச் செலுத்திப் பறப்பட்டான். அங்குத் தாய்வந்து சேர்ந்து முருகன்தோள் அணைய நிற்கும் தன் இளமகளின் நிலைமையறிந்து முருகனை நோக்கி,'' அழகு மிக்க இருமனைவியரையுடைய நீர் என் மகளையுமா விரும்பினீர்? உன்மேல் மிக்க காமம் கொண்ட இவளது கை வளையல்களைக் கவராமல் உம்மிடம் வெற்றி உண்டாகாதா?இவளது மேகலையைக் கவராமல் உமக்கு அழகு பொருந்தியமான்தோல் முடிச்சிட்ட பூணூல் அமையாதா? இம்மகளின் மென்மையான ஆடைகளைக் கவராமல் உமக்கு விருதுக் கொடித்துகில் வேறு கிடைக்காதா? இவளது வளையல்கள், மேகலை, துகில்கவரும் தொழில்செய்வோ இங்கு மிகவிரைந்து வந்தீர்? ''என்று கேட்டுவிட்டுக் கிளி மொழிபேசும் மகளுடன் அத்தாய் தனது வீட்டினை விரும்பி அடைந்தாள்.

விளக்கம்: காமமீக்கூர்ந்து முற்றிதால் இவள் தன் கைவளை கழல, மேகலை இழந்து,துகில் நெகிழ்ந்தாள் என்பது குறிப்பு.

இலக்கணக் குறிப்பு: புயத்துக்கா –ஆ–ஆக என்பதன் குறுக்கம்,விரும்பினிரோ, மேவாதோ, இன்றோ, அறியீரோ–ஓகாரங்கள் வினாப்பொருளன.ஆய–அ–பெயரெச்ச விகுதி.

கண்ணி 273 –298. அரிவை.(அன்னதிரு....அகற்றினான்.) (வயது 20–25)

கண்ணி 273– 280. (அன்னதிரு.....செம்முலையாள்) (அரிவை வடிவழகு)

குறிப்புரை: மன்னிவளர்= பொருந்தி வளரும்.சூதமரம்=மாமரம் களம்=நஞ்சு. கண்டம்= திருக்கழுத்து,சம்பு=சிவபெருமான்.களம்=கழுத்து.நாடு முகம்=விரும்பத்தக்க முகம்,பஞ்சமலர்ப் பாணத்துள் ஒன்று=மன்மதனது தாமரை,மா,முல்லை, குவளை அசோகு என்ற ஐவகை அம்புகளில் ஒன்றான தாமரை மலர்.ஆடி=கண்ணாடி.கபோலம்=கன்னம்.மாண் அத்தன்=மாண்பே வடிவானசிவபெருமான்.வேலை=கடல்.மால் அமுதம்=பெருமை மிக்க அமுதம். ஆலடியன்=கல்லால் நிழல்மேய சிவபிரான். முதிர்நாண்=வில்லின் வலிய நாணாக விளங்கிய ஆதிசேடன்.சிறு நகை=புன்னகை.அப்பு=தண்ணீர். அங்கம்=உடல் உறுப்பு– முலைகள். சின்னம்=அடையாளம்

பொழிப்புரை: அத்தகு அத்தெருவில் இருந்த சிறந்த அமுதம் ஆகிய அரிவை, புகழ்வாய்ந்த காஞ்சி ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் உள்ள மாமரத்தில் வளரும் மயிலாவாள்; நஞ்சினைக் கழுத்தில் பெற்ற சிவபெருமானின் திருவைந்தெழுத்தைக் கூறி நல்வாழ்வு பெறாத பாதகரின் உள்ளம் போன்று கரிய நீண்டகூந்தல் உடையவள்;சிவபெருமானின் கழுத்தில் உள்ள நஞ்சு ஒத்த கண்களுடையவள்;விரும்பத்தக்க முகம் மன்மதனது ஐவகை அம்புகளுள் ஒன்றான தாமரை ஒப்ப உடையவள்; கண்ணாடி என்று காணத்தக்க அழகிய கன்னங்கள் உடையவள்;மாண்பே வடிவான சிவபிரான், கடலில் எழுந்த நஞ்சினை உண்ட நாளில் தேவர்கள் இனிதுண்ட அமுதம் ஒத்த இன்சொல் பேசு கின்றவள்; கல்லால் நிழலில் வீற்றிருக்கும் பெருமான் முப்புரஅசுரர் கோட்டைகள் தூளாக வலிய ஆதிசேடன் ஆகிய நாணினால் மேருமலையாகிய வில்லினை வளைத்த போது செய்த புன்னகை ஒத்த புன்முறுவல் உடையவள்;கடல்நீரில் பிறக்கும் சங்குபோன்ற கழுத்தினள்;கச்சணிந்தமார்பில் பொன்போல் பொலியும் பசலை படர,திரண்டு விளங்கும் உறுப்புகளாகிய முலைகள் மன்மதனுக்குரிய அடையாளம் என்று கூறுமாறு பெற்றவள்ஆவாள்.

விளக்கம்: மாதேவன் அஞ்செழுத்து..... கருநீள் குழலாள்:

"பரன் அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர் நெஞ்சம் என்ன இருண்டது நீண்டவான்"

பெரிய புராணம்,305.

இலக்கணக் குறிப்பு: அமுதம்,தோகை –உருவகங்கள்.அஞ்செழுத்து,முப்புரம்– தொகைக்குறிப்புகள்

கண்ணி 280–286.(சேடியர்கள்....அறைந்திட்டாள்)(அரிவை செயலும் சேடியை வேண்டுதலும்)

குறிப்புரை: உன்னு=நினைக்கத்தக்க,வீங்கு விரை=மிக்கநறுமணம்.அந்தம்= அழகு.பாடு=துன்பம். கஞ்சமுகம்=தாமரை மலர் ஒத்தமுகம்.இவ்ஆறு= இவ்வழியே.

பொழிப்புரை: நினைக்கத்தக்க தோழியர் பலர் இருக்கத் தன் உயிர்த்தோழியை அழைத்து,அவளை உயரமான செய்குன்றின் அறையினுள்ளே நிறுத்தி,ஆவலுடன் அவளை நீராட்டி நறுமணம் மிக்க சந்தனத்தை அவளுக்குப் பூசி,தனது அணிகலன்கள் அனைத்தையும் மிக்க அழகுடையன என்று அவளுக்குப் பூட்டி, பசிய வளையல் அணிந்த அவளைத்தழுவி மனம் மகிழ்ந்து அவள் கையில் தாம்பூலம் தந்து அளவற்ற மகிழ்ச்சியுடன் வாழ்த்தி,மிக அருகில்போய், "வஞ்சிக்கொடி ஒத்தவளே!என் மனத்தில் தோன்றியுள்ள

காதலை,அதனால்நான் பஞ்சாகப் படும் துன்பத்தை, தாமரை மலர்ஒத்த ஆறுமுகங்கள் உடையவனிடம் கூறுக'' என்றாள்.மறுப்பு ஏதும் கூறாத அத்தோழி,அரிவையைப் பார்த்து ஆறுமுகப்பெருமான் ஆகிய மாயோன்மருகன் இந்த வழியில் பேருலா வருவான் என்றாள்.

இலக்கணக் குறிப்புகள்: பூசினாள்,அணிந்தாள், மகிழ்ந்தாள்,கொடுத்தாள், வாழ்த்தினாள்–முற்றெச்சங்கள்.

கண்ணி 286 294.(கொம்மைமுலை.....நீந்தினாள்)(இரவு முழுதும்அரிவையின் காமப்புலம்பல்)

குறிப்புரை: வேள்ஆசை=முருகனைக் காண வேண்டும் என்ற ஆசை.விண் அடைய= விண்என்று விம்ம.மறலி=எமன்.இந்நிறமோ=இந்தக் கருநிறமோ.பொருந்தினனோ= வந்தானோ.தென்றல் வேள்=தென்றலைத் தேராகக் கொண்ட மன்மதன்.வாளி=அம்பு. இட்டப் பூங்காற்று=விருப்பமான தென்றல்.இன்னனைய=இத்தகைய.ஆளும்=தன்மீது கையாளும். மெய்ப்புணை=உண்மையான தெப்பம்.இரவாம் ஏந்தல் கடல்=இரவாகிய பெருமை பொருந்திய கடல்.நீந்தினாள்=கடந்தாள்,

பொழிப்புரை: திரண்ட முலைகளையுடைய அரிவை அதுகேட்டு, முருகனைக் காணவேண்டும் என்ற காம ஆசையால் அவளது அல்குல் விரிவடைய,பருத்தமுலைகள் விண்என்று விம்ம,மயிர்க்கூச்சு மிக,அதுவரை கட்டுப்பட்டிருந்தகாம உணர்ச்சி,இரவு நேரம் வர எல்லை கடந்தது.அதனால்;''எமனது நிறம் இந்த இருள் நிறமோ? நிலையான எமன் என்உயிரைப் பருக இங்கு வந்தானோ? குன்றக்குடிப் பெருமான் என்னுடைய மனத்தில் குடிஇருக்கும் போது தென்றலைத் தேராகக் கொண்ட மன்மதனது வில்லம்பு என் உடம்பில் தைப்பதேன்? வளரும் நிலவின்ஒளி கூரிய அம்பாக என்னைச் சுட்டதேன்?விரும்பத்தக்க பொதிகைமலைத் தென்றல் என்உடம்பின் குருதியைக் குடித்து வருத்துவது ஏன்? தேவர்கட்கெல்லாம் அரசனாகிய முருகப்பெருமானிடம் போய்ச் சொல்லுங்கள் '' என்று தோழியிடம் கூறினாள்.இத்தகு துன்பத்தைத் தன்மீது ஆளும் முருகனது திருவடிகளையே உண்மையான தெப்பமாகக் கொண்டு,பெருமை பொருந்திய இரவுக் கடலைப் பன்முறை இகழ்ந்து அதைக் கடந்தாள்.

விளக்கம்: அல்குல் வேள்ஆசை இன்னும் விரிய....மயிர்க்கூச்சு ஓங்கி– காமமெய்ப்பாடு.

இலக்கணக் குறிப்பு: நிறமோ, பொருந்தினனோ– வினா ஓகாரங்கள்.எனோ– செய்யுள் விகாரம்.எவன் என்னும் வினா வினைக்குறிப்பு என் என்று விகாரப்பட்டது. இரவாம் கடல்–உருவகம்,இகழ்ந்து இகழ்ந்து–அடுக்குத் தொடர்.

கண்ணி 295–298(காலைஎழுந்து...அகற்றினான்)(இறைவனைவணங்கி ஆடிப்பாடுதல், தேர் அடுத்த தெருவுக்குச் செல்லுதல்)

குறிப்புரை: வேல் ஐயன்=வேல் ஏந்திய தலைவன்=முருகப்பெருமான்.அகற்றினான்= செலுத்தினான்.

பொழிப்புரை: காலை எழுந்து கடன்களை முடித்து,முருகனின்தோள் மாலையை விரும்பி,தெருவுக்குச் சென்று வேல் ஏந்திய முருகனது அழகிய திருத்தேரினைக்

கண்டதும்,''நாளை வருவான்'' என்று சொன்ன தோழியை நினைத்தாள்.பெருமானை வணங்கி.ஆடி,பாடி, தலைமைசான்ற அவனது திருவடித் தாமரைகளைத் தன்தலைக்கண் சூடி,வணக்கங்கள் சொல்லி, மிக்க விருப்புடன் அவனது தோளினை அணையச் சிந்தித்தாள். அப்போது பெருமான், அங்கிருந்து தேரினை மேற்செல்ல விடுத்தான்.

இலக்கணக் குறிப்பு: சேவித்தாள்,ஆடினாள்,பாடினாள் சூடினாள் சொல்லினாள்— முற்றெச்சங்கள்.

கண்ணி 298–332. தெரிவை .(நையும்இடை.....அகன்றான்) (வயது20–31)
கண்ணி 298 –305.(நையும் இடை.....மாஅடியாள்)(தெரிவையின் வடிவழகு)

குறிப்புரை: வளரும்= காமம் வளரும்.பங்கம் படைத்தது= குழைசேற்றில்பிறந்தது. சிகு=நாக்கு. நாரி=பெண்.அந்தி வண்ணன்=அந்திச் செவ்வான் நிறத்துச் சிவன்.ஓதி= கூந்தல். குளம்=நெற்றி.பொன்குமுதம்=அழகியசெங்குமுதம்.வருக்கை= பலாச்சுளை. ஆகம்=உடம்பு.தேர்த்தட்டு=தேரின்நடுவிடம்(கீழே ஒடுங்கி மேலே செல்லச் செல்ல அகலும் வடிவம்.)தந்திக்கை=யானையின் துதிக்கை.குறங்கு=தொடை. மட்டு=தேன்.முலை சேர்க= தோள் தழுவுக.

பொழிப்புரை: வருந்தும் இடையினையுடைய தெரிவைப் பருவத்துப் பெண் ஒருத்தி, சேற்றில் பிறந்தது என்று தாமரை மலரை ஒதுக்கிவிட்டு இங்கு வந்த திருமகளை ஒத்தவள்; நான்முகனது நாக்கினை விரும்பித் தங்கும் கலைமகள் என்றுசொல்லத்தக்க பெண்;அந்திச் செவ்வான் ஒத்த திருமேனியுடைய சிவபிரான் உண்ட நஞ்சினை ஒத்த கருங்கூந்தல் உடையவள்; இவனது நீண்ட சடையில் தங்கிய பிறை ஒத்த நெற்றியினள்; தாமரைமலர் ஒத்த இரு விழியுடையவள்;அழகிய செங்குமுத மலர் ஒத்த செவ்வாயினள்`; சிறந்த பலாச்சுளை ஒப்ப இனிய அழகிய சொற்களைப் பேசுகின்றவள்;தகுதி சான்ற கழுகு போன்ற கழுத்தினள்;அழகிய பொற்கலசம் என்னுமாறு மோகம் தரும் முலைகளை உடையவள்;உடம்பில், ஊர்ந்து செல்லும் எறும்பு ஒழுங்கினை ஒத்த உரோமக்கொடி உடையாள்;உடுக்கை சார்ந்தது ஒப்ப மென்மையான இடையுடையவள்;தேரின் நடுவிடம் ஒத்து விளங்கும் வடிவமுடைய அல்குல் உடையவள்; யானையின் துதிக்கை போலும் தொடையுடையவள்;தேன் வடியும் தாமரைமலர் ஒத்த அடிகளைஉடையவள்; தான் விரும்பும் பெருமானாகிய மயூரகிரியில் எழுந்தருளியுள்ள எப்பொருட்கும் தலைவனது திருத்தோள்கள் தனது பருத்த முலைகளைக் கூடுக என்ற கொள்கையுடையவள்.

இலக்கணக் குறிப்பு: நத்தி–நந்தி என்று வந்தது செய்யுள் விகாரம்.அந்தி வணன்– வணன்–இடைக்குறை.புண்டரிகம்,வருக்கை–முதலாகு பெயர்கள். சேர்க= வேண்டிக்கோடற் பொருளில் வந்த வியங்கோள் வினைமுற்று.

கண்ணி 306–322.(அம்மைமிகு.....சாற்றினாள்)(தெரிவையின் விரகவேண்டுதலும் அது மாறத் தோழி ஒருத்தி யாழ் இசைத்தலும்)

குறிப்புரை: அம்மை=அழகு. வன்னி=கிளி. கன்னல் இளவேள்=கரும்புவில் ஏந்திய இளைய மன்மதன். மாதவன்=முருகப்பெருமான். காதலுறும்=தன்மேல் அன்புடைய. கூடு= உடம்பு. மாடு= ஏழாம் வேற்றுமை உருபு. படும்=தோன்றிய. பால்நிலா=தூய வெண்ணிலா. தோடகம்= மிக்க இதழ்கள் கொண்ட தாமரை. வான்காழி=மேலான சீர்காழி. சிவபாதமனப் பண்புடையார்= சிவபாத இருதயர். தேசு=திருவருள் ஒளி. அம்பு அனைய கண்ணாள்=அம்பு ஒத்த கண்களையுடைய அருள்தரு திருநிலை நாயகியம்மை. முத்து விதானம்=முத்துப் பந்தர். சுருதி வனம்=திருமறைக் காடு. ஏடகத்து=பனைமரத்தில். அங்கம்=எலும்பு.

பொழிப்புரை: அழகு மிக்க தனது கிளியை மயில்மலையானிடம் தூதனுப்பி விட்டுக் கரும்பு வில்லுடைய இளமையான மன்மதனின் அம்புகள் தன்மேல் பாய, பெருமை பொருந்திய அந்திநேரம்வர மனம்புழுங்கிப் பெருமூச்சு விட்டு,முருகனை நினைந்து மனம் பதைத்து, தன்அன்புத் தோழியரைநோக்கி,''சிறியேனாகிய என்உடம்பு படும் துன்பத்தை ஆற்றிக் குறை தவிர்ப்பவர்யார்?என்னிடம் மேன்மேல் வளரும் காம நோய்க்குரியமன்மதனை விரட்டுவார் யார்?'' என்றாள். தூய வெண்ணிலாப் போலும் முகமுடைய தோழியருள் மான் ஒத்த பண்புடைய ஒருத்தி இசை திகழும் யாழினை எடுத்து,அன்பு இல்லாதார் நாடுதற்கு அரிய வேலவன்,இவ்வுலகில் தாமரைகள் நிலைபெற்ற சிறந்த பொய்கைகளையுடைய மேலான சீர்காழி நகரில், அனைவரும் புகழும் பண்பராகிய சிவபாத இருதயர் துன்புறும் நாடு செழிக்கச் சிவன்அருளை வேண்ட,அவரது குற்றமற்ற மனம் மகிழ அவர்க்கு ஒளி மிகு திருஞானசம்பந்தராக முருகன் தோன்றியருளிய தன்மையையும்,திருத்தோணிபுரம் ஆகிய சீர்காழியில் அம்பினை ஒத்த கண்களையுடைய அன்னையாகிய அருள்தரு திருநிலைநாயகியம்மை அருளிய முலைப்பாலினை உலகம் போற்றப்பருகியதும், திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றதும், தக்கவாறுமுத்துக்குடை,முத்துச் சின்னம், முத்துச் சிவிகை என்பனவற்றைத் திருநெல்வாயில் அரத்துதுறைப்பெருமான் வழங்க, சிவிகை ஊர்ந்ததும்,திருப்பாச்சில் ஆச்சிராமத்தில் கொல்லி மழவனின் மகளது முயலகன் நோய் தீர்த்ததும்,திருப்பட்டீச்சரத்தில் இறைவன் முத்துப் பந்தர் தரப்பெற்றதும், இயலிசைப்பதிகம் கொண்டு ஏத்தித் திருவீழிமிழலை விமலனிடம் தோழமைகாரணமாக வாசியில்லாக்காசு பெற்றதும்,திருமறைக்காட்டில் மறைக்கதவம் அடைக்கப் பாடியதும், கூன் பாண்டியனது மிக்க சுரநோய் நீக்கியதும்,பச்சைப்பதிக ஏட்டினை நெருப்பில் இட்டு அதனை வேகாது எடுத்ததும்,தமது பதிகம் தீட்டிய ஏட்டினை வைகை வெள்ளத்தில் இட்டு அதனை எதிர்த்துச்செல்லச் செய்த பெருமையும்,கொடிய பகை கொண்ட சமணர்களைக் கூரிய கழுவில் ஏற்றியதும், திருக் கொள்ளம்புதூரில் தமது பதிகத்தால் ஓடம் செலுத்தியதும், அறிவற்றவனாகிய புத்தநந்தியின் தலையில் இடியிறங்கச் செய்ததும், திருவோத்தூரில் ஆண்பனையில் பனம்பழங்கள் பழுக்கச் செய்ததும், மயிலைச் சிவநேசர் மகள் பூம்பாவையின் எலும்பை அழகிய பெண்ணாக்கியதும், திருநல்லூர்ப் பெருமணத்தில்தூயவொளியில் கலந்ததும் ஆகியவற்றைப் பொருத்தமான இசையில் பாடினாள்.

விளக்கம்: பிற்காலக்கவிஞர் சிலர் திருஞானசம்பந்தரை முருகப்பெருமானாகவே கூறி மகிழ்ந்த பிழை ,முன்னும் இங்கும் ஏறியுள்ளது. இச்செயல் திருஞானசம்பந்தர்க்கு ஏற்றம் தரக் கருதி,அருள்தரு முருகப் பெருமானைத் தாழ்த்திக் கூறிய செயலாகும்.

காலக்கோளாறால் அன்று வந்தேறிய இது பற்றிய சைவமெய்ப்பொருள் கருத்தினை,கண்ணி 59 இன் விளக்கத்தில் காண்க.

கண்ணி 322 – 332.(துன்னும்.....உரைத்தாள்)(தெரிவை காலையில் முருகனைவணங்கி வேண்டுதல், தோழிமுருகனிடம் பரிந்துரைத்தல்

குறிப்புரை: மன்னும்=அதுவரை நிலைத்திருந்த.வான் ஒளியான்= மேலான ஞாயிறு ஒல்லை=விரைந்து.வேள் யானை அன்ன= மன்மதனின் யானைஒத்த(இருள்.) விரை= நறுமணம்.வாள்கணை=ஒளிபொருந்திய அம்பு–மன்மதனின் அம்பாகிய தாமரை. காகளம்= குயில்.வித்தை=வேலைப்பாடு.மால் மகனுக்கு ஏமம் உறு காலம்=திருமாலின் மகனாகிய மன்மதனுக்கு இன்பமான அந்திநேரம்.நாமம்=புகழ்.வாமம்உறக்காண=முலைகளில்பொருந்திக் காண .சொல்படை=புகழும்வேற்படை.வள்ளி தாய் மான்=வள்ளிக்குத் தாயாகிய மான்.

பொழிப்புரை: அதுவரை நிலைத்திருந்த இரவுப்பொழுது கழிய மேலான ஒளியுடைய ஞாயிறு விரைந்து எழுந்தான்,பலவகை இசைக்கருவிகள் முழங்கக் குற்றமற்ற முருகப்பிரான் விரைந்து வந்து சேர்ந்தான் என்று அழகு மிக்க கிளி கூற,மன்மதனின் யானையாகிய இருள் ஒத்ததும் நறுமணம் மிக்கதுமாகிய கூந்தலும், அவனது கணையாகிய தாமரை மலர் ஒத்த முகமும், அவனது வளைந்த கரும்பு வில்ஒத்த புருவமும்,அவனது முரசு ஆகியகடல்ஒத்த கண்ணும்,அவனது கூவும் குயில் ஒத்தஇன்சொல்லும்,அவனது வேலைப்பாடு மிக்க அழகிய மகுடம் ஒத்த முலையும் கொண்ட தெரிவை, திருமால் மகனாகிய மன்மதனுக்கு இன்பம் மிக்க நேரமாகிய அந்திப் பொழுது விரைந்து கழிவதுபோல் விரைந்து சென்றாள்.புகழ் வாய்ந்த வேலன் திருவடியில் விழுந்து வணங்கினாள்.''சேந்தா! என் ஆவலை–காமத்தை நீ தீர்த்தருள்க''என்று வேண்டினாள். அணிகலன் அணிந்த அவளது இச் சொல் கேட்ட தோழி ஒருத்தி முருகனை நோக்கி ''மயில்மலை வாழ் சோதியே!வல்லவனே! உனது மயில் மலை நல்லதா எம் தலைவியின் அழகிய முலை நல்லதா என்று இம்முலையில் பொருந்திக்காண வா!புகழ் பூத்த வேற்படையோ எம் தலைவியின்அழகிய விழியோ நன்று என்பதைக்கீர்த்தி வாய்ந்த வேற்படை யுடையவனே கூறு.குறிஞ்சிக்குரியவனே! வள்ளியின் தாயாகிய மானின் விழியோ இத்தெரிவையின் மருண்ட விழியோ நன்று என்று தெள்ளு தமிழ்த்தலைவனே கூறு'' என்று கேட்டாள். தலைவனாகிய முருகப்பெருமான் ஒன்றும் பேசாது தன்தேருடன் அவ்விடம் விட்டு நீங்கினான்.

இலக்கணக் குறிப்பு: வேள் யானை–இருள்–உருவகம்.மலையோ,முலையோ, படையோ,விழியோ, விழியோ–ஓகாரங்கள் வினாப் பொருளன.

கண்ணி 332–351 பேரிளம் பெண்.(பின்ஓர் வனிதை....உலா)(வயது 32 –40)

கண்ணி 332–342.(பின்ஓர் வனிதை.....அடியாள்)(பேரிளம்பெண்ணின் வடிவழகு)

குறிப்புரை: காமன் தவத்தால் பூதலத்துக் கடிதின் அடைந்ததோர் வனிதை மாமயில்திரு பேரிளம்பெண்.=மன்மதனது தவத்தினால் இந்நிலவுலகை விரைந்து வந்தடைந்த வயதில் மூத்த அழகிய மயில் ஒத்த மேன்மையுடையவள்பேரிளம்பெண் ஆவாள். வான்அழகு=பேரழகு.பெட்பினாள்= நடைமுறையுடையவள், நீலக்கணை= கருங்குவளை

மலர்.மற்றவற்றால்=தாமரை ,மா, முல்லை,அசோகு ஆகியவற்றால். செயல்=செயற்பாடுகள். சோரும்=சோர்வடைந்துவிடும் . தோடுஅலர்=இதழ்களையுடையமலர். சுரியல்=சுருண்ட கூந்தல். எண் ஒன்பான் சாற்றும் இசை=எழுபத்திரண்டு வகையாகக் கூறப்பெறும் இசை. ஆற்ற=மிகுதியாக. தாலம்=பூமி. எதிர்த்தோர்=மாறுபட்டு மிகஇறுகத் தழுவியவர். திசை எட்டுச் சிலம்பு=எண்திசை மலைகள். காஞ்சீபுரத்தை=ஆடைமேல் இடையில் அணியும் எண்கோவைமணியாலான காஞ்சி என்னும் அணியின் உடலை. ஆலவட்டம்=விசிறி.

பொழிப்புரை:மன்மதனது தவத்தினால் இந்நிலவுலகை விரைந்துவந்தடைந்த வயதில் மூத்த மயில் ஒத்த மேன்மையுடையவள் பேரிளம்பெண். இவள் காமநூல்கற்று அதன்பயனைச் செயலில் அறிந்தவள்;மேலான அழகிய இளம்பெண் ஒத்தஆசை வழிப்பட்ட நடைமுறை உடையவள்; மன்மதனின் ஐங்கணைகளில் கருங்குவளை மலரினால் விளையும் விளைவைத்தவிர,பிறமலர்களின் விளைவை நன்கு அறிந்த அழகி; மிகுதியான மலர்களைத் தலையில் சூடினால் அச்சுமை தாங்காது தன் இடை சோர்ந்துவிடும் என்று இதழ்கள்மிக்க மலர்களைச் சூடாத சுருண்டகூந்தல் உடையவள்; மன்மதனையும் எமனையும் ஏவிப் பணி கொள்ளும் கூர்விழியினள்; எழுபத்திரண்டு வகை இசையினையும் வெல்லும் தண்ணிய சொல்லினள்;தனது மிக்க உடல் பாரத்தைத் தனது மிகமென்மையான இடை தாங்குமோ என்றறியச் சாய்துள்ளனவோ, அன்றி இடை தாங்காது என்றறிந்து அங்கிருந்து பூமியைக் குனிந்து பார்க்கின்றனவோ, அல்லது கலவிக்காலத்தில் தம்மை எதிர்த்தவர்களை எல்லாம் தாக்கி அலுத்தனவோ,அல்லது ''மூர்க்கரொடு மோதாதே'' என்ற பழமொழியினைக் கேளாமையால் துன்பமுற்றுப் பின்பு தலைகுனிந்து அப்பழமொழிப் பொருளை விளக்குகின்றனவோ, அல்லாமல் எண்திசை மலைகளையும் வெல்லும் ஆற்றல் தனக்கு உள்ளதாஎன்று அறிவதற்காகக் காஞ்சி என்னும் இடுப்பணியின்உடலை முட்டினவோ என்னுமாறுள்ள முலைகளையுடையவள்;வெட்டவெளியானநுண்ணிய இடையுடையவள்; விசிறிபோல் விரிந்த அல்குலாள்;அனிச்சமலரொத்த அடிகளையுடையவள்.

விளக்கம்: மன்மதனின் ஐவகை மலர்களின் செயல்கள்:தாமரை ஆழமாக நினைக்கச் செய்யும்,மாம்பூ பசலை யூட்டும் அசோகம் தம்பிக்கச் செய்யும்,முல்லை பைத்தியமாக்கும்,நீல மலர்அல்லது கருகுவளை மலர் கொல்லும் குணமுடையது .இதனை

''நினைக்கும் அரவிந்தம் நீள்பசலை மாம்பூ
அனைத்துணவும் நீக்கும்அ சோகம்–வனத்திலுறும்
முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம்
கொல்லுமதன் அம்பின் குணம்''—இரத்தினச் சுருக்கம்.ஞானப்பேழை.1.பக்117.

எழுபத்திரண்டு இசை:கனகாங்கி முதல் சலநாட ஈறான சுத்தமத்திமம் 36+ சாலகம் முதல் ரசிகப்பிரியாஈறான பிரதிமத்தியமம் 36 =72. –ஞானப்பேழை.2.பக் 145.

இலக்கணக் குறிப்பு: எண்ஒன்பான் இசை–தொகைக்குறிப்பு.''ஆற்ற இடை..... முலையினாள்–நான்கு தற்குறிப்பேற்ற அணிகள்

கண்ணி 342–351.(வேல்முதலை.....உலா).(பேரிளம்பெண்ணின் பக்திமையும், அவள் முருகனின்தோள்மாலை பெறுதலும்)

குறிப்புரை: வேல்முதல் =வேலேந்திய முதற்பொருள்–முருகப்பெருமான். கடிதின்= விரைந்து. வள்அயில்=கூர்மையான வேல் அம் மான் சேய்=அழகியமான் ஆகிய உமையம்மைக்கு மகன். சூர்=சூரன்.தார்=மார்பில்தொங்கும்மாலை.

பொழிப்புரை: முதற்பொருளாகிய முருகப்பெருமான் திருமுன் காலை,நண்பகல், மாலை ஆகிய முப்போதும் விரைந்து சென்றடைந்து வணங்கும் வேலையுடையவள்; விமலனாகிய அவனது திருவடிகளைப் போற்றும் திருவண்ணாமலை அருணகிரியாரின் பண்ணொடு பொருந்திய திருப்புகழை மிகப்பாடுவாள்; தான்வளர்க்கும் வள்ளி என்னும் பெண்கிளியை, வள்ளி மணாளனாகிய முருகனது வளமான புகழைப் பேசு என்று கூற அதுஅவ்வாறே தலைவன் புகழைக் கூறிக்கொண்டிருக்கும்போது, அழகிய மான் ஆகிய உமையம்மையின் மகனானஅருள்தரு சண்முகநாதப் பெருமான் தேர்ஏறிவீதியில் வர, பேரிளம்பெண் காதலுடன் அவன்திருமுன் சென்று கைகூப்பி வணங்கி,அவன் திருப்புகழைச் சொல்லி வரும் கூட்டத்துடன் தேர்நிலைக்குச் சென்று,இறைவனாகிய, வல்லமை பொருந்திய முருகப்பெருமானின் திருவடிகளை வணங்கியும்,சொல்லுதற்கு அரிய அவனது வளர்பெருமைகளைப் பேசியும் அவ்விறைவனது தோள்மாலை பெற்று மற்ற யாவரினும் தான் பெரியள்ஆயினாள்.இவட்குஅருளிய இவ்வகையால் தன்னுடைய அடியவர்களைச் சாரும் இறைவனும்,இவ்வுலகுக்கு இறைவனும், அண்டத்தவர்க்கெல்லாம் தலைவனாகிய இறைவனும்,மயில் மலையில்எழுந்தருளியுள்ள இறைவனும் ஆகிய அருள்தரு சண்முகநாதப் பெருமான் உலா வந்தான்.

வாழி

பொழிப்புரை: குன்றக்குடியில் உள்ள மயில் மலை, அதில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருவடிகள்,அவனடியார்,அவனதுசேவற் கொடியும்,வேலும்,அழகிய மயிலும்,அருள்புரிய அவனுடன் எழுந்தருளும் வள்ளிநாச்சியாரும் தெய்வயானையம்மையும்எக்காலமும் நலமுறச்சிறந்து வாழ்க.

விளக்கம்: "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்".எனவே உயர்ந்தோரை நாம் வாழ்த்துவது நம்நல்வாழ்வின் பொருட்டேயாகும், இது உளவியல் முடிபும் ஆகும்.

திருச்சிற்றம்பலம்

****